விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 மாசி 09 சனிக்கிழமை (21.02.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 064

ராம்கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்,உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

# கைதிகளின் விடுதலையை ஆராய விசேட குழு நியமனம்!



## நீதியமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 182 தமிழ்க் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என நாடாளுமன்றில் தெரிவித்த நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, இவர்களது குற்றச்செயல்கள் தொடர்பில் ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தக்குழுவின் தீர்மானத்திற்கமைய குற்றம் நிரூபிக்கப்படாத கைதிகள் இன்னும் 3 வாரங்களுக்குள் விடுவிக்கப்படுவர் என்றும் உறுதியளித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத் தளபதி நியமனம்



(கொழும்பு)

புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் கிரிசாந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த நியமனத்தை நேற்று முற்பகல் வழங்கியுள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச தராதரத்தில் உள்ளக போர்க்குற்ற விசாரணை
### ஜப்பான் வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் இறுதிப்போரில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்த உள்ளக விசாரணைகள் சர்வதேச தராதரத்துடன் நம்பகரமானதாக அமையவேண்டும் என இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் நொபுஹிடோ ஹொபோ தெரிவித்தார்.

இலங்கையில் நின்று நிலைக்கின்ற சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அது இலங்கைக்குரித்தான வழிமுறையில் அடையப்பட வேண்டியது அவசியமாகும் எனத் தெரிவித்த ஜப்பானித் தூதுவர், இந்த சிக்கலான நடைமுறைக்கு நீண்ட காலம் எடுக்கக்கூடும் எனச் சுட்டிக்காட்டினார்.

ஜப்பானியத் தூதுவரின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டையடுத்து கருத்து வெளியிட்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னதாக இடம்பெற்ற ஊடகவியலாளர் 24ஆம் பக்கம் பார்க்க....




யாழ்.பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனையின் கீழ் பணியாற்றும் சமூக சுகாதாரத் தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனத்தை வழங்குமாறுகோரி வடமாகாண ஆளுநர் அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

## ஜெனிவாவுக்கு மங்கள செல்வார்

(கொழும்பு)

ஜெனிவாவில் மார்ச் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் கலந்துகொள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர செல்லவுள்ளார் என வெளி விவகார அமைச்சு நேற்று தெரிவித்துள்ளது.

உலகம் பூராகவும் உள்ள சுமார் 65 இற்கும் மேற்பட்ட வெளிவிவகார அமைச்சர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்ள 24ஆம் பக்கம் பார்க்க....


## முன்னாள் ஜனாதிபதிக்கு நீதிமன்ற அழைப்பாணை !



(கொழும்பு)

நாட்டுக்கு எதிரான சதிச்செயலில் ஈடுபட்டார் மற்றும் பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீற முற்பட்டமை என்ற குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உட்பட மேலும் 6 பேரை எதிர்வரும் மார்ச் மாதம் 31ஆம் திகதி நீதிமன்றத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

## பொதுத்தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்காது!
### பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

தேவை ஏற்பட்டால் முன்கூட்டியே பாராளுமன்றத் தேர்தல்களை நடத்தத் தயார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தேர்தல்களுக்கு ஆயத்தமான நிலையில் இருப்பதாகவும் அவர் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதி மைத்திரி அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் மார்ச் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமெரிக்கா செல்லவுள்ளார். அதனை அமைச்சரவை பேச்சாளரும் சுகாதார மற்றும்சுதேச வைத்தியத்துறை அமைச்சருமானராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (எ-11)

## ஐ.நா.அறிக்கையை வலியுறுத்தி பஸ் நிலையம் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

ஐ.நா அறிக்கையினை வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளியிடக்கோரியும் அரசியல் கைதிகளை நிபந்தனை இன்றி விடுதலை செய்யக் கோரியும் யாழ் நகரில் இன்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது .

இன்று காலை 10.00 மணிக்கு யாழ் பஸ்நிலையம் முன்பாக இவ் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரனின் ஏற்பாட்டில் நடைபெறும் இப் போராட்டத்திற்கு பல்வேறு மகளிர் அமைப்புக்களும் பொது அமைப்புக்களும் ஆதரவு தெரிவித்துள்ளன .

காணாமல்செய்யப்பட்டவர்களை வெளிக்கொணர கோரியும் அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்யக் கோரியுமே மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட 24ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணைகளுக்கு அரசு இடமளிக்க போவதில்லை
### அமைச்சர் ராஜித தெரிவிப்பு

(கொழும்பு)

இறுதிக்கட்டப் போரின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை தேவையில்லை.

உள்ளக விசாரணையே நடத்தப்படும்என்ற நிலைப்பாட்டில் இலங்கை அரசு உறுதியாகவுள்ளது என அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்றது.

அதில் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படுவது ஆறு மாதகாலத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐ.நா. விசாரணைக்குழு இலங்கைக்கு வர அரசு உடன்பட்டுள்ளதா என அமைச்சரவைப் பேச்சாளரிடம் ஊடகவியலாளர் ஒருவர் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை கையளிப்பதற்கு முகாம் அகற்ற தேவையில்லை

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் பாதுகாப்பு படையினர் கைப்பற்றியுள்ள தமிழ் மக்களின் காணிகளை அவர்களிடம் கையளிப்பதற்காக அங்குள்ள இராணுவ முகாம்களை அகற்றும் தேவையில்லை என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உண்மையில் பிரதேச மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக இராணுவ முகாம்களை அகற்றுவது அவசியமில்லை. இதனால், வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றுவதில்லை என்பதே அரசாங்கத்தின் கொள்கை.

கைப்பற்றியுள்ள சில நிலங்களை மீள கையளிக்க முடியும் என அண்மையில் வடக்கிற்கு விஜயம் செய்திருந்தபோது அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர் எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கம், இலங்கையை மீண்டும் பிளவுப்படுத்தி வேறுபடுத்தும் சூழ்ச்சியில் ஈடுபட்டுள்ளதாக விமல் வீரவன்ஸ உள்ளிட்டவர்கள் முன்வைத்து வரும் குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.


போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்து வெளிப்படையான உரிய விசாரணைகள் நடத்தப்படும் எனவும் சரியான உள்நாட்டு விசாரணைகளை நடத்தினால், வெளிநாடுகளில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டு வர முடியும் எனவும் ருவான் விஜேவர்தன மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

புத்தூர் வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் வித்தியாலயத்தின் முதல்வர் வே.ஏ.தவநாயகம் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வின முதன்மை விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ். சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார். (எ-11)

# யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்களின் போராட்டம் நிறுத்தப்பட்டது



(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் புகையிரத விபத்தில் படுகாயமடைந்த சம்பவத்தைக் கண்டிக்கும் வகையில் இந்துக் கல்லூரி மாணவர்கள் நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை தமது கல்லூரிக்கு முன்பாக நடத்தியிருந்த ஆர்ப்பாட்டத்தினை யாழ்.பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

யாழ்ப்பாணம், நீராவியடி பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக செல்லும் 1-ம் வீதியில் நேற்று முன்தினம் மாலை கொழும்பிலிருந்து காங்கேசன்துறை நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதியதில் கோப்பாய் பகுதியை சேர்ந்த மாணவன் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்காக தனது இல்ல அலங்கரிப்பை முடித்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் வீட்டுக்கு திரும்பும் போதே இவ்விபத்து இடம்பெற்றது. குறித்த புகையிரத கடவையில் பாதுகாப்பு பொறிமுறைகளை ஏற்படுத்துமாறு அப்பிரதேச மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை பல தடவைகள் கோரி வந்த போதிலும் இதுவரை அவற்றை அதிகாரிகள் செய்யவில்லை என அப்பகுதி மக்களால் குற்றம் சாட்டப்பட்டு பாதுகாப்பு பொறிமுறைகள் செய்யாமல் புகையிரதம் குறித்த பகுதியால் சேவையில் ஈடுபட அனுமதிக்க மாட்டோம் என கூறி அப்பகுதி மக்கள் புகையிரத பாதையில் மின் கம்பங்களை குறுக்காக போட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலி ஸார் தாம் உரிய அதிகாரிகளுடன் பேசி பாதுகாப்பு பொறிமுறைகளை ஏற்படுத்தி தருவதாக உறுதி அளித்ததையடுத்து,

மக்கள் போராட்டத்தை கைவிட்டு புகையிரத பாதையில் போடப்பட்ட மின்கம்பங்களையும் அகற்றினர். இதேவேளை பாதுகாப்பற்ற ரயில் கடவைக்கு பாதுகாப்பு வழங்கும்படி கோரி நேற்றைய தினம் மீண்டும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட இருந்தது.

விபத்து நடந்த இடத்தில் உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் ஆர்ப்பாட்டத்தைத் தடுத்து நிறுத்தினர். மேலும் குறித்த விபத்துச் சம்பவத்தினால் நேற்றைய தினம் நடைபெறவிருந்த யாழ்.இந்துக் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் தெரிவித்தார். (எ-4)

# அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை ஆழ்ந்த கவலையளிக்கின்றது

## தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜெனிவா அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை கவலையளிப்பதாக தமிழ் சிவில் சமூக அமையம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருவாறு,

இலங்கை தொடர்பான ஐ. நா. மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை அறிக்கையை வெளியிடும் திகதி ஆறு மாதங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ள தீர்மானம் எம்மை ஆழ்ந்த கவலைக்கு உட்படுத்தியுள்ளது. ஐ.நா மனித உரிமைப் பேரவையின் இத்தீர்மானம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையின் பெயரில் எடுக்கப்பட்டமை எமக்கு கூடுதல் வருத்தத்தைத் தருகின்றது. பாதிக்கப்பட்ட மக்கள் இத்தாமதத்தினை தேவையற்றதென்று கருதுகின்றனர்.ஷ

சர்வதேச வழிமுறையின் ஊடாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகள் யாவும் மூடப்பட்டு விட்டனவோ என்றும் எண்ணத் தலைப்படுகின்றனர். நாட்டுக்கு உட்பட்டு நீதி கிடைக்கப் பெற மாட்டாது என்பது அவர்கள் முடிவாக இருக்க, இந்தத் தாமதம் முழுமையாக பொறுப்புக்கூறலின் சாத்தியமற்ற தன்மையை பறைசாற்றுவதாக அவர்கள் அச்சம் கொள்கின்றனர்.

முழுத் தமிழ்ச் சமூகத்தின் ஏகோபித்த நிலைப்பாட்டடை உதாசீனம் செய்யும் வகை யல் அறிக்கையை தாமதப்படுத்தும் முடிவை ஐ.நா மனித உரிமைப் பேரவையும், ஐ. நா மனித உரிமை ஆணையாளரும், உறுப்பு நாடுகளும் எடுத்துள்ளனர் என்பதனை நாம் மிகுந்த ஏமாற்றத்தோடு சுட்டிக் காட்டுகின் றோம். இந்த அறிவிப்பானது செப்டெம்பர் 2008 இல் கிளிநொச்சியிலிருந்து மக்களின் எதிர்ப் புக்கு மத்தியில், போர் பிரதேசங்களிலிருந்து மக்களைக் காக்கும் கடமையை உதாசீனம் செய்து ஐ.நா வெளியேறிய சம்பவத்தை எமக்கு ஞாபகப்படுத்துகின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# விபத்தில் காயமடைந்த இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

விபத்தில் காயமடைந்த இளைஞன் சிகிச்சைப் பலனின்றி நேற்று முற்பகல் 9 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

கீரிமலை புதிய பழனியைச் சேர்ந்த இலங்கைநாயகம் மஜின்ராஜ் (வயது-26) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சுன்னாகத்திலிருந்து பண்டத்தரிப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் கடந்த 18 ஆம் திகதி விளான் சந்திக்கு அருகிலுள்ள வளைவில் மாலை 4.30 மணியளவில் விபத்தில் சிக்கியது.

வேகக்கட்டுப்பாட்டையிழந்த நிலையில் வீதியோரமாகயிருந்த மின்கம்பத்துடன் மோதிய அதேவேளை தகரத்தால் ஆனா வேலியிலும் மோதியது.அத்தோடு விபத்தில் சிக்கிய இளைஞர்கள் இருவரும் படுகாயமடைந்த நிலையில் வீதியில் விழுந்துள்ளனர்.

இந்நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இருவரில் மஜின்ராஜ் நேற்று முற்பகல் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை உயிரிழந்தவரின் நண்பனான கிருஷ்ணமூர்த்தி பிரசாத் (வயது-23) யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகின்றார்.

இந்த விபத்துக் குறித்து இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற அதே வேளை உயிரிழந்தவர் தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்திய சாலையின்திடீர்விசாரணை அதிகாரி நம சிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டிருந்தார். (ஏ-6)

31ஆம் நாள் இதய அஞ்சலி

அமரர் கணபதிப்பிள்ளை செல்லத்துரை



"ஊற்று" க்கு கீற்றாகி
உலர்ந்தவர்க்கு நீராகி
மண்ணிற்கு விதையாகி
மறைந்தாயோ "செல்லம்"
அண்ணா

(9572)

துயருறும் நண்பர் குழாம்,
வினோபா பாலர் பகல் இல்லம் வினோபா நகர் கச்சாய்.

வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

◆220இற்கு மேற்பட்ட நாடுகளுக்கான சேவை
◆3 வேலை நாட்களில் குறித்த முகவரியில் ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம் நெற்
விரைவு! பாதுகாப்பு! நம்பகத்தன்மை!
வடமாகாணத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்

இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதானவீதி, நெல்லியடி.
ஏ9 வீதி, கிளிநொச்சி (கொமர்ஷல் வங்கி முன்பாக)
இல. 50, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)
கடற்கரை வீதி, குருநகர். (தொடர்மாடி கட்டடம் முன்பாக)
பிரதான வீதி,சங்கானை. (வைத்திலிங்கம் கட்டடம் மேல்மாடி, ஆசைபிள்ளை நகைக்கடை முன்பாக)
பிரதான வீதி, பருத்தித்துறை.

WESTERN UNION MONEY TRANSFER

(8664)

271A. K.K.S. Road, Jaffna. T.P: 021 222 7835/ 077 7554528

திருமண தேவைகளுக்கான கார்

வாடகைக்கு விடப்படும்



புத்தம் புதிய Honda vazal
வெள்ளை நிறக் கார்
திருமண தேவைகளுக்கு
வாடகைக்கு
விடப்படும்.

தொடர்புகளுக்கு:-

0773747825, 0212228984

(C-222)

கண்ணீர் அஞ்சலி



கு.பற்குணராஜா

எமது மாநகர சபையில் கடமையாற்றி ஓய்வுபெற்றவரும் முன்னை நாள் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அவர்களின் துணைவருமாகிய கு.பற்குணராஜா அவர்களின்மறைவினால்துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றோம்.

ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மாநகர சபை யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தமிழரின் அமைதியான வாழ்க்கையே இந்திய - இலங்கை உறவை மேம்படுத்தும்

## த ஹிந்து ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**இந்திய- இலங்கை உறவுச் சங்கிலியின் மிக முக்கியமான இணைப்புக் கண்ணி இலங்கைத் தமிழர்கள். அவர்களுடைய அமைதியான வாழ்க்கைச் சூழல்தான் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் மேம்படுத்துமே தவிர இலங்கையின் எதிர்கால வளர்ச்சியும் தமிழர்களின் கைகோர்த்த பயணத்திலேயே இருக்கிறது என இந்தியாவிலிருந்து வெளிவரும் த ஹிந்து பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.**

முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் தமிழர்கள் விவகாரத்திற்கு என்ற ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அண்மையில் இந்தியப் பயணம் இரு நாடுகளுக்கு இடையிலான உறவை வலுப்படுத்தியிருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். மேலும், நம்முடைய உறவுப் பயணம் புதிய திசையில் கூடுதல் வேகத்தையும்கூடப் பெற்றிருக்கிறது என்றும் சொல்லலாம்.

புதிதாக ஜனாதிபதியாக பதவியேற்ற மைத்திரிபால சிறிசேன, தன்னுடைய முதல வெளிநாட் டுப் பயணத்துக்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தார. வழக்கமான சம்பிர தாய சந்திப்பாக அல்லாமல், 4 முக்கிய துறைகளில் பயனுள்ள வகையில் இரு நாடுகளுககும இடையில் ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவும் நடவடிக்கைகளை முன்னெடுத்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது, சீனத்துக்கு நெருக்கமாகச் சென்றுகொண்டிருந்த இலங்கையின் வெளியுறவுக் கொள்கையிலிருந்து கொஞ்சம் மாறுபட்ட, சமநிலை பேண முயற்சிக்கும் போக்காக நாம் இதைக் கருதலாம்.

இலங்கையின் தொழில், விவசாயம், சுற்றுலா போன்ற துறைகளுக்கு இந்தியாவின் பங்களிப்பு கடந்த காலங்களில் கணிசமாக இருந்திருக்கிறது. இப்போதும் பெருமளவில் உதவக்கூடிய நிலையிலேயே இருக்கிறது. இதையொட்டியே ஆக்கப் பணிக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவது தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையில் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது. கூடங்குளத்தில் அணுமின் நிலையம் நிறுவப்பட்டபோதும் அது செயற்பாட்டுக்கு வந்தபோதும் அதனால் இலங்கைக்குப் பாதிப்பு நேரிடும் என்று அச்சம் தெரிவித்தது மகிந்த ராஜபக்ஷ அரசு.

புதிய அரசோ அத்தகைய அணுசக்தியை ஆக்கப் பணிக்குப் பயன் படுத்துவதில் இலங்கைக்கும் உதவ வேண்டும் என்று இந்தியாவைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க மாறுதல்.

அணுசக்தி தொடர்பான அறிவையும் நிபுணத்துவத்தையும் பகிர்ந்து கொள்ளவும், அணுசக்தியை அமைதியான பணிகளுக்குப் பயன்படுத்த இலங்கையர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் இந்த ஒப்பந்தம் வழிசெய்கிறது.

மாலைதீவையும் உள்ளடக்கிய இராணுவ, பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்த இன்னொரு ஒப்பந்தம் வழிசெய்கிறது. இலங்கையின் தொழில்துறை, வேளாண் துறை தேவைகள் தொடர்பாகவும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இலங்கையுடன் கடல் மார்க்கமாகவும் ஆகாய மார்க்கமாகவும் போக்குவரத்தைப் பெருக்கவும் ஒப்பந்தம் கையெழுத்தாகியிருக்கிறது.

இரு நாடுகளின் கடலோடிகளுக்கு இடையிலான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமாகவும் மனிதாபிமான அடிப்படையிலும் தீர்வு காண இரு நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. இரு நாட்டு கடலோடிகள் மத்தியில் முன்பு முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடர முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் நல்ல விடயங்கள்.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாகவும் இரு நாட்டுத் தலைவர்களும் பேசியதாகத் தெரிகிறது. ஆனால், இதுகுறித்து அறிவிப்புகள் ஏதும் வெளியாகவில்லை. இந்திய - இலங்கை உறவுச் சங்கிலியின் மிக முக்கியமான - இணைப்புக் கண்ணி இலங்கைத் தமிழர்கள். அவர்களுடைய அமைதியான வாழ்கைச் சூழல்தான் இரு நாடுகளிடையேயான உறவை மேலும் மேம்படுத்தும். தவிர, இலங்கையின் எதிர்கால வளர்ச்சியும் தமிழர்களின் கைகோர்த்த பயணத்திலேயே இருக்கிறது. தமிழர்களுக்கு உரிய அதிகாரப் பகிர்வும் சமத்துவமான கண்ணிய வாழ்வும் உறுதிசெய்யப்பட, இந்தியா இந்த விவகாரம் தொடர்பாகத் தொடர்ந்து பேச வேண்டும் பிரதமர் மோடியின் அடுத்த மாத இலங்கைப் பயணத்தில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் ஏற்படும் வகையில், இந்திய வெளியுறவுத்துறை காரியமாற்ற வேண்டும என த ஹிந்து தனது ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவித்துள்ளது. (இ-5)

## நெல்லியடி சந்தைக்கு செல்லும் பொதுமக்கள் பெரும் அவதி!

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந் தைப் பகுதிக்குச் செல்வதற்கு பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாக வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். நெல்லியடி 750 இலக்க வீதியைக் கடப்பதற்கு பாதசாரிகள் கடவையைக் குறிப்பதற்கான குறியீடுகள் எதுவும் வீதியில் பொறிக்கப்படாததால் சந்தைக்குச் செல்வதற்கு பொதுமக்கள் வாகனங்கள் சென்று முடியும் வரை வீதியோரத்தில் காத்து நிற்க வேண்டியுள்ளதுடன் சில வேளைகளில் விபத்துக்களில் மாட்டிக் கொள்ளவும் நேரிடுகிறது.

இதுவரை மூன்று விபத்துக்கள் இடம் பெற்றுள் ளதுடன் விபத்தில் சிக்குண்டவர்கள் கடும் காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்தில் எடுத்து பாதசாரிகள் கடவையைக் குறிக்கும் குறியீட்டை வீதியில் பொறிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என சந்தை வியாபாரிகளும் பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை வீதியோ ரங்களிலும் சந்தையின் வாயிற் பகுதிகளிலும் வாக னங்கள் நிறுத்தப்படுவதால் சந்தையின் உட்பகுதிக்குச் செல்வதற்கு வியாரிகளும் பொதுமக்களும் பெரும் சிரமப்பட வேண்டியுள்ளதுடன் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகின்றது.

இது விடயத்திலும் உரிய அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-3-60)

### மெய்வல்லுநர் போட்டி இன்று

யாழ்.கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன் மைப் போட்டி இன்று பிற் பகல் 1.30 மணிக்கு கல் லூரி மைதானத்தில் அதிபர் பரஞ்சோதி செல்வ விநாயகம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் தம்பிராசா குருகுலராசா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக கொழும்பு கொட்டாஞ்சேனை கணபதி இந்து மகளிர் வித்தியாலய பிரதி அதிபரும் கல்லூரி பிரதி அதிபருமான திருமதி சாந்தி அருள்தாசன் கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

## அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி திறப்பு விழா நாளை

தியாகி அறக்கொடை நிறுவன நிதிப்பங்களிப்புடன் அமைக்கப்பட்ட எழிலூர் அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொழும்புத்துறை எழிலூர் சனசமூக நிலைய தலைவர் எவ்.எக்ஸ். மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாநகர சபை பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் லோகசிவம் , யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராஜா ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை எழிலூர் முன்பள்ளிக்கு உட்பட எழிலூர் சனசமூக நிலையம் புனரமைப்பு, நூல் நிலையம் மற்றும் நூல்கள், இரவு நேர கற்றல் வசதி என்பன தியாகி அறக்கொடை நிறுவன நிதிப் பங்களிப்புடன் செய்து கொடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## இராசி பலன்

21.02.2015

(மாசி 09, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.27 மணிக்கு

திருதியை முன்னிரவு 11.40 மணிக்கு,

உத்தரட்டாதி பின்னிரவு 2.09 மணவரை

இராகு காலம் 9.31 - 11.01 மணிவரை

சுபநேரம் 3.31 - 5.01 மணிவரை

வளவன்

**மேடம்:** கொடுக்கல் வாங்கல்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொழிலில் புதிய மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள், வெளியூர்ப் பயணங்கள் இடம்பெறலாம்.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு,புதிய பொருட் சேர்க்கையுண்டு,நண்பர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**மிதுனம்:** வருமானம் வரும் வழியை கண்டு கொள்வீர்கள்,தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்,உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கடகம்:** மங்கையரால் ஏற்பட்ட மனச்சஞ்சலங்கள் மாறும் புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய திட்டங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,உடல் நலம் சீராகும்

**சிம்மம்:** சில பிரச்சினைகளை கண்டும் காணாமல் இருப்பது நல்லது, வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி அவசியம், முயற்சி களில் தாமதம் ஏற்படலாம்.

**கன்னி:** நண்பர்களின் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள்,பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**துலாம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும்,தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பழைய பாக்கிகள் வசூலாகும் நாள்.

**விருச்சிகம்:** பொது வாழ்வில் புகழ் கூடும் நாள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் வெற்றி தரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**தனுசு:** பெற்றோர் மீது பிரியம் கூடும்,திட்டமிட்ட காரியங்களில் செய்து முடிப்பீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வாகன சுகமுண்டு.

**மகரம்:** விடா முயற்சிக்கு வெற்றி கிடைக்கும் நாள்,பிரபல்யமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், சகோதர வழி ஒத்துழைப்பால் பாகப்பிரிவினைகள் மாறும்.

**கும்பம்:** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்,குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்:** திடீர் பயணத்தால் திசை திருப்பங்கள் ஏற்படலாம்,எப்படி நடக்குமோவென நினைத்த காரியமொன்று நல்லபடியாக நடைபெறலாம்,கற்பனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 151

## மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

...மனதளவில் பலவீனமாக இருக்கும் ஒருவனே இந்த அள்விற்கு ஜோதிடத்தைச் சார்ந்திருப்பான்.

ஸ்வாமிஜி அப்படியென்றால் ஜோதிடத்தைப் பின்பற்றும் அனைவருமே பலவீனமான மனது உடையவர்களா?

இல்லை அப்படிச் சொல்ல முடியாது. ஆனால் பெரும்பாலனவர்கள் பலவீனமாக மனது உடையவர்கள் சாதரணமாக அறிவுக் கூர்மையுள்ளவர்கள் கூட சில சமயங்களில் முட்டாள் தனமாக நடந்து கொள்கிறார்கள். அவர்கள் என்னிடம் வந்து கேட்கிறார்கள். ஸ்வாமிஜி நான் இந்தக் கல்லை அணிந்தால் எனக்கு அதிஷ்டமாக இருக்குமா? நீங்கள் எப்படி ஒரு கல்லைச் சார்ந்து இருக்க முடியும்! நீங்கள் உயிருள்ள விழிப்புணர்வு; நீங்கள் கடவுளைத் தவிர வேறல்ல! என்னால் கற்பனை கூடச் செய்ய முடியவில்லை. நான் உங்களுக்கு இந்த முழு பிரபஞ்ச சக்தியையும் எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்ற அறிவியலைப் போதித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் கற்களைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.!

நீங்கள் ஸ்வாமிஜி யதீஸ்வரானந்தரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கக் கூடும். அவர் ஒரு சிறந்த மனிதர். ஞானமடைந்தவர் அவர் முதன் முதலாக வெளிநாட்டிற்குச் சென்ற பொழுது கிரஹங்களையே வழி நடத்தும் சக்தி நான்! அவை எப்படி என்னைக் கட்டுப்படுத்தும்?

அந்த மனிதரின் தைரியத்தைப் பாருங்கள். அந்த தைரியம் ஆழ்ந்து புரிந்து கொள்ளுதலில் இருந்து வருகிறது.

நீங்கள் கிரஹங்களையே கட்டுப்படுத்தக் கூடிய அறிவியலை நான் உங்களுக்குப் போதித்துக் கொண்டிருக்கிறேன்! நீங்கள் என் கிரஹங்கள் எங்க இருக்கின்றன. அவை எப்படி உங்களை பாதிக்கும் என்றெல்லாம் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? தியான அறிவியலை எடுத்துக் கொள்ளுங்கள். அதுவே போதுமானது. பிறகு எதுவுமே உங்களைத் தொட முடியாது.

ஆனால் அது எங்களுடைய மதிப்பீடு-அமைப்பில் ஒரு பகுதியாக ஆகிவிட்டதே ஸ்வாமிஜி.... மிகத்தெளிவாக இருங்கள்... எல்லா மதிப்பீடுகளுமே விழிப்புணர்விற்கு ஒரு மாற்றுதானே தவிர வேறல்ல.

நீங்கள் விழிப்புடன் இருந்தால் என்ன செய்கிறீர்கள் என்று தெரிந்து செய்தால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்வதற்கு மதிப்பீடுகள் தேவையில்லை. நீங்கள் எந்த விதமான விதிகளையும் பின்பற்ற வேண்டியதில்லை. விதிகள் உங்களைப் பின் தொடரும் எல்லா நற்பண்புகளும் ஒழுக்கமும் ஆன்மீகமும் உங்களிடம் நிகழும் நீங்கள் இயல்பாகவே ஆன்மீகத்தில் ஒரு உயர்ந்த நிலையில் மலர்வீர்கள்.

எப்படியோ நாம் விழிப்புண்ர்வு அல்லது ஆன்மீக உயர்வு போன்ற வார்த்தைகளைக் கேட்டாலே அது நமக்கல்ல என்றே எப்பொழுதும் நினைக்கிறோம். எந்த விதமான தியான முறையையோ விழிப்புணர்வை உயர்த்தும் சாத்தியமான வழிகளையோ முயற்சி கூடச் செய்யாமல் அது நமக்கல்ல என்ற முடிவுக்கு வந்து விடுகிறோம்.

அதனால் அதற்கு மாறாக ஒழுக்கம் மனச்சாட்சி மதிப்பீடுகள் என்று அழைக்கப்படும் பொய்யான விழிப்புணர்வை நாடிச் செல்கிறோம்.

ஆரம்ப நிலையில் மதிப்பீடுகள் நன்றாகத்தான் இருக்கின்றன. ஆனால் இறுதி நிலையாக அல்ல!

விவேகானந்தர் அழகாகச் சொல்கிறார் தேவாலயத்தில் பிறப்பது நல்லது தான் ஆனால்; அங்கயே இறப்பது அல்ல! நாம் முதலில் ஆன்மீகத்தில் இருப்பது மிகவும் கடினமானது. வித்தியாசமானது என்ற எண்ணைத்ததை விடவேண்டும். பகவான் ரமணரின் பாடல் ஒன்று இருக்கிறது;

"அய்யே, அதி சுலபம், ஆத்ம வித்யை, அய்யே, அதி சுலபம்! அதன் பொருள், ஓ, மிக சுலபம், இந்த ஆன்மீகம் ஓ, மிக சுலபம்!"

பின்னர் வரும் இன்னொரு பகுதியில் அவர் சொல்கிறார். நீங்கள் பணத்தை விரும்பினால் கடினமாக உழைக்க வேண்டும். உங்களுக்கு பெயரும் புகழும் வேண்டும் என்றால் கடினமாக உழைக்க வேண்டும்



(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி




103 ஆண்டுகளாக இணைப்பிரியாமல் வாழ்ந்து வரும் இரட்டை சகோதரிகள்



பிரித்தானியாவில் 103 வருடங்களாக வாழ்ந்து வரும் இரட்டை சகோதரிகள் மகிழ்ச்சி பொங்க பேட்டி ஒன்றை அளித்துள்ளனர். பிரித்தானியாவின் கேயர்பில்லி நகர் அருகே உள்ள அபெர்ட்ரிட்வெர் என்ற கிராமத்தில் கடந்த 1912 ஆம் ஆண்டில் பிளோரன்ஸ் டேவிஸ் மற்றும் கிளெனிஸ் தாமஸ் என்ற இரட்டை பெண் குழந்தைகள் பிறந்தனர்.

தற்போது 100 வயதை தாண்டியுள்ள இந்த சகோதரிகள், இன்று வரை அதே கிராமத்தில் ஒன்றாக வசித்து வருகின்றனர்.மேலும் உலகின் வயதான இரட்டையர்களான இவர்களுக்கு தற்போது 5 குழந்தைகளும், 12 பேரக்குழந்தைகளும், 21 கொள்ளுப்பேரன்களும் உள்ளனர். இந்நிலையில் தொலைக்காட்சி ஒன்றிற்கு இந்த சகோதரிகள் அளித்த பேட்டியில், நாங்கள் எங்களின் பிறந்த தினம் முதல் ஒருவரை ஒருவர் பிரிந்ததில்லை.

திருமணமான பின் சில காலம் பிரிந்திருந்தாலும், ஒரு கட்டத்தில் அடுத்தடுத்த வீடுகளில் குடியேறி ஒருவருக்கொருவர் ஆறுதலாக உதவி செய்து கொள்வோம் என தங்களின் ஒற்றுமையை பற்றி புகழ்ந்து கூறியுள்ளனர்.




### கார தோசை

**தேவையான பொருட்கள்:**



பச்சஅரிசி - 1/2 கப்
துவரம்பருப்பு - 1/4 கப்
தேங்காய் - 1/2 முடி
மிளகாய் - 4
சீரகம் - 1/2 டீஸ்பூன்
மிளகு - 10
உப்பு - 1/2 டீஸ்பூன்
பெருங்காயம் - சிறு துண்டு
மல்லித்தழை
கறி வேப்பிலை - சிறிது

**செய்முறை:**

அரிசி, பருப்பு இரண்டையும் அரை மணி நேரம் ஊற வைக்கவும்.

இதனுடன் மேலே கொடுத்துள்ள அனைத்து பொருட்களையும் சேர்த்து சிறிய ரவை பதத்துக்கு அரைத்துக் கொள்ளவும்.

எண்ணெயில் கடுகு தாளித்து, அரைத்து வைத்துள்ள மாவில் கொட்டி கலக்கவும். தேவையெனில் சிறிது தண்ணீர் சேர்த்து கலக்கிக் கொள்ளவும்.

தோசை கல்லில் மாவை ஊற்றி தோசை வார்க்கவும். மாவு மீந்து விட்டால், அடுத்த முறை தோசை ஊற்றும்போது மீந்த மாவில் பொடியாக அரிந்த வெங்காயம், கறிவேப்பிலை, மல்லித்தழை சேர்த்து தோசை வார்க்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரைப் பிளவுபடுத்த யார் யாரோ காத்திருப்பு

## சிறிதரன் எம்.பி.எச்சரிக்கை

(சாவகச்சேரி)

இலக்கு நோக்கிய பயணமென்பது குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் முடியக் கூடியவிடயமல்ல.அகிம்சை ரீதியாக 30 வருடங்களும்ஆயுதப் போராட்டங்களில் 30 வருடங்களுமென சொல்லுகிறோம்.

ஆனால் இப்பொழுது உள்ள சூழல் இதுதான். எமக்கு மிகுந்த போராட்டம்மிகுந்த காலக்கட்டம். இதில் எங்களுடன் இருப்பவர்களை யார் யாரோ எப்படி எப்படியோ மிகத் தந்திரமாக கதைத்து பிரிக்கக் காத்திருக்கிறார்கள். எம்முடன் நிற்கும் மக்களை அந்நியப்படுத்த யார் யாரோ காத்திருக்கிறார்கள். இந்த சூழ்நிலையில் மக்கள் மிக அவதானமாக இருக்க வேணடும் என்று யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் எழுதுமட்டுவாழ் சந்தை வளாகத்தில் சாவகச்சேரி பிரதேச சபையினரால் அமைக்கப்பட உள்ள கடைத் தொகுதிக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் சி.துரைராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் தொடர்ந்து உரையாற்றுகையில், பலர் ஜனநாயகம் பேசிக்கொண்டு வருவார்கள் பலர் புதிதாக கட்சி தொடங்குவதாக அறிவிப்பார்கள். போராளிகளுக்கொருகட்சி என்றெல்லாம் தொடங்குகிறார்கள். எத்தனை போராளிகள் இதுவரை அரசியலில் ஈடுபட முடியாத நபர்களாக உள்ளனர்.

அரசியல் கட்சி காரியாலயம் போனாலே கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட காலங்கள். அடிக்கடி விசாரணைக்கு அழைக்கப்பட்ட காலங்கள் ஜனவரி 8 ஆம் திகதி வரை இருந்தது. அத்துடன் முன்னாள் போராளிகள் அரசியல் ரீதியான பயணங்களை இந்த மண்ணிலே மேற்கொள்ள முடியவில்லை. ஆனால் அரசோடு இருக்கும் சிலர் அரசோடு தமது முழு நலன்களையும் அனுபவிப்பவர்கள் அரசோடு இருக்கும் முன்னாள் போராளிகள் சிலர் இப்போது தாம் போராளிகளுடன் இணைந்து புதிய கட்சி தொடங்கி புதிய தமிழீழத்தை மீட்கப்போவதாக பேசிக் கொள்பவர்களை பார்க்கக்கூடியதாக உள்ளது.

இவர்களை மக்கள் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.கொஞ்சம் கொஞ்சமாக எம்மை அழிக்க சில சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அதற்கு தென் இலங்கையில் இருக்கும் தேசியக்கட்சிகளும் இங்கு கடை விரிக்கின்றன என்பதை சொல்லி வைக்க விரும்புகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-29)

# கஞ்சாப் பொதியுடன் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் கேரளாவிலிருந்து கடத்திவரப்பட்டு கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்விருந்த 101 கிலோகிராம் கொண்ட கஞ்சாப்பொதிகளுடன் நான்கு சந்தேக நபர்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பண்டத்தரிப்பு பகுதியில் கைதுசெய்ததாக இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.மஞ்சுல டி.சில்வா தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து மாதகல் துறை முகம் ஊடாக கஞ்சா கடத்தி அதனை கொழும்புக்கு கொண்டுசெல்லும் நடவடிக்கையில் கும்பல் ஒன்று ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.


இதனையடுத்து, மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் கஞ்சாப் பொதிகளை கடத்திச்சென்ற கண்டியை சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களும் யாழ்ப்பாணம் மற்றும் அநுராதபுரத்தை சேர்ந்த இரண்டு சந்தேக நபர்களுமாக நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். வடிரக வாகனத்திலிருந்து 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய 45 கஞ்சாப்பொதிகள் மீட்கப்பட்டுள்ள அதே வேளை, 2 முச்சக்கர வண்டிகள், ஒரு வடிரக வாகனம் என்பனவற்றை மீட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்தேக நபர்களிடம் விசாரணை மேற்கொண்டபோது, இவர்கள் சுன்னாகத்திலிருந்து கொழும்புக்கு வாழைக்குலைகள் ஏற்றுமதி செய்பவர்கள் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-4)

# தீவிரவாதத்தை ஆதரித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## நவாஸ் ஷெரீப் எச்சரிக்கை

(கொழும்பு)



தீவிரவாதத்தை ஆதரிக்கும் மதரஸாக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரிகளுக்கு பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டிய பலுசிஸ்தான் பகுதியில் தீவிரவாதம் தலைதூக்கி வருகிறது. இதை கட்டுப்படுத்த அங்கு உயர் நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் கூட்டத்தில் நவாஸ் பேசியதாவது,

பாகிஸ்தானில் இருந்து தீவிரவாதத்தை வேரறுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

மதரஸாக்களில் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக கருத்தரங்குகளோ வேறு நிகழ்ச்சிகளோ நடத்தப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பெஷாவர் பாடசாலைமீது தீவிரவாத தாக்குதல் சம்பவத்தில் மாணவர்கள் உட்பட 142 பேர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து மதரஸாக்களின் நடவடிக்கைகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.(இ-5)

# பேசும் படம் - 31



இடம்:- யா/ஏழாலை வடக்கு அமி.த.க. பாடசாலை விநோத உடைப் போட்டியில்

தூய நீருக்கான போராட்டம் தொடரும்....

குறிப்பு : அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com
facebook: www.facebook.com/valam.puri.1
தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
அல்லது நேரில்.

அனுப்பியவர்:
சபா, சுன்னாகம்

# ஹெரோயின் வைத்திருந்தவருக்கு மரண தண்டனை

பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு கடத்தப்பட்ட ஹெரோயின் 5.68 கிராம் வைத்திருந்தவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள மாளிகை வீடொன்றில் காவற்காரராக இருந்தவருக்கே கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி பீரிதி பத்மன் சுரசேனவினால் இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மரண தண்டனை விதிக்கப்பட்டதன் பின்னர் வழக்கின் பிரதிவாதி, பிரதிவாதி கூண்டுக்குள்ளே மயங்கி விழுந்துவிட்டார். தான், நோயாளி என்று மயங்கி விழுந்த மொஹமட் அக்ரம் அமீர், இதற்கு முன்னரும் மூன்று தடவைகள் பிரதிவாதி கூண்டுக்குள்ளே மயங்கிவிழுந்துள்ளார்.

ஹெரோயின் 5.68 கிராமை தன்வசம் வைத்துகொண்டு விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் இவர் 2009ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தானிலிருந்து இந்த நாட்டுக்கு ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல்காரர் கொள்ளுப்பிட்டியில் உள்ள ஜூலியான ஹோட்டலில் தங்கியிருப்பதாக வெளியான தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பு தேடுதலின் போதே அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (இ-5)

# இலங். வெளிவிவகார அமைச்சருடனான பேச்சுவார்த்தை பயனளித்துள்ளது

இலங்கை வெளிவிவகார அமைச்சர் கடந்த வாரம் பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகரில் இலங்கையின் மீன் உற்பத்திகளுக் கான இறக்குமதி தடை குறித்து ஐரோப்பிய ஒன்றியத்துடன் நடத்திய பேச்சுவார்த்தை பயனளித்துள்ளதாக ஒன்றியம்தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமான மீன்பிடி, அறிக்கையிடப்படாத, அதிகாரமளிக்கப்படாத மீன்பிடி நடவடிக்கைகள் குறித்து இதன் போது பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதாகவும் ஐரோப்பிய ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் மீன்பிடித்துறையை நிர்வாக ரீதியில் கட்டுப்படுத்தவும் அதனை உரிய வகையில் முகாமைத்துவம் செய்யவும் அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் இலங்கை இணங்கியதாக ஐரோப்பிய ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கையின் மீன் இறக்குமதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை நீக்கப்படலாம் என மேலும் தெரியவருகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளிராய் சருகாய் உயிர்ப்பாய் பாடல் இறுவெட்டு வெளியீடு

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இசைத்தென்றல் கலாபூஷணம் ம. யேசுதாசனின் ஆக்கத்தில் உருவான "துளிராய் சருகாய் உயிர்ப்பாய்" என்னும் கிறிஸ்தவப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டின் வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை 22ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இல.286, பிரதான வீதி,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் யோ. யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக மன்னர் மறை மாவட்ட சமூகத்தொடர்பு அருட்பணி மையமான கலையருவியின் இயக்குநரும் மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவருமான அருள்திரு தமிழ்நேசன் அடிகள் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை திருமறைக் கலாமன்ற ஊடக இணைப்பாளர் கி. செல்மர் எமிலும், வெளியீட்டுரையை வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் கு. அற்புதனும் மதிப்பீட்டுரையை அச்சுவேலி பங்குத்தந்தை அருள்திரு சி.யே. அன்ரனி பாலாவும் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ஏற்புரையை இசைத்தென்றல் ம. யேசுதாசன் வழங்க நன்றியுரையை திருமறைக் கலாமன்றத்தின் கணக்காளர் திருமதி ஸ்ரெல்லா எட்மன் நிகழ்த்துவார். (இ-5)




# ஆவரங்காலில் இன்று கவிதை நூல் வெளியீடு

கவிஞர் ரம்யா உதயகு மார் எழுதிய முதற்பிரசவம் கவிதை நூல் வெளியீட்டு விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஆவரங்கால் ஆதவன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.தோப்பு அருள்நந்தி வித்தியாலய அதிபர் எழுத்தாளர் மு. ராஜவரோதயன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தவிழாவில் வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுல ராசா பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் த.கலாமணி, ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கம், யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி திருமதி மிதிலைச்செல்வன் ஸ்ரீகாந்தன், சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக தலைவர் காரை எம்.பி அருளானந்தன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்ளவுள்ளனர். (இ-250)

# மாலைநேர யோகா பயிற்சி இன்று ஆரம்பமாகவுள்ளது

(யாழ்ப்பாணம்)

பலாலிவீதிசுந்தர்மடத்தில் அமைந்துள்ள யாழ். இந்து சமயப் பேரவையின் தலைமை அலுவலகத்தில் மாலை நேர யோகா பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பேரவையின் செயலர் சக்திக்கிரீவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

யோகா வகுப்புக்கள் மாலை 6 மணி தொடக்கம் 7 மணி வரை தொடர்ந்து 2 மாதங்கள் தினமும் நடைபெறும். சான்றிதழ் மற்றும் கையேடுகளும் கொடுக்கப்படும்.

பயிற்சி நெறியில் இணைய விரும்புபவர்கள் யோகா பயிற்சிக்கென நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு வருகை தருவதுடன் அறிமுக நிகழ்விலும் அவசியம் கலந்துகொள்ள வேண்டும்.அத்துடன் காலை நேர யோகா பயிற்சிக்கான பதிவுகளையும் மேற்கொள்ள முடியும் என்று இந்துசமயப்பேரவை அறிவித்துள்ளது. (இ-3)

# திக்கம் பாலர் பாடசாலையின் கால்கோள் விழா நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் திக்கம் பாலர் பாடசாலையின் கால்கோள் விழா நிகழ்வு இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் தலைவர் க. திருவரங்கன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.செல்வன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-5)

## காணாமற்போகவில்லை

# கடத்தப்பட்டார்

### பல கொடூர சித்திரவதைகளை அனுபவித்து மீண்டவரின் திகிலூட்டும் வாக்குமூலம் இது

**சிவராத்திரி தினத்தன்று காணாமற் போன பருத்தித்துறை நவிண்டில் பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவர் வெள்ளைவான் கும்பலினால் கடத்தப்பட்ட நிலையில் மூன்று நாட்களின் பின்னர் அவர்களின் பிடியிலிருந்து அதிர்ஷ்டவசமாக தப்பியோடி வந்துள்ளார்.**

திகிலூட்டும் இச்சம்பவம் யாழ். குடாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதுடன்மீண்டும்வெள்ளை வான் கலாாரம் குறித்த பயப்பீதியையும்மக்களிடையேஏற்படுத்தியுள்ளது.

அச்சமூட்டும் இக்கடத்தல் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது, சிங்கள மொழி பேசுகின்ற மூன்றுக்கும் அதிகமானோரைக் கொண்டகுழுஒன்றுகடந்தசெவ்வாய்க்கிழமை பருத்தித்துறை நவிண்டில் பகுதியைச் சேர்ந்த இராசன் தயானந்தன் கண்ணன் (வயது 39) என்பவர் பொலிகண்டிப் பகுதியில் வைத்துக் கடத்தப்பட்டிருந்தார்.

கடத்தப்பட்ட அவர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் கொட்டன்,பொல்லுகளால் கடுமையாக தாக்கப்பட்டதுடன்,வாயினுள் துணிகள் அடையப்பட்டு பிளாஸ்ரலால் ஒட்டப்பட்டுள்ளது.

கண்கள் கட்டப்பட்டதால் எந்த இடத்தில் தான் வைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருந்துள்ளர்.

நேற்று முன்தினம் ஏ-9 வீதியூடாக கொண்டு செல்லப்பட்டு மாங்குளம் காட்டுப் பகுதி ஒன்றில் வாகனம் நிறுத்தப்பட்டுள்ளது.

உணவுக்காக வாகனம் நிறுத்தப்பட்டதால் வாகனத்தில் இருந்த அனைவரும் காட்டுப்பகுதியூடாக உணவகம் ஒன்றிற்குச் சென்றுள்ளனர்.




இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திய கடத்தப்பட்ட நபர் தமது கைகள் கட்டப்படாததால் கண்களில் கட்டப்பட்ட துணியை அகற்றியதுடன் வாகனத்திலிருந்து வெளியே பாய்ந்து திக்குத்திசை தெரியாத காட்டுப்பகுதியினூடாக ஒளிந்து மறைந்து இரவோடு இரவாக வாகன இரைச்சல் கேட்கும் பகுதிக்கு வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று அதி காலை கண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பேருந்தில் ஏறி நேற்றுக்காலை 7 மணியளவில் யாழ். பேருந்து நிலையத்தில் வந்து இறங்கியுள்ளார். இதன்பின்னர் அவ்விடத்திலிரு ந்து அழுது கொண்டிருந்ததை அவ தானித்த பெண் ஒருவர் ஏன் அழு கிறீங்க? என்று கேட்டுள்ளார்.

தனக்கு தொலைபேசியை வழங்கி உதவி செய்யுமாறு கேட்ட அவருக்கு தனது கைத்தொலை பேசியை பிரஸ்தாப பெண் வழங்கியுள்ளார். உடனடியாக தனது உறவினர் களுடன் தொடர்பு கொண்டு தான் உயிர் தப்பி வந்து யாழ். பேருந்து நிலையத்தில் நிற்பதாகக் கூறியுள்ளார்.

உடனடியாக உறவினர்கள் யாழ். பேருந்துநிலையத்திற்குவந்து அவரை யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்ப்பித்துள்ளனர்.யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் அவர் மிகவும் திகைப்படைந்த நிலையில் பேசுவதற்கு மிகவும் சிரமப்படு வதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (இ-3-60)

## கலிங்கம் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இவ்வருடத்தின் முதல் காலாண்டுக்கான கலிங்கம் பல்சுவை இதழ் வெளிவந்துள்ளது.

தாய் மண் மீது அடங்காப் பற்றுக் கொண்ட மாவீரன் பண்டார வன்னியனின் வன்னியுத்தம் மற்றும் பல்வேறு சுவையான அம்சங்களுடன் கலிங்கம் பல்சுவை இதழ் வெளிவந்துள்ளது.(இ-3)

## இலட்சார்ச்சனை பெருவிழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் மாசிமக இலட்சார்ச்சனை பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் மார்ச் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையுள்ள 10 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இதேவேளை எதிர்வரும் 4 ஆம் திகதி புதன்கிழமை எண்பத்தொரு கலச அபிஷேகம், ஸ்வர்ணபத்ம புஷ்பார்ச்சனை, உள்வீதியுலா ஆகியனவும் இடம்பெறவுள்ளது. எனவே அடியவர்கள் பால், தயிர், இளநீர், பழவகை, புஷ்பம் முதலியவற்றை மாசிமக விசேட உற்சவத்திலன்று உரிய நேரத்தில் கொடுத்துதவுமாறு நிர்வாக சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-5)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்தமண்டபப் பூஜையுடன்விநாயகப்பெருமான் திருவீதி வலம் வருவார். (இ)



கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சிவநேசன் அரங்கு திறப்பு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் பாடசாலை அதிபர் கு.கண்ணதாசன் தலைமையில் நடைபெற்றது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சி.சிறீதரன் மற்றும் வடமராட்சி வலய வலயக் கல்விப் பணிப்பாளர் உட்பட பிரமுகர்கள் அழைத்து வரப்படுவதையும் புதிய கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அறிவு மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக உற்பத்தி திறனை மேம்படுத்தல்'

## சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு யாழ். பல்கலையில்

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தினால் இவ்வாண்டு "அறிவு மற்றும் புத்தாக்கத்தின் ஊடாக உற்பத்தி திறனை மேம்படுத்தல்" என்னும் தொனிப்பொருளிலான சமகால முகாமைத்துவ சர்வதேச ஆய்வரங்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த ஆய்வரங்கிற்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.



யாழ்.பல்கலைக்கழக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே மேற்படி விடயம் தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மற்றும் முகாமைத்துவ பீடாதிபதி ஆகியோர் மேற்படி விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தனர்.

குறித்த பத்திரிகையாளர் சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது, பல்கலைக்கழகமொன்று சமூகத்திற்கான அறிவியல் பங்களிப்பினை வழங்கவேண்டும் என்பது அதன் பொறுப்புக்களில் ஒன்றாகும். கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு மேலதிகமாக ஆராய்ச்சி நடவடிக்கையில் ஈடுபடுவது மற்றும் சமூகத்துடன் ஒன்றித்த வகையிலான,பங்களிப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடு காணப்படுகின்றது.

இதனடிப்படையில் அறிவியல் விருத்திக்கு ஆய்வுகள் மேற்கொள்வது முக்கியமான ஒரு நடவடிக்கையாகும். இவ்வாறான ஆய்வு முயற்சிகளின் ஊடாக பிராந்திய மற்றும் தேசிய அபிவிருத்திக்கு அறிவு மற்றும் புத்தாக்கத்தின் ஊாக உற்பத்தி திறனை மேம்படுத்த நவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் நிர்வாக முகாமைத்துவ ரீதியில் நிறுவனங்களை வலுவூட்ட திட்டங்கள் அல்லது கொள்கைகளை வகுக்க இவ் ஆய்வரங்கு வழிவகை செய்யும் என்பது திண்ணம்.

இதனடிப்படையில் சம கால முகாமைத்துவம் என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் கடந்தவருடம் தனது முதலாவது ஆய்வு அரங்கினை வெற்றிகரமாக நடத்திய யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம் அதன் தொடர்ச்சியாக இவ்வருடம் தனது இரண்டாவது ஆய்வு அரங்கினை ஒழுங்குசெய்துள்ளது. இவ் ஆய்வரங்கு தொடர்ந்தும் அடுத்தடுத்த வருடங்களுக்கும் முன்னெடுத்துச் செல்லப்படும்.

இதேவேளை இவ் ஆய்வு அரங்கிற்கான ஆய்வுக் கட்டுரைகளை கீழ்வரும் தலைப்புக்களில் ஆய்வாளர்கள் சமர்ப்பிக்கலாம்.

கணக்கீடும் நிதியும்,வங்கியியலும் காப்புறுதியும் வணிகப் பொருளியல், வணிகமும் சட்டசூழலும்,கலாசாரமும் ஒழுக்க நெறிமுறைகளும்,முயற்சியாண்மையும் செயற்பாட்டு முகாமைத்துவமும்,நிறுவன நடத்தையும் மனிதவள முகாமைத்துவமும்,தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும், சுகாதார முகாமைத்துவம் சர்வதேச வியாபாரமும் நிதியும்,அறிவு முகாமைத்துவம், சந்தைப்படுத்தல் விநியோக சங்கிலி முகாமைத்துவம், செயற்பாட்டு ஆய்வு, பிராந்திய மற்றும் சமூக திட்டமிடல், தந்திரோபாய முகாமைத்துவம், சுற்றுலாத் துறை விருந்தோம்பல் மற்றும் நிகழ்வு முகாமை, நகர முகாமைத்துவம், சூழல் முகாமைத்துவமும் சமூகப்பொறுப்பும் என்ற உப தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிக்கலாம் என்பதுடன் உள்நாட்டில் மட்டுமல்லாமல் வெளிநாடுகளில் உள்ளவர்களும் தங்கள் ஆக்கங்களை சமர்பிக்கலாம். மேலும் தங்கள் ஆய்வுச் சுருக்கங்களை 20.03.2015ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கும்படியும் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு சுருக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் 25.03.2015ஆம் திகதி அறிவிக்கப்படும்.

மேலும் ஆய்வு கட்டுரைகளை 10.04.2015ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்க வேண்டும் என்பதுடன் குறித்த கட்டுரைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவித்தல் 30.04.2015ஆம் திகதி அறிவிக்கப்படும். இதேவேளை ஆய்வு அரங்கு பதிவுகள் 15.05.2015 ஆம் திகதி இடம்பெற்று 11,12.06.2015 ஆம் திகதிகளில் ஆய்வு அரங்கு நடைபெறும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இதேவேளை குறித்த சர்வதே ஆய்வு அரங்கு தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் மின்னஞ்சல்கள் அல்லது இணையத்தள முகவரி ஊடாக,பெற்றுக் கொள்ளலாம்.

மின்னஞ்சல்:- iccmuoj@gmail.com

இணையத்தள முகவரி:- www.jfn.ac.lk/iccm தொலைபேசிஇலக்கம்:- 0212223610, 0777448352, 0777238282 என்பன அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

# விளையாட்டுத்துறை அமைச்சில்

## பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டுத்துறை அமைச்சு, உதவிப் பணிப்பாளர், பராமரிப்பு, அலுவலர், தொழில்நுட்ப உதவியாளர் (சிவில்) களஞ்சியசாலை பொறுப்பாளர், விளையாட்டுத்துறை அலுவலர், பாதுகாப்பு அலுவல், தச்சுத் தொழிலாளர்/ வர்ணம் தீட்டல்/ குழாய் பொருத்துபவர் ஆகிய பதவிகளுக்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

மேற்படி விண்ணப்பம் கோரல்கள் தொடர்பான மேலதிக விபரங்களை 15.02.2015 அன்று வெளியான தினகரன் பத்திரிகையில் பார்வையிடலாம்.

சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை 27.02.2015 இற்கு முன்னதாக உறுதிப்படுத்தப்பட்ட கல்வி சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் செயலாளர், சுகததாச தேசிய விளையாட்டுக்கள் கட்டடத் தொகுதி அதிகார சபை, த.பெ. இல. 2211, ஆதர்த சில்வா மாவத்தை, கொழும்பு-13 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். (அ)

# சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கம் (வ.து)

**NPGJ-0031 பாரவூர்தி விற்பனை செய்வதற்கான மூடிய கூறுவிலை கோரல்**

எமது சங்கத்திற்குச் சொந்தமான லேடன் NPGJ-0031 இலக்க பாரவூர்திக்கு மூடிய கூறுவிலை கோரி விற்பனை செய்யப்படவுள்ளது.

**நிபந்தனைகள்**

1.மேற்படி பாரவூர்தியைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் தமது கூறுவிலைகளைச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் பூர்த்தி செய்து கடித உறையிலிட்டு சீல்செய்து 06.03.2015 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்பாக பொதுமுகாமையாளர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

2.கேள்விகளை ஏற்கவோ, மறுக்கவோ கேள்விச் சபைக்கு அதிகாரமுண்டு.

3.கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் லொறிக்கான கூறுவிலை விண்ணப்பம் எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

4.NPGJ-0031 இலக்க லொறிக்கான உத்தேச மதிப்பீட்டுப்பெறுமதி 900000.00 ரூபா.

மேற்படி வாகனத்தைப் பார்வையிட விரும்புவோர் சங்கத் தலைமைக் காரியாலயத்தின் வேலைநாட்களில் முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை பொதுமுகாமையாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம். (சி-215)

T.P:- 021 225 0126 கூ.சங்கம்.


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 48 செவ் 1 இல்
உயரம்: 185cm
தகைமை/தொழில்: DIP IN PHYSICAL EDU/ ஆசிரியர்
தொ.இ: B/4134

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 28 1/2 செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: HNDA/ அரச தொழில்
தொ.இ: B/4135

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 19 1/2
உயரம்: 172cm
தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்
தொ.இ: B/4136

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 21 3/4 செவ் 8 இல்
உயரம்: 153cm
தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்
தொ.இ: B/4139

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 51 1/2 செவ் 8 இல்
தகைமை/தொழில்: தனியார் சுவிஸ் PR
தொ.இ: G/4154

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 40 செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: A/L அவுஸ்திரேலியா NOT PR
தொ.இ: G/4155

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 2
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA
தொ.இ: G/4157

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 45 சூரிசெவ் 6 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/4158

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamal[illegible]u.jaffna[illegible]gmail[illegible]om


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிருப்தி

**கடந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டு வரும் ஊழல் மோசடிகள் தொடர்பில் தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது என துறைமுக மற்றும் விமான சேவைகள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

கடந்த மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் பாரியளவில் ஊழல் மோசடிகள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் மேற்கொண்டு வரும் விசாரணைகள் மற்றும் அதனுடன் தொடர்புடையவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் குறித்து திருப்தி அடைய முடியாது.

துறைமுகம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றில் பாரியளவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளன. ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

இது குறித்து விரிவான விசாரணைகள் நடத்தி குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படுவர்.

விமான நிலையம், சிவில் விமான சேவை அதிகார சபை, துறைமுக அதிகார சபை போன்றன தொடர்பில் விசாரணை நடத்தப்படவுள்ளது என சிங்கள பத்திரிகையொன்றுக்கு அர்ஜுன ரணதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

## சுதந்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளரை விமல் வீரவன்ச தரப்பு நிர்ணயிக்க முடியாது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதநத்திரக் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை விமல் வீரவன்ச தரப்பு தீர்மானிக்க முடியாது என கட்சியின் பொருளாளர் எஸ்.பி. நாவின்ன தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ச உதய கம்மன்பில, தினேஸ் குணவர்த்தன மற்றும் வாசுதேவ நாணயக்கார போன்றவர்கள் கட்சியின் பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை தீர்மானிக்க முடியாது. அதற்கான உரிமையோ தகுதியோ கிடையாது.

பிரதமர் வேட்பாளர் ஒருவரை தெரிவு செய்ய முடியாத அளவிற்கு சுதந்திரக் கட்சி வங்குரோத்து அடைந்துவிடவில்லை.

பிரதமர் வேட்பாளராக பெயரிடக் கூடிய திறமையான, அனுபவம் மிக்க சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கட்சியில் இருக்கின்றார்கள்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டால் நாம் எமது பிரதமர் வேட்பாளரை அறிமுகம் செய்வோம்.

முன்னாள் ஜனாதிபதி பிரதமர் வேட்பாளராக போட்டியிட விரும்பினால் அவரும் விண்ணப்பம் ஒன்றை கட்சியிடம் சமர்ப்பிக்க முடியும்.

பிரதமர் வேட்பாளர் யார் என்பதனை கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட கட்சியின் மத்திய செயற்குழுவினரே தீர்மானிப்பர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கு சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் சிலர் முயற்சித்து வருகின்றனர். இதற்கு மக்கள் இடமளிக்கக் கூடாது என எஸ்.பி நாவின்ன தெரிவித்துள்ளார்.

நுகேகொடை கூட்டம் தொடர்பில் சிங்கள பத்திரிகையொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)


பாராளுமன்ற உறுப்பினர்
சிவஞானம் சிறீதரனின்...



ஜெனீவாத் தீர்மானம்
மெய்ந்நிலையும் அரசியலும்
ஒருநோக்கு
பொத்தக வெளியீட்டு விழா

தலைமை
கே.வி.தவராசா (சிரேஷ்ட சட்டத்தரணி
(தலைவர்- இலங்கைத் தமிழரசுக்கட்சி கொழும்புக்கிளை)
இடம்
கூட்டுறவுக் கல்லூரி மண்டபம், கிளிநொச்சி.
காலம்
2015.02.22 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணி
விருந்தினர்கள்
கௌரவ மாவை. சோ.சேனாதிராசா (பாராளுமன்ற உறுப்பினர்
தலைவர்- இலங்கைத் தமிழரசுக் கட்சி)
கௌரவ மனோ. கணேசன்.
(மேல் மாகாண சபை உறுப்பினர்
தலைவர்- ஜனநாயக மக்கள் முன்னணி)
கௌரவ சி.தண்டாயுதபாணி
(எதிர்க்கட்சி முதல்வர்
கிழக்கு மா்காணம்)
கௌரவ. கி. துரைராசசிங்கம்
(கிழக்கு மாகாணசபை உறுப்பினர்
பொதுச்செயலாளர், இலங்கை தமிழரசுக்கட்சி)
நிகழ்ச்சி நிரல்
மாங்கள விளக்கேற்றல்
அமைதி வணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து
வரவேற்புரை
ஆசியுரை
தலைமையுரை
வெளியீட்டுரை
கௌரவ பா. அரியநேந்திரன்
(பாராளுமன்ற உறுப்பினர்,
மட்டக்களப்பு மாவட்டம்)
நூல் வெளியிடுதல்
ஆய்வுரை
நிலாந்தன்
(மூத்த அரசியல் ஆய்வாளர்)
வி.ரி. தமிழ்மாறன்
(பீடாதிபதி- சட்டபீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்)
விருந்தினர்கள் உரை
ஏற்புரை- நூலாசிரியர்
சி.சிறீதரன்
(பாராளுமன்ற உறுப்பினர்)
நன்றியுரை


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 289

மது மதுமிதா





பாலன் குமார்




மிது மிதுர்சா





லக்ஸ்மன் லவண்



ஆசிரியர் : அட பாபுவோட தாத்தாவா....? நீங்க செத்துப் போனதா உங்க பேரன் லீவு வாங்கிட்டுப் போனானே..?
தாத்தா : நீங்க தான் அவன் கிளாஸ் டீச்சரா? நீங்க செத்ததுக்குத்தான் ஸ்கூல் லீவுன்னு சொன்னானே...?

தரணி தரணிகா




கரோலின் கெவி





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

# அமரர் கனகசபை உருத்திரகுமாரன் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை இன்று

அமரர் கனகசபை உருத்திரகுமாரன் அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளும் இன்று சனிக்கிழமை கொக்குவில் இல்லத்தில் நடைபெறவுள்ளது. நாற்றிசையும் ஆட்சி புரியும் சர்வலோக நாயகியாகிய அம்பாள் எழுந்தருளியிருக்கும் பெருமை கொண்டது நயினாதீவு.



இயற்கைவளம் நிறைந்த இலங்கைத் தீவின் வடபால் யாழ்ப்பாணக் குடாநாட்டை அடுத்துள்ள சப்த தீவுகளுள் நடுநாயகமாக அமைந்துள்ளதும் இத்தீவாகும். நயினாதீவு எனப்படும் மணிபல்லவத்தில் புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக் கொண்டு உலகிலுள்ள உயிர்கள் யாவும் உய்யும் வண்ணம் அருளாட்சி செய்து வருகின்றாள் அன்னை நாகபூஷணி. வரலாற்றுக்காலத்திற்கு முன்பிருந்தே பூர்வீகமான பெருமையும் பழைமையும் கொண்டது. உலக மக்கள் அனைவரையும் தன்பால் ஈர்க்கும் மகா சக்தியைக் கொண்டது. பிறக்கப் பேறும் இறக்க முக்தியையும் தரும் புண்ணிய தலமாகத் திகழ்கின்றது.

இத்தகைய சிறப்புக்கள் வாய்ந்த புண்ணியபூமியாகிய நயினாதீவு பெருமனிதர் பலரை இந்த மண்ணுக்குத் தந்துள்ளது. அந்த நாட்களில் யாழ். ஸ்ரேசன் சந்தியில் பிரபல்யமான வர்த்தக நிறுவனத்தை அமரர் எஸ். ஆர். சின்னத்துரை (SRS) அவர்களும் அவரது சகோதரர்களும் திறம்பட நடத்தி பலரது பாராட்டுதல்களையும் பெற்றுக்கொண்டார்கள்.

சகோதரர்களுள் ஒருவராகவும் நயினை அமுதசுரபி அன்னதான சபையின் செயலாளராகவும் சமய சமூக சேவையாளராகவும் சேவையாற்றிய அமரர் எஸ்.ஆர். கனகசபை அவர்களின் அருமைப் புதல்வனாக 10.12.1955 இல் பிறந்தவர் அமரர் உருத்திரகுமாரன் அவர்கள்.

நயினை மகா வித்தியாலய முன்னாள் ஆசிரியரும் உரும்பிராய் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் யாழ்.பெரியபுலம் மகாவித்தியாலய ஆசிரியருமாவார். அத்துடன் இவரது ஆசிரியப் பணியைக் கருத்திற்கொண்டு தீவக கல்வி வலயம் இவருக்குத் தமிழ்ப் பிரிவுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவியையும் வழங்கிக் கௌரவித்தது குறிப்பிடத்தக்கது.

ஆசிரிய சேவையை அர்ப்பணிப்புடன் செய்து தான் கல்வி போதித்த பாடசாலைகளிலெல்லாம் நன்மதிப்புமிக்க ஆசானாக கணிக்கப்பட்டார்.

நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பிகையின் ஆலய உறுப்பினராக, பொருளாளராக ஆன்மீகப் பணியாற்றிய அமரர் உருத்திரகுமாரன் அவர்கள் நயினாதீவு நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையிலும் ஆயுட்காலஉறுப்பினராக இருந்தார்.

பொதுச்சேவைகள், ஆன்மீகப் பணிகள், சமய,சமூகப் பணிகள் என்பவற்றில் தன்னை முழுமையாக இணைத்துச் சேவையாற்றிய தன் காரணமாக இவருக்கு அகில இலங்கை சமாதான நீதவான் பதவியும் கிடைத்தது.

அத்துடன் இளங்கலைமாணி (BA), முதுகலைமாணி (MA) என்ற கல்விசார் சிறப்புப் பட்டங்களையும் பெற்றார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

நயினை நா.க.குமாரசூரியர்

# கூட்டணியை அமைக்கும் போது பசில் ராஜபக்ஷ நாட்டில் இல்லை

## சுசில் கூறுகிறார்

கடந்த 1994ஆம் ஆண்டில் கூட்டணியை அமைக்கும் போது இலங்கையிலே இல்லாத முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் வெற்றி பெற்றதன் பின்னரே வந்தார் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் தேசிய அமைபபாளர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.



கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்து ள்ளார்.

1994ஆம் ஆண்டு கூட்ட ணியை அமைத்து அதிகாரத்திற்கு வரும் பொழுது பசில் நாட்டில் இருக்கவில்லை வெற்றி பெற்றதன் பின்னரே வந்தார்.

அவர் வேலை செய்யும் முறையும் நான் வேலை செய்யும் முறையும் வித்தியாசமானது. தற்பொழுது இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு பிரிவிற்கு தினமும் 20 மற்றும் 30 முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன.

100 நாட்களாகும் போது ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்து விடும். ஆனாலும் இதுவரை ஒருவரையேனும் கைது செய்யவில்லை.

இலங்கை மக்கள் நாட்டின் உண்மை நிலையை அறிந்து கொள்ள வேண்டும். அப்படி மக்கள் உண்மையை அறிந்துக் கொள்ளாவிட்டால் இலங்கையில் எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் ஆதரவாக வாக்களிக்க மக்கள் வீதிக்கு இறங்கமாட்டார்கள்.

மேலும் நாட்டு மக்களுக்கு அரசியல் கசந்துவிட்டது எனவும் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அதிகமான இலங்கை பணிப்பெண்களை பணியில் அமர்த்த மலேசியா தீர்மானம்!

(கொழும்பு)

அதிகமான இலங்கை பணிப்பெண்களை தமது நாட்டில் பணிக்கமர்த்த மலேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மலேசியாவின் வெளிநாட்டு பணிப்பெண் முகவர்கள் சங்க தலைவர் அந்நாட்டு இணையமொன்றிற்கு வெளியிட்ட கருத்திலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மற்றும் கம்போடியா போன்ற நாடுகளிலிருந்து பணிப்பெண்களை அமர்த்துவது இலாபகரமானது எனவும், இதுவரை காலமும் இந்தோனேஷிய பெண்களே அதிகளவில் மலேசியாவில் வீட்டுப் பணிப்பெண்களாக கடமையாற்றி வந்தனர் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் இந்தோனேஷிய பெண்களை பணியிலமர்த்துவது அதிக செலவு விரயமாகும் காரணத்தினாலேயே வேறு நாட்டு பெண்களை பணியிலமர்த்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி ரூபா | திருநெல்வேலி ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 120 | 100 | 50 | 100 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 50 | 80 |
| பச்சைமிளகாய் | 100 | 140 | 110 | 160 |
| தக்காளி | 200 | 220 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 50 | 60 |
| கோவா | 100 | 80 | 70 | 80 |
| கரட் | 200 | 140 | 80 | 200 |
| பூசணி | 100 | 100 | 70 | 120 |
| புடோல் | 60 | 80 | 70 | 120 |
| வாழைக்காய் | 100 | 100 | 50 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 80 | 100 |
| பாகற்காய் | 100 | 140 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 50 | 80 |
| பயற்றங்காய் | 160 | 180 | 90 | 200 |
| லீக்ஸ் | 180 | 200 | 150 | 200 |
| பீற்றூட் | 60 | 100 | — | 100 |
| கறிமிளகாய் | 200 | 200 | 120 | 200 |
| முருங்கைக்காய் | — | 600 | — | 300 |
| போஞ்சி | — | 200 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | — | 80 | 40 | — |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 20 | 30 | 40 | 30 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40-50 | 40-50 |
| இராசவள்ளி | 100 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 100 | 180 | — | 180 |

# பிரிவுத்துயர் பகிர்வு



### சிவநாதன் தில்லையம்பலம்

(முன்னாள் F.R.D. உத்தியோகத்தர்)

யாழ்.கோப்பாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிவநாதன் தில்லையம்பலம் கடந்த 18 ஆம் திகதி பிரான்சில் காலமானார். அன்னாரின் பூதவுடல் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.30 மணிக்கு Le Funerarium, 95 Rue Marcel Sembat, 93430 Villeta neuse, France என்னும் முகவரியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி பி.ப 1 மணிக்கு தகனம் செய்யப்படும்.



### திருமதி.சிதம்பரப்பிள்ளை இலட்சுமி


புதுக்குடியிருப்பு 1ஆம் வட்டாரத்தை நிரந்தர முகவரியாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் சிதம்பரப்பிள்ளை இலட்சுமி நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று வெள்ளிக்கிழமை அவரது வீட்டில் காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.



### கந்தையா தம்பிராசா

யாழ்.மீசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் டென்மார்க் Horsens ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிராசா கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் Silkeborgvej 40,8700 Horsens, Denmark என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பி.ப 1 மணியளவில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி.சரவணபவன் கமலாம்பாள்

கோப்பாய் நாவலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திருமதி. சரவணபவன் கமலாம்பாள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு No.8A, Dr.Ponseka Road, Colombo-5 இல் நடைபெற்று மு.ப 10 மணியளவில் பொரளை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி இராசையா

யாழ்ப்பாணம் சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் மொன்றியல் கனடாவில் வாழ்ந்தவருமான சின்னத்தம்பி இராசையா கடந்த 18 ஆம் திகதி புதன்கிழமை மொன்றியல் கனடாவில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை கனடா மொன்றியலில் இடம்பெறும். அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் தெற்கில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறும்.



### சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலமானார். அன்னாரின் இறுதி அஞ்சலி இன்று சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 3 மணியளவில் சில்லாலை தூய கதிரை அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.



### திருமதி. குமாரசாமி சரஸ்வதி

யாழ்.தெல்லிப்பழை பன்னாலையை பிறப்பிடமாகவும், சுழிபுரத்தை வதிவிடமாகவும், லண்டன் Ilford ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி சரஸ்வதி அவர்கள் கடந்த 12 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் Ravidassia Communty Center, 26 Carlyle Rd, Manor park, London E12 6BN, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

1075




அது ஓர் அடர்ந்த காடு. காட்டை ஒட்டி சிறிய வீடு. அங்கே, ஒரு விறகுவெட்டி தன் மனைவியுடன் வசித்துவந்தான். அவனுக்கு, எரிக் என்ற மகனும் கிரேட்டல் என்ற மகளும் இருந்தனர்.

விறகுவெட்டியின் மனைவி, இவர்களுக்கு சித்தி. விறகுவெட்டிக்கு வருமானம் அதிகம் இல்லை. அதனால், சாப்பாட்டுக்கு மிகுந்த சிரமப்பட்டனர்.

ஒருநாள் இரவு விறகுவெட்டியின் மனைவி, எனக்கு ஒரு யோசனை. இந்தப் பிள்ளைகள் நன்றாக இருக்க, காட்டுக்குள் கொண்டுபோய் விட்டுவிடலாம். யாராவது எடுத்து வளர்ப்பார்கள். அவர்களுக்கு நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றாள்.

இதைக் கேட்ட விறகுவெட்டி வருத்தப்பட்டான். அவனுக்கும் வேறு வழி தெரியவில்லை. பிள்ளைகளை காட்டில் விடுவதற்குச் சம்மதித்தான்.

இவர்கள் பேசிக்கொண்டதை எரிக்கும் கிரேட்டலும் கேட்டனர். கிரேட்டல் அழ ஆரம்பித்தாள். அண்ணா, நம் கதி இப்படியா ஆக வேண்டும் என்றாள்.

கவலைப்படாதே. கடவுள் நம்மைக் கைவிட மாட்டார். நீ தூங்கு என்றான் எரிக்.

தங்கை தூங்கியதும், எரிக் ஆற்றங் கரைக்குச் சென்று, கூழாங்கற்களைக் கால்சட்டைப் பையில் நிரப்பிக்கொண்டு, வீட்டுக்கு வந்து படுத்துக்கொண்டான்.

அடுத்த நாள்... "காட்டில் விறகு பொறுக்கணும், இதை மதியத்துக்குச் சாப்பிடுங்கள" என்று இருவருக்கும் ஒரு ரொட்டித் துண்டைக் கொடுத்த சித்தி, அவர்களை அழைத்துக்கொண்டு கிளம்பினாள்.

எரிக், தன் பையிலிருந்த கூழாங் கற்களை ஒவ்வொன்றாகப் பாதையில் போட்டுக்கொண்டே வந்தான். காட்டுக்குள் வந்துவிட்டார்கள்.

ஓர் இடத்தில், குளிர் காயத் தீ மூட்டிய சித்தி, நான் திரும்பி வரும் வரை இங்கேயே இருங்கள் என்று சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

எரிக்கும் கிரேட்டலும் ஓடியாடி விளையாடினர். மதியம், ரொட்டியைச் சாப்பிட்டனர். இருட்டத் துவங்கியது. சித்தி வரப்போவது இல்லை என்பது அவர்களுக்குத் தெரியும்.

நிலா வரும் வரை காத்திருப்போம். நிலா வெளிச்சத்தில் பாதையில் போட்ட கற்களைப் பார்த்துக்கொண்டே வீட்டுக்குப் போய்விடுவோம் என்றான் எரிக்.

இருவரும் தூங்கிவிட்டனர். எரிக், திடீரென்று விழித்துப் பார்த்தபோது, பகல் போல நிலவு ஒளி வீசியது. தங்கையை எழுப்பினான். பாதையில் போட்டிருந்த கூழாங்கற்களைப் பார்த்துக்கொண்டே, வீட்டுக்கு வந்துவிட்டனர். சித்தி, இவர்களைப் பார்த்ததும் கோபப்பட்டாள். விறகுவெட்டியோ சந்தோஷப்பட்டான்.

கொஞ்ச நாள் போனதும் விறகுவெட்டியின் மனைவி, குழந்தைகளை இந்தத் தடவை திரும்பி வர முடியாத தூரத்தில் விட்டுவிட்டு வருகிறேன். எனக்கும் வருத்தமாகத்தான் இருக்கிறது. வேறு வழி தெரியவில்லை. அவர்களை எடுத்து வளர்ப்பவர்கள் மூலம் நல்ல சாப்பாடு கிடைக்கும் என்றாள்.

இதைக் கேட்ட குழந்தைகள் இருவரும் கவலைகொண்டனர். எல்லோரும் தூங்கிய பிறகு, மெதுவாக எழுந்த எரிக் வெளியே போக முயன்றான். சித்தி கதவைப் பூட்டி இருந்தாள். வெளியே செல்ல முடியாததால் எரிக் கால் கூழாங்கற்களைச் சேகரிக்க முடியவில்லை. கிரேட்டல் அழத்துவங்க, எரிக் அவளை சமாதானப்படுத்தினான்.

அடுத்த நாள். ஆளுக்கொரு ரொட்டித் துண்டைக் கொடுத்த சித்தி, காட்டுக்குள் கூட்டிப்போனாள். முன்பு அழைத்துப்போன தூரத்தைவிட அதிக தூரம். எரிக், தன் ரொட் டித் துண்டை வழி நெடுகிலும் பிய்த்துப் போட்டுக்கொண்டே வந்தான்.

அடர்ந்த காட்டுப் பகுதிக்கு வந்துவிட்டார்கள். சுள்ளிகளைச் சேகரித்து தீ மூட்டிய சித்தி, விறகு வெட்டிக்கொண்டு வரும் வரை இங்கேயே இருங்கள் என்று சொல்லிவிட்டுப போய்விட்டாள்.

இருவரும் நாள் முழுக்க சந்தோஷமாக விளையாடினர். அசதியில் படுத்துத் தூங்கிவிட்டனர். திடீரென்று கிரேட்டல் விழித்துக் கொண்டாள். பயந்து அழத் துவங்கினாள். அழுகைச் சத்தம் கேட்டு விழித்த எரிக், தங்கையைச் சமாதானப்படுத்தினான்.

பயப்படாதே, நிலா வெளிச்சத்தில் ரொட்டித் துண்டுகளை அடையாளம் கண்டு, வீட்டுக்குப் போய்விடுவோம் என்றான்.

நிலா, வானில் வலம் வந்தது. அங்கிருந்து கிளம்பிய பல பாதைகளில் தேடினர். எங்கும் ரொட்டித் துண்டுகள் இல்லை. எறும்புகளும் பறவைகளும் உணவாகத் தின்றிருக்கும் என்பதை எரிக் தாமதமாக உணர்ந்தான். ஒவ்வொரு பாதையிலும் முதலில் நடப்பதும், பின்னர் இந்தப் பாதை இல்லை என்று வேறு ஒரு பாதையில் போவதுமாக களைத்துப்போய் அமர்ந்தனர். அப்படியே தூங்கிவிட்டனர்.

விடியல் துடிப்போடு வந்தது. பறவைகளின் சத்தம், விலங்குகளின் ஓலம், ஓங்கி வளர்ந்த மரங்களின் உரசல் என்று கலவையான சத்தத்தில் கண் விழித்தனர்.

அப்போது, நீண்ட வாலுடன் ஒரு பறவை இவர்கள் அருகே வந்து அமர்ந்தது. இருவரையும் தன் அலகால் கொத்தி, சிறகை விரித்துக் காண்பித்தது. ஒரு பாதையில் தத்தித் தத்தி நடந்தது. கிரேட்டல், நான் போட்ட ரொட்டித் துண்டுகளைச் சாப்பிட்டத ற்காக, இந்தப் பறவை நம் வீட்டுக்கு வழி காட்டுகிறது. இதைப் பின்தொடர்வோம் என்றான் எரிக்.

வளைந்து நெளிந்து பறவை பறந்த திசையில் இருவரும் போனார்கள். அந்த நீள வால் குருவி, இறுதியாக ஒரு வீட்டின் மீது அமர்ந்தது. இருவருக்கும் ஆச்சர்யம்.

---

## 21 02.2015 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1440 - புரூசியக் கூட்டமைப்பு உருவானது.
- 1613 - முதலாம் மிக்கையில் ரஷ்யாவின் சார் மன்னனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.
- 1804 - நீராவியால் இயங்கிய முதல் தொடருந்து இயந்திரம் வேல்சில் இயக்கி சோதித்துப் பார்க்கப்பட்டது.
- 1848 - கார்ல் மார்க்ஸ், பிரெட்ரிக் ஏங்கல்ஸ் தமது புகழ பெற்ற கம்யூனிஸ்ட் அறிக்கையை வெளியிட்டனர்.
- 1918 -கடைசி கரலீனா பரக்கீட் என்ற பறவை சின் சினாட்டியில் இறந்தது.
- 1937-முதலாவது பறக்கும் தானுந்து வெற்றிகரமாகப் பறக்க விடப்பட்டது.
- 1943 -இரண்டாம் உலகப் போர்: குவாடல்கனல் போர் முடிவுக்கு வந்தது.
- 1947 -எட்வின் லாண்ட் முதலாவது உடனடி படம் பிடிகருவியை நியூயோர்க் நகரில் காட்சிப் படுத்தினார்.
- 1952 -கிழக்கு பாகிஸ்தானின் டாக்காவில் வங்காள மொழியை அதிகாரபூர்வ மொழியாக்கக் கோரி மாணவர் நடத்திய எழுச்சிப் போராட்டம் ஒன்றின் போது காவற்துறையினர் சுட்டதில் 4 பேர் கொல்லப்பட்டனர். இந்நாள் பின்னர் யுனெஸ்கோவினால் அனைத்துலக தாய் மொழி நாள் என அறிவிக்கப்பட்டது.
- 1960 -பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் அனைத்து வியாபார நிறுவனங்களையும் அரசுடமை யாக்கினார்.
- 1972 - சோவியத்தின் லூனா 20 சந்திரனில் இறங்கியது.
- 1974-சுயெஸ்கால்வாயின் மேற்குக் கரையிலிருந்து கடைசி இஸ்ரேலியப் படைகள் வெளியேறின.

**பிறப்புகள்**

- 1878-அன்னை, இந்திய ஆன்மீகவாதி (இ. 1973)
- 1895-கார்ல் பீட்டர் ஹென்ரிக் டாம், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1976)
- 1924 -ராபர்ட் முகாபே, சிம்பாப்வேயின் முதலாவது ஜனாதிபதி

**இறப்புகள**

- 1889 - இன்னாசித்தம்பி, யாழ்ப்பாணம் சில்லாலை புகழ் பெற்ற சுதேச வைத்தியர்
- 1926 -ஹெயிக் ஒனெஸ், நோபல் பரிசு பெற்ற டச்சு இயற்பியலாளர், (பி. 1853)
- 1941 -பிரெடெரிக் பாண்டிங், நோபல் பரிசு பெற்ற கனடியர் (பி. 1891)
- 1965 -மல்கம் எக்ஸ், அமெரிக்க கறுப்பினத் தலைவர் (பி. 1925)
- 1968 -ஹோவார்ட் ஃபுளோரி, நோபல் பரிசு பெற்ற ஆஸ்திரேலியர் (பி. 1898)
- 1984 -மிகயில் ஷோலகொவ், நோபல் பரிசு பெற்ற ரஷ்ய எழுத்தாளர், (பி. 1905)
- 1999 -கேர்ட்ரட் எலியன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அறிவியலாளர் (பி. 1918)

**சிறப்பு நாள்**

அனைத்துலக தாய்மொழி தினம்

---

## தாய்மொழி தினம்




அனைத்துலகத் தாய்மொழி தினம் பெப்ரவரி 21 அன்று உலகம் முழுவதும் கொண் டாடப்பட்டு வருகின்றது.

1952 இல் இந்த நாளன்று அன்றைய கிழக்கு பாகிஸ்த் தான் தலைநகர் டாக்காவில் வங்காள மொழியை அரசகரும மொழியாக ஆக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின்போது உயிர் நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது.

வங்காள தேச அரசாங்கத்தின் முயற்சிகள், அனைத்துலக அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெஸ்கோ) அமைப்பின் 1999, பெப்ரவரி 21 பொது மாநாட்டின் 30 ஆவது அமர்வில் இந்நாளை அனைத்துலக தாய் மொழிநாளாக அறிவித்தது.

பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணுவதுடன் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு இந்த நாளை யுனெஸ்கோ அறிவித்தது. 2000 ஆம் ஆண்டு முதல் இந்த நாளானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்க்கை வரலாறு

முனிதாயி குளிப்பதைத் தான் பார்த்தது பற்றி வேலைக்கார சிறுவன் வர்ணிக்க, அவனிடம் பணம் கொடுத்து விட்டு, குளியல் காட்சியை பார்க்கிறார், ரஜினிகாந்த்.

ஒரு நாள் இரவு. கணவன் இல்லாத நேரம். வேலைக்கார பையனின் துணையோடு, கணவன் போல் நடித்து முனிதாயின் கற்பை சூறையாட முயல்கிறார், ரஜினி. ஆனால் முனிதாயி, உண்மையைத் தெரிந்து கொண்டு கறபைக் காப்பாற்றிக் கொள்ளப் போராடுகிறாள். ஆனால், தோற்றுப் போகிறாள்.

மறுநாள் கணவன் வந்ததும், நடந்ததைச் சொல்லிக் கதறுகிறாள். நான் கற்பைப் பறிகொடுத்தவள். உங்களுக்கு ஏற்றவள் அல்ல என்று கூறுகிறாள். ஆனால் கணவனோ, முனிவர் மனைவியான அகல்யா மீது ஆசை கொண்ட இந்திரன், முனிவரைப் போல் வேடம் போட்டு, அவள் கற்பை சூறையாடினான். கண் இருந்தும், அகல்யா கற்பிழந்தாள். நீயோ கண் இல்லாதவள். அப்படியிருந்தும் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள போராடி இருக்கிறாய். நீ நிரபராதி. நடந்ததை இருவரும் மறந்துவிடுவோம் என்கிறான்.

முனிதாயி மனம் நெகிழ்ந்து, கற்பிழந்த அகல்யாவை முனிவர் கல்லாக சபித்தார். நீங்களோ என்னை மன்னித்து ஏற்றுக் கொள்கிறீர்கள். நீங்கள் முனிவர் அல்ல தெய்வம் என்று கூறுகிறாள். ரஜினியும், அவருக்கு உதவிய வேலைக்கார பையனும் ஊரை விட்டே ஓடிவிடுகிறார்கள்.

**ரஜினி - ரேவதி**

கதையில் சிற்சில மாற்றங் கள் செய்து படமாக்கினார், மகேந்திரன. பாடல்களை வாலி, புலமைப்பித்தன், நா. காமராசன், கங்கை அமரன் ஆகியோர் எழுத, இளையராஜா இசை அமைத்தார.

கதாசங்கமா படத்தில் வில்லனாக நடித்த ரஜினிகாந்த், இதில் கதாநாயகனாக நடித்தார். குருட்டுப்பெண் வேடத்தில் ரேவதி நடித்தார். மற்றும் சவுகார் ஜானகி, ராஜலட்சுமி, ரங்கநாத், ஒய்.ஜி.மகே ந்திரன், தேங்காய் சீனிவாசன், சின்னிஜெயந்த், பூர்ணம் விஸ்வ நாதன், வீரராகவன் ஆகியோர் இடம் பெற்றனர். 15-6-1984இல் வெளிவந்த **"கை கொடுக கும் கை"**, நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி பெற்றது.



ரஜினி- படம் -கை கொடுக்கும் கை

**ஜான், ஜானி, ஜனார்த்தன்**

ரஜினிகாந்த் நடித்த இந்திப்படமான **"ஜான், ஜானி, ஜனார்த்தன்"** இந்தியா முழுவதும் ஒரே நாளில் (26-10-1984 இல்) வெளிவந்தது. தமிழில் வெளிவந்த **"மூன்று முகம்"** படம்தான், இந்தப் பெயரில் ரீமேக் செய்யப்பட்டது. இந்தப் படத்தில், ரஜினிக்கு ஜோடி ரதி. இதற்கு முன் திலீப்குமார், அமிதாப்பச்சன் ஆகியோர்தான் இந்தியில் மூன்று வேடங்களில் நடித்தவர்கள். அவர்களைவிட ரஜினி மூன்று வேடங்களில் சிறப்பாக நடித்திருப்பதாக, இந்திப்பட உலகம் பாராட்டியது. இந்தப்படம் வெள்ளி விழா கொண்டாடியது. கதை வசன ஆசிரியர் தூயவனும், பட அதிபர் "அழகன்" தமிழ் மணியும் சேர்ந்து உருவாக்கிய படம் **"அன்புள்ள ரஜினிகாந்த."** இந்தியாவிலேயே எந்த ஒரு நடிகரின் பெயரையும் தலைப்பாக வைத்து படம் தயாரிக் கப்பட்டது இல்லை. அந்தப் பெருமை ரஜினிக்கு மட்டுமே கிட்டியது. இதன் கதை, திரைகதை, வசனத்தை தூயவன் எழுதினார். ரஜினிகாந்த், கௌரவ வேடத்தில் (ரஜினிகாந்தாகவே) நடித்தார். ரஜினிகாந்தை நன்கு பயன்படுத் திக் கொள்ளவேண்டும், அதே சமயம் படம் **"டாக்குமெண்டரி"** போல் இல்லாமல் நவரசம் கொண்டதாக இருக்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, கதையை வெகு திறமையாக உருவாக்கியிருந்தார், தூயவன்.

**கருணை இல்லம்**

அனாதைக் குழந்தைகளின் புகலிடமான கருணை இல்லத்தையும், அதில் வசிக்கும் உடல் ஊனமுற்ற சிறுமி ரோசியையும் (மீனா) சுற்றிச் சுழல்கிறது, கதை. பெற்றோர் யார் என்று தெரியாத அனாதைக் குழந்தை ரோசி. பிறந்த சில நிமிடங்களிலேயே கேட்பாரற்று கிடந்த அவள், கருணை இல்லத்தில் சேர்க்கப்படுகிறாள். தன்னை அனாதையாக விட்டு விட்டுப்போனதால், "அம்மா" என்ற சொல்லைக் கேட்டாலே ரோசிக்கு வெறுப்பு. யாருடனும் பேசுவது இல்லை சிரிப்பது இல்லைி. கருணை இல்லத்து "மதர்" (மணிமாலா), ஆயா (அம்பிகா) ஆகியோர் ரோசியிடம் தனி அன்பு செலுத்துகிறார்கள்.

**ரஜினி வருகை**

ஒருநாள், கருணை இல்லத்துகு ரஜினிகாந்த் வருகை தருகிறார். அவர் பேசும்போது, எல்லாக் குழந்தைகளும் கைதட்டி மகிழ, ரோசி மட்டும் "உம்" என்று இருக்கிறாள்.

(தொடரும்)

# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 84

..கட்டையன் மூஞ்சியில கரும் புள்ளி செம்புள்ளி குத்தாத குறை தான்.

அவன் காதுபடவே பேசுது கடந்து போற சனம்.

காஞ்ச மொளகாயில வெதைகள் லாம் ஓடிவந்து மொளகா மூக்குல சேர்றமாதிரி அவன் ஒடம்புல இருக்கிற கோபமெல்லாம் ஒண்ணு கூடித் தெரண்டு மூக்கு நுனியில வந்து ஒக்காந்திருச்சு மூட்ட முடிச்சோட தீக்குச்சியெல்லாம் தேவையில்ல.

அவன் மூக்குமேல பத்தங்குல தூரத்துல வச்சாலும் பத்திக்கிரும் பீடி. அவன் சின்ன மூக்கு வெடைக்கிறப்ப துவாரம் ரெண்டும் விரிஞ்சு விரிஞ்சு ரெண்டு கொட்டாவி விடுது.

சொத்துக் கேப்பாளாமில்ல சொத்து..? அவ பிள்ளையக் கண்டந்துண்டமாப் பிச்சுப் பிச்சுக் காக்காய்க்குப் போட்டுட்டா..? எங்கூடப் படுத்துப்பெற முடியுமா இன்னொரு பிள்ள? ஏலே நரி நண்டத் தூக்குறமாதிரி துண்டாத் துக்கிட்டு வாங்கடா அவ பெத்து வச்சிருக்கிற பிண்டத்த.

எரிஞ்சுக்கிட்டிருந்த பீடியத் தீயோட வாய்க்குள்ள தள்ளிக் கறிச் கறிச் சுன்னு மென்னு தின்னு நாக்கப் பல்லுல நற நறன்னு வழிச்சுக் கரேர்ன்னு காறித் துப்புறான் கட்டையன்.

வீட்டு வாசல்ல கெடந்த வெளிக் கல்லுல ஒக்காந்து வெத்தல தட்டிக் கிட்டிருக்காரு சடையத்தேவரு. இடிச்ச கூலிக்கு, எனக்கொரு பங்குன்னு எவனும் கேட்டுரக் கூடா துங்கிறதுக்காக அவரா இடிச்சு அவராப் போட்டுக்கிறது தான் அவரோட வெகுநாளைய வெத்தலக் கொள்கை.



விழுகட்டும் அவர் காதுலன்னு வேணும்னே பேசிட்டுப் போறாக வெவகாரம் புடிச்ச ரெண்டு மூணு ஆளுக.

கருவாச்சி புள்ள கருப்பா? செவப்பா?

குங்குமப்பூவப் பால்ல போட்டுக் கொடங்கொடமாக் குடிச்சாலும் சிவீர்ன்னா இருக்கும் கட்டையனுக்கும் கருவாச்சிக்கும் பெறந்த பிள்ள? அவுக வம்ச நெறந்தான்.. கருப்பு.

பிள்ளயார் மாதிரி இருக்கு...? அவுக அப்பன் மாதிரியா? ஆத்தா மாதிரியா?

ரெண்டு கழுதை மாதிரியும் இல்லையாம்.

பெறகு? அவுக தாத்தன் சடையத் தேவர் சாடையாம்.

காலம் முறுக்கிப் புழிஞ்ச முதுகுத் தண்டுக்குள்ள சிலீர்ன்னு ஒரு மின்னல் ஓடி மறைஞ்சதுல சிலுத்துப் போகுது கெழவனுக்கு.

வெத்தல ஒரல்ல தாளம் தப்புது.

ஒத்தையில பிள்ளையெடுத்து வந்தவள ஊரே வேடிக்கை பாத்துட்டுப்போக வீட்டு வெளிக்கதவச் சாத்திக் கிட்டு நடுவாசல்ல தயிர்ப்பலகையைப் போட்டு கருவாச்சி ஒடம்பெல்லாம் மஞ்சப்பூசி அவள ஒட்டுத் துணியில்லாம ஒக்கார வச்சு எளம் வெந்நிய சொம்புல மோந்து எட்டி நின்னுக்கிட்டு அவ மேல சல்லு சல்லுன்னு வீசியடிக்கிறா ரங்கம்மா.

சும்மா மஞ்சள் மழை பேஞ்ச மாதிரி ஒழுகி வருது தண்ணி ஒடம்பெல்லாம்.

போதுமாத்தா போதுமாத்தா கையில தண்ணியத் தடுத்துக் கத்துறா கருவாச்சி. ஏய்! சும்மா இர்றீ. பிள்ள பெத்த பச்ச ஒடம்புல பிசுக்குப் போகனுமா இல்லையா?

கிட்ட வந்து மூஞ்சிதேச்சு முதுகு தேச்சு முன் மார்பு கழுவி விட்டவ தண்ணி ஊத்திக்கிட்டே வகுத்த புடிச்சு வலிக்காம ஒரு எளங்கசக்குக் கசக்கி விடுறா கச கச கசன்னு வெளியேறுது கழிவு கசடெல்லாம்.

ஒடம்புல ஒழுகுற மஞ்சத் தண்ணியும் உறுப்புல ஒழுகுற செந்தண்ணியும் சேந்து புதுநெறம் குடுத்துப்போகுது வாசல் வழி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அறிக்கை பிற்போடப்பட்டமை மோசமான விளைவை ஏற்படுத்தும்

## குணதாச அமரசேகர அச்சம்



(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் சபையினால் இலங்கை போர்க்குற்றம் தொடர்பான அறிக்கை பிற்போடப்பட்டமை நாட்டிற்கு பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என கூறும் தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் தலைவர் குணதாச அமரசேகர எதிர்க்கட்சி தலைவர், வெளிவிவகார அமைச்சர் மற்றும் வடமாகாண முதலமைச்சரின் நடவடிக்கைகள் குறித்தும் கடுமையாக விமர்சித்துள்ளார்.**

கொழும்பு பொரளையில் அமைந்துள்ள தேசிய ஒருங்கிணைப்பு ஒன்றியத்தின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜெனீவாவில் மார்ச் மாதத்தில் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த இலங்கை போர் குற்றம் தொடர்பிலான விசாரணை அறிக்கையானது பிற்போடப்பட்டுள்ளமை வடக்கிலுள்ள பிரிவினைவாதிகளுக்கே நன்மை தரும் என்பதை அறிந்தும் வெளிவிவகார அமைச்சர் மேற்படி அறிக்கையினை பிற்போட வேண்டும் என்ற தமது கோரிக்கைய நிறைவேற்றிக் கொணடுள்ளார்.

அது போன்றே வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் புதிய அரசு உருவான பின் ஓமந்தை சோதனை நிலையம் அகற்றல், வடக்கின் அதிகாரங்களை பெற்றுக்கொள்ளல் போன்ற தேவைகளை பூர்த்தி செய்து கொண்டுள்ளார். அதனை தொடர்ந்து இப்போது இனப்படுகொலை பிரேரணையையும் நிறைவேற்றிக் கொண்டு கூட்டமைப்பின் தலைவர் பதவி மீது இலக்கு வைத்துள்ளார். அதனையும் விரைவில் நிறைவேற்றிக்கொள்ள புதிய அரசு அவருக்கு சந்தர்ப்பம் வழங்கும்.

அதுமட்டுமல்லாது அவரது அடுத்த தேவையான பலாலி விமான நிலையத்தை அண்மித்த பிரதேசங்களில் வெளிநாடு சென்றுள்ள விடுதலை புலி உறுப்பினர்களை குடியமர்த்தும் திட்டமும் விரைவில் பூர்த்தியாகவுள்ளது.

இதற்கும் ரணில், சந்திரிகா, மங்கள போன்றவர்கள் முன்னின்று உதவுவர் என்பதில் சந்தேகமில்லை.

இவ்வாறான நிலையில் விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டுள்ளதன் பின்பு அமெரிக்கா மற்றும் விக்கினேஸ்வரன் போன்ற பிரிவினைவாதிகளின் சூழ்ச்சி உள்ளது என்பதை அறிந்தும் எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபாலடி சில்வா விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ளார். அவர் போன்றவர்கள் எதிர்க்கட்சி பதவியில் இருப்பதற்கு தகுதியற்றவர்கள். அந்த பதவியில் மகிந்தவை அமர்த்துவதே எமது தேவை. அதுவே நாட்டு மக்களினதும் தேவை என்பதை நுகேகொடையில் திரண்ட மக்கள் கூட்டத்தின் மூலம் அறிய முடிந்தது.

இது தொடர்பில் எமது நாட்டில் ஜனாதிபதி என்ற பெயரில் உள்ள பொம்மையும் அறியாது இருப்பதே எமக்கு வருந்தக்கூடிய காரணமாக அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நான்கு இலங்கையர்களை திருப்பி அனுப்பியது ஆஸி

(கொழும்பு)

படகு மூலம் அவுஸ்திரேலியா சென்ற நான்கு இலங்கைப் பிரஜைகள் அவுஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்பு அதிகாரிகளால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய கோகஸ் தீவு கடற்பரப்பில் வைத்து இந்த இலங்கையர்கள் தடுத்து நிறுத்தப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

கடந்த 9 ஆம் திகதி தடுத்து நிறுத்தப்பட்ட இவர்கள், மறுநாள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக அவுஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் பீற்றர் டுடோன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கடற்பாதுகாப்பு அதிகாரிகளுடன் இணைந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆட்கடத்தல்காரர்களின் செயற்பாடுகளை தடுத்து நிறுத்த அவுஸ்திரேலிய அரசாங்கம் உறுதியுடன் இருப்பதாக குடிவரவு அமைச்சர் பீற்றர் டுடோன் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மெய்வல்லுநர் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

புதுமடம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி குணவதி சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதியமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ

## நாடாளுமன்றத்திற்கு பசில் ஏன் சமூகமளிக்கவில்லை?

முன்னாள் பொருளாதார அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஏன் நாடாளுமன்றிற்கு சமூகமளிக்கவில்லை என ஜே.வி.பி கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

சுகயீனம் காரணமாகவா அல்லது வேறு உயர் கல்வி தொடர்வதன் காரணமாகவா பசில் ராஜபக்ஷவினால் நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க முடியவில்லை என ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க கேள்வி எழுப்பியுள்ளார். நாடாளுமன்றிற்கு சமூகமளிக்க முடியாது என கடிதங்களை அனுப்பி வைக்க முடியாது.

பசில் ராஜபக்ஷ சுகயீனம் காரணமாகவே நாடாளுமன்றிற்கு வர முடியாமல் இருக்கின்றார் என்பதனை நாம் அறிந்துகொள்ள விரும்புகின்றோம்.

என்ன காரணத்திற்காக விடுமுறை பெற்றுக்கொள்கின்றார் என்பதனை சபாநாயகர் அறிந்திருக்க வேண்டும்.

அது பற்றி நாங்களும் தெரிந்து கொள்ள விரும்புகின்றோம் என அநுரகு மார திஸா நாயக்க அண்மையில் நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

பசில் ராஜபக்ஷவிற்கு 3 மாதகால விடுமுறை ஏற்கனவே நாடாளுமன்றினால் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## கல்விக்கான உதவி வழங்கல்




(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கில் இராணுவத்தின் துப்பாக்கி சூட்டினில் படுகொலை செய்யப்பட்ட வசாவிளான் குட்டி யபுலத்தை சேர்ந்த சந்திரனின் நான்கு பிள்ளைகளது கல்விக்கான உதவியினை ஜேர்மனி ஸ்ருட்கார்ட் நகரைச் சேர்ந்த மணிமாறன் தனது சரஸ் சேவை நிலையமூடாக வழங்க முன்வந்துள்ளார்.

யுத்தத்தினில் குடும்ப தலைவர்களை இழந்த குடும்பங்களது சிறார்களது கல்வி நடவடிக்கைகள் தடைப்பட்டுப் போவதென்பது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது. வடக்கினில் பாடசாலைக்கு செல்லாது விடுகின்ற சிறார்களை மீண்டும் கற்றல் செயற்பாடுகளினில் ஈடுபடுத்துவது காலத்தின் கட்டாயமாக உள்ளது என தெரிவித்துள்ள வலி.வடக்கு பிரதேச சபையின் உபதலைவர் சஜிவன் சரஸ் சேவை நிலைய உதவியினை ஜேர் மனின் உதவும் இதயங்கள் அமைப்பு எடுத்து சென்று சேர்ப்பிக்க முன்வந்திருந்தது. மாதாந்தம் வழங்கப்படும் அவ்வுதவியை உதவும் இதயங்கள் அமைப்பின் பிரதி நிதி ச.சஜீவன் எடுத்து சென்று வழங்கியிருந்தார். (இ-4)

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை வீரகத்தி
### (ஓய்வு நிலை தபாலக ஊழியர், முன்னாள் கரவைவெல்லன் விநாயகர் ஆலய கணக்காளர்)



கந்தப்பாவளவு, கரவெட்டி தெற்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை வீரகத்தி 19.02.2015 இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை- கண்ணகை தம்பதியரின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான சின்னையா- மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும் இலட்சுமியின் அன்புக் கணவரும் கிருஸ்ணமூர்த்தி, உமாபதி, அமரர் பிறேமாவதி, விநாயகமூர்த்தி, பாஸ்கரமூர்த்தி ஆகியோரது பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று சனிக்கிழமை (21.02.2015) காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக கரவை சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மத்தணி
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கியைவான பசுமைத்தொழில்நுட்பங்கள்-34

## விவசாய பீட வெள்ளி விழாவில் எமது வாழ்வியலின் தடயங்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

இது விவசாய பூமி. விவசாயம் செழிப்பாக செய்யப்பட்ட நிலம். இந்த விவசாயிகளின் கூடாரத்திற்குள் நாம் விளைவித்து எமது சந்ததிக்கு உணவு கொடுத்த காலங்களுமுண்டு. மரவள்ளிக் கிழங்கு வீடெங்கும் நடுகை செய்து உண்டுறங்கியதும் இங்குதான் நடந்தது. உண்டு களித்து நெடுதூரம் நடந்து துவிச்சக்கரவண்டியில் இருபக்கமும் உழக்கி களைத்து வந்த காலங்களும் வந்து போயின. கடந்து வந்த இந்த பாதை கரடுமுரடானது தான். அரை நூற்றாண்டு காலம் வாழ்ந்து வட்டதாக எமக்குள் ஒரு இறுமாப்பு. விவசாயமே எந்தன் பரம்பரைத் தொழில். அதில் வாழ்ந்துதான் என் பிள்ளைகளையும் கரை சேர்க்க முடிந்தது. சும்மா சொல்லக் கூடாது போகம் போகமாக அள்ளித்தந்த இந்த பூமியைத்தான் நான் நம்பியிருந்தேன். இன்றும் நம்பியிருக்கின்றேன். என்போல பலர் விவசாயமே உயிர் மூச்சாக வாழ்ந்துவர ஒருசிலர் இடப்பெயர்வில் இடைவழியில் மூர்ச்சையாகிவிட ஏனையவர்கள் அதற்குப்பிறகு மூச்சுப்பேச்சில்லாதவர்களாக ஆகிவிட்டார்கள். ஆகினார்கள் என்பதை விட ஆக்கிவிட்டார்கள் எனலாம்.

அது ஒரு காலம். வண்டில் கட்டி வயலுக்கு போவதும் புழுதி உழவு செய்ததை சென்றுபார்ப்பதும், விதைப்பு, உரம் எறிய இன்னும் களைபிடுங்கவென அவ்வப்போது செல்வதும் பின்னர் கதிரறுக்க செல்வதும் படல்கட்டி கதிரறுத்து காயவைத்ததும், வைக்கோலை நெல்மூட்டைகளுடன் வண்டிலில் ஏற்றி வீடுவந்து சேர்ந்ததும் வாழ்க்கையாகிவிட்டிருந்தது.

மொட்டைக்கறுப்பனும் மொறுங்கனும் விதைத்த வயல்கள் தப்பாது ஆதாயத்துடன் அறுவடை செய்தது இன்றும் ஞாபகமிருக்கின்றது. அடுத்த காலபோகத்துக்கு விதைக்கு என எடுத்து வைத்தது போக மீதமானவற்றை வருடத்தின் உணவுக்காக களஞ்சியப்படுத்தி வைப்போம். என் அன்னை இவையனைத்தையும் வீட்டு வேலைகளுடன் சேர்த்து இலாவகமாக செய்த பாங்கும் தனதளவில் திட்டமிட்டு செயலாற்றியதும் என்னை பலதடவைகள் வியப்பில் ஆழ்த்தியிருக்கின்றன. வெள்ளாண்மை வீடுவந்து சேரும் வரை அன்னை பம்பரம் போல சுழன்று கொண்டிருப்பார். இப்போது பிடித்து நடப்பதற்கு அவருக்கு ஏதோ ஒரு துணைவேண்டும். துணையானவருக்கும் இப்போது அதே நிலைதான். ஒருவரையொருவர் விசாரித்துக் கொள்வதைத் தவிர வேறெதுவும் முடியவில்லை. வயதின் வெளிப்பாடு என சாட்டுக்கு கூறினாலும் துணையும் துணையாக ஆனமட்டும் தானே. இந்த வாழ்க்கையோட் டத்தில் அன்னையவள் தரும் அன்பும் தந்தையவரின் நேரத்தை மையப்படுத்திய வேகமும் இன்னும் என்னை உற்சாகப்படுத்திக் கொண்டே இருக்கின்றது.

பாரம்பரியமாக செய்த தொழில் என்றதால் இதற்காக நான் பெரிதாக படிக்கவில்லை. அலட்டிக் கொள்ளவுமில்லை. விவசாயமே எனது பரம்பரை தொழிலாக வரித்துக் கொண்டபின் அதில்என்ன குறையை காண முடியும். வாழவைத்த தொழில் எனக்கு என்றுமே கௌரவத்துக்குரிய தொழில். உழுதுண்டு வாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாம்... என்ற வரிகள் தான் அவ்வப்போது எனக்கு தெம்புதரும்! விவசாய பீடம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்கின்றது என அறிந்தபோது மகிழ்ச்சியுற்றவர்களில் நானும் ஒருவன். இப்போது விவசாய பீடம் வெள்ளிவிழா காண்கிறது என அறிகின்றபோது என்னுள் உள்ளவற்றை விவசாய பீடம் பற்றிய கனவை எடுத்துச்சொல்ல விரும்புகின்றேன். இந்த ஏழை விவசாயியின் விருப்பங்களும் நிறைவேறுமா?

முன்புபோல திட்டமிட்டு விவசாயம் செய்ய முடியவில்லை. மழையில்லை, வருகின்ற மழையும் தற்போதைய விருந்தாளிகள் போல சொல்லிவிட்டு வருவதில்லை. வந்த காரியம் முடிந்தபின் சொல்லிவிட்டு போவதுமில்லை. மழைநீரினை முழுவதுமாக நம்பியிருக்கும் வரண்ட வலய பிரதேசத்து மக்கள் எங்களுக்கு காலம் பொய்க்க தொடங்கியிருக்கிறது. கூடியிருந்தவரே பொய்க்கும் போது காலத்தை எவ்வாறு நோவது. இது உலகளாவிய பிரச்சினையாக பலவருடங்களாக பேசிக்கதைத்துக் கொண்டிருக்கும் போது அதன் அருமை, முக்கியத்துவம் எமக்கு தெரியவில்லை. எதுவும் கழுத்துக்கு மேலே வந்த பின்னர் தானே நாம் கண்டறிய முயல்கின்றோம். அதைப்பற்றி கதைக்கின்றோம். குடிநீருக்கும் நடந்தது அந்த கதைதானே. கடந்த இரண்டு வருடங்களும் வரண்டு நீரின்றி என் வீட்டு தென்னை மரங்களும் வட்டுடன் சாய்ந்து விட்டன. நன்றாக காய்த்த மரங்கள் பத்தும் ஒரு கிழமையில் திடீரென்று காய்ந்து தலைகவிழ்ந்து விட்டன. காப்பாற்ற முடியவில்லை. எனக்கு வருமானம் தரும், தினமும் தேங்காய் தரும் தென்னை மரங்களை நான் இழந்தது என்னை பாதித்திருக்கின்றது. தென்னையை நட்டால் இளநீரு பிள்ளையைப் பெற்றால் கண்ணீரு என்றது நன்றாக இப்போது விளங்கியது. இடப்பெயர்வில் முழுவதுமாக இழந்து வந்தபோது தஞ்சம் தந்தது இந்த தென்னை மரங்களே. இன்னொருவர் பணத்தை எதிர்பார்க்காது தானள்ளித்தந்த தென்னைகள் என்தோட்டத்தில் இப்போது இல்லை. இந்த வரட்சி பற்றி முன்கூட்டியே தெரிந்திருந்தால் இந்த தென்னைகளை காப்பாற்றியிருக்கலாம் என அறியக் கிடைத்தது. இந்த **முன் கூட்டியே** என்பதனை பீடம் எமக்கு அறியத் தருமா? இதற்கான வசதி வாய்ப்புக்கள் அங்கு கிடைக்க வழியுண்டா? இனிவருங்காலம் காலநிலை தன் நிலைமாறி விவசாயத்திற்கு காலனாகவும் மாறிவிட வாய்ப்புள்ளது. காலநிலை மாற்றத்தை துல்லியமாக கணிப்பதற்கும எதிர்வுகூறுவதற்குமான வசதிகள் எம்மவர் பகுதிகளில் ஏற்படுத்திக் கொள்ளப் பட வேண்டும்.

விளைவித்த பொருட்களுக்கு கிராக்கியில்லை. விலைகள் அங்குமிங்குமாக தளம்பிக்கொண்டிருக்கின்றன. சந்தைவாய்ப்பு சீராக வில்லை. எமது பொருட்களுக்கு உலகசந்தையை அலங்கரிக்க ஆவன செய்ய வேண்டும். கடல்வழி மற்றும் வான்வழி பாதைகள் வடபுலத்திலிருந்து திறந்து விடப்பட்டால் இவை எதுவுமே சாத்தியமாகும். பலர் வருகின்றார்கள் எதையோ தேடுகின்றார்கள். எவற்றையோ எடுத்துச்செல்கின்றார்கள். எம்மவருக்கும் அதன் அருமையும் புரியவில்லை. நாகரிக தொழில்நுட்ப மோகத்திற்குள் சிறைப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். எமது விவசாயத்தை தீர்மானிப்பவர்கள் நாமாக இருக்கவேண்டுமே தவிர வேறொருவரல்ல.

எமது மக்கள் வாழ்ந்த தடயங்கள் இனிவரும் சந்ததிக்கு தெரியவாய்பில்லை. மக்களின் கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களுக்குள் எமது மூதாதயரை மட்டுமன்றி எமது மண்ணின் வாசத்தையுமல்லவா சேர்த்து புதைத்திருக்கின்றோம். வாழ்ந்த தடயங்களை அழிப்பதில் பலர் குறியாகவே இருக்கின்றனர். எமது கண்டுபிடிப்புக்கள் என எவற்றினையும் எம்மால் பாதுகாக்க முடியவில்லை.

பலபொருட்கள் இரும்பு விலைக்கே விற்கப்பட்டிருக்கின்றன. ஏதோ கொஞ்சம் காசு வந்தால் போதும் என எண்ணியதன் விளைவு இது. எமது மக்களின் வாழ்க்கையை வாழ்ந்த வரலாற்றை வாழ்வியலின் தடயங்களை பொக்கிஷமாக பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை பலரும் வலியுறுத் தியிருக்கின்றார்கள்.

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 53-XXI



மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் யாழ்ப்பாணம் வந்திருந்த போது இதனை கூறியதும் நினைவிலிருக்கின்றது. இதற்கு வழிதேடிய போது இவ்வாறான அரிய பொக்கிஷங்களை தேடியெடுக்க வேண்டியிருக்கின்றது. விவசாய பீடம் மற்றும் பொறியியல் பீடம் ஆகியன அமைந்திருக்கும் அறிவியியல் நகரில் இதற்கான இடமும் நிறையவே இருக்கின்றது. பொறியியல் பீடத்தின் தொழில்நுட்ப பூங்கா அமையவிருப்பதும் வாழ்வியலின் தடயங்களுக்கு இன்னும் மெருகூட்டும். விவசாயபீடத்தினது வெள்ளி விழாவை முன்னிட்டு இத்தகையதொரு வாழ்வியல் தடயங்களுக்கான கண்காட்சியையும் சேர்த்து ஏற்படுத்திக் கொள்வது சிறந்தது. விவ சாய பீடம் கிளிநொச்சி நோக்கி நகர்ந்தது பலகாரணங்களுக்காக. வடபுலத்தின் மையப்பகுதியில் கிளிநொச்சியமைந்திருப்பது இதன் சிறப்பு.

எமது மக்கள் பயன்படுத்திய சூத்திரக்கிணறு, துலா, செக்கு, வண்டில், ஏர், பட்டை, குடில், உழவாரம், எனப் பலவற்றை சேமித்து பாதுகாக்க முயலுகின்றோம். இவ்வாறானவற்றை தந்துதவக் கூடியவர்களிடமிருந்து வாழ்வியல் தடயங்களை எதிர்பார்க்கின்றோம். எம்மினிய உறவுகளின் வாழ்க் கையுடன் பின்னிப்பிணைந்த இக்கருவிகளும் உள்ளூர் தொழில் நுட்பங்களும் காலங்காலமாக பாதுகாக்கப்பட வேண்டியனவாதலால் அவற்றை நாம் சேகரிக்க முனைகின்றோம். எமது மக்களின் துன்பதுயரங்களின் காட்சிப் பொருட்களாக இவையிருக்கப்போவதில்லை. மாறாக எமதுமக்கள் வாழ்ந்த சிறப்பை, உன்னதமான வாழ்க்கையை, விவசாயஞ்செய்து வாழ்ந்த கலைநயத்தை, உழைப்பின் உறுதியை, உயர்வின் ஊக்கத்தை இப்பொருட்களூடாக காண விளைகின்றோம். அருங் காட்சியகத்தின் உருவமைப்பிற்காக அதற்குள் உள்வாங்கப்படும் வாழ்வின் வழித்தடங்களை நாம் சேகரிக்க வேண்டும். இவை எமக்கான சொத்துக்களாக நாம் கொள் ளல்வேண்டும். பழையன கழிதலும் புதியன புகுதலும் என அவ்வப்போது நாம் கழித்துவிட நினைப்பவை காலங்காலமாக எமது கதைகளை உலகமெங்கும் பறை சாற்றும் காலத்தாலழியாத உயிர்ப்பொருட்களாகவே திகழும்.

முதலாவது பசுமைப்புரட்சி செய்ய நினைத்தது ஒன்று ஆனால் நடந்ததோ இன்னொன்று. இப்போது மீண்டும் ஆரம்ப கால விவசாய பொறிமுறைக்குள் நாம் உள் நுழைய நினைக்கின்றோம். ஆனால் முடியவில்லை. ஆதலால் இயன்றளவாவது நாம் பயணிக்க முயற்சிசெய்வதையே சேதன விவசாய செய்கைமுறைக்குள் அடக்கிவிடுகின்றோம். இனியொரு பசுமைப்புரட்சிக்கு நிறையவே வேலையுண்டு. எதை இழந்தோமோ அதை நாம் மீளப்பெற வேண்டும். நிலம், நீர், காற்று, வானம், நெருப்பு இவ்வாறான ஐம்பூதங்களையும் எமது சொத்தாக்கி அவற்றை அனுசரித்து வாழ தலைப்பட வேண்டும். இவற்றின் பயன்பாட்டை நல்லமுறையில் நம் தலைமுறைக்காக நாம் பயன்படுத்தத் தொடங்கினால் எமக்கு காலமும் காலநிலையும் அனுசரணையாக வரும். இயற்கையை அனுசரித்து இயற்கையுடன் வாழ பழகுவோம். இயற்கையுடன் வாழ்ந்தால் இயற்கை மரணமெய்தலாம். அதுவரை நாம் எப்படி வாழப்போகின்றோம் என ஒருதரம் நினைத்துப்பார்த்துக் கொள்வோம். வாழ்வியலின் தடயங்களை தடங்களாக நாம் வரித்து நல்வழி வாழத்தலைப்படுவோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய-இலங்கை அனுசக்தி உடன்பாடு ஏன் முக்கியத்துவம் பெறுகிறது?

இலங்கையில் அதிகரித்துள்ள சீனாவின் செல்வாக்கை இல்லாதொழித்தல் என்பது குறுகிய காலத்தில் இலங்கையைப் பொறுத்தளவில் இலகுவான காரியமல்ல.

**இவ்வாறு firstpost. com இணையத்தளத்தில் ராஜீவ் சர்மா எழுதியுள்ள செய்திக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். இதனை புதினப்பலகைக்காக மொழியாக்கம் செய்துள்ளவர் நித்தியபாரதி.**

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்ட போது, திங்களன்று இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையில் இந்தியாவில் வைத்து மேற்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒத்துழைப்பு உடன்பாடானது பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் முதலாவது பாரிய இராஜதந்திர சாதனையாக நோக்க முடியும்.

இலங்கையின் முன்னைய அரசாங்கம் சீன ஆதரவுக் கொள்கையை முற்றிலும் கடைப்பிடித்த நிலையில், இலங்கையின் புதிய அரசாங்கம் இந்தியாவுடன் மேற்கொண்டுள்ள அணுசக்தி உடன்பாடானது முன்னைய அரசாங்கத்தின் வெளியுறவுக் கோட்பாட்டிற்கு முற்றிலும் எதிர்மாறாகச் செயற்பட ஆரம்பித்துள்ளதையே சுட்டிக்காட்டுகிறது.

ஏப்ரல்-மே மாதங்களில் இடம்பெறத் தீர்மானிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக எவ்வித கவலையும் கொள்ளாது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தியாவுடன் அணுசக்தி உடன்பாட்டை மேற்கொண்டுள்ளார்.

**கடந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட ஜனாதிபதி தேர்தலில் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட வரும் முன்னாள் ஜனாதிபதியான மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து பெரியளவு வேறுபாட்டில் ஜனாதிபதி மைத்திபால சிறிசேன வெற்றி பெறாத போதிலும் இந்தியாவுடன் மேற்கொண்டுள்ள உடன்பாடானது ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவின் தன்னம்பிக்கையின் உச்சத்தையே வெளிப்படுத்தி நிற்கிறது.**

அத்துடன் தற்போதும் இலங்கையின் சீன ஆதரவு நிலைப்பாடு அதிகம் காணப்படு கின்ற அதேவேளையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இத்தகையதொரு பாரிய இராஜ தந்திர நகர்வை முன்னெடுத்துள்ளமை இவரது உச்சமான தன்னம்பிக்கையை வெளிப்படுத்துகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இத்தகைய தன்னம்பிக்கையைத்தான் தவறாகக் கருதவில்லை என இந்தியா நம்புகிறது.

அத்துடன் இலங்கையில் இடம் பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் மைத்திரி பால சிறிசேன வெற்றிபெறுவார் எனவும் இந்தியா நம்புகிறது.

உயிர்த்துடிப்பான ஒரு அணுசக்தித் திட்டம் தொடர்பாக இலங்கை தற்பெருமை கொள்ளவில்லை என்பதும், 2031இல் 6000 மெகாவற் அணுசக்தியை உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை இலங்கை கொண்டுள்ளது என்பதும் மிகவும் முக்கிய விடயமாகும்.

ஆகவே, இலங்கையில் அணு சக்தி என்பது பாரியதொரு விவகாரமாகவோ அல்லது இது இலங்கைக்குத் தேவை என அழுத்தம் வழங்கப்படாத இக்காலப்பகுதியில் இலங்கை ஏன் இந்தியாவுடன் அணுசக்தி உடன்பாட்டை மேற்கொண்டுள்ளது?

**இந்தக் கேள்விக்குச் சாதகமான பதில்களை ஆராய்வதற்கு முன்னர், தற்போது இலங்கையும் இந்தியாவும் மேற்கொண்டுள்ள அணுசக்தி உடன்பாடு தொடர்பாகச் சுருக்கமாக நோக்க வேண்டும்.**

'அணுசக்தியின் அமைதி மிக்க பயன்கள்' (Peaceful Uses of Nuclear Energy) என்கின்ற பெயரில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் மேற்கொள்ளப்பட்டுள்ள அணுசக்தி ஒத்துழைப்பானது இது தொடர்பான அறிவு, சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்கள், வளங்கள் போன்றவற்றை பரிமாறுதல், மாற்றிக்கொள்ளுதல் போன்றவற்றுடன், திறன் அபிவிருத்தி, அணு சக்தியை அமைதி வழியில் அதாவது வன்முறையற்ற வழிகளில் பயன்படுத்துவதற்கான ஆட்களைப் பயிற்றுவித்தல், அணு சக்திப் பாதுகாப்பு, கதிரியக்கப் பாதுகாப்பு, கதிரியக்க விரய முகாமைத்துவம், அணுசக்தி மற்றும் கதிரியக்க அனர்த்த முகாமைத்துவம், சூழல் பாதுகாப்பு போன்ற பல்வேறு விடயங்களைப் பகிர்ந்து கொள்ளுதலை நோக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.



இந்தியா சார்பில் அணுசக்தித் திணைக்களத்தின் செயலர் றட்ணகுமார் சிங்கவும், இலங்கை சார்பாக மின்வலு மற்றும் எரி **சக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அணுசக்தி ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்**

'நாம் தற்போது செய்து கொண்டுள்ள சிவில் அணுசக்தி இருதரப்பு உடன்படிக்கையானது எமது இருதரப்பு நம்பிக்கையின் பிறிதொரு நகர்வாகும்.

இலங்கை இவ்வாறானதொரு உடன்படிக்கையில் தற்போது முதன்முறையாகக் கைச்சாத்திட்டுள்ளது.

விவசாயம், சுகாதாரம் போன்ற துறைகள் உட்பட பல்வேறு விடயங்களில் ஒத்துழைப்பை வழங்கக் கூடிய வழிவகையை இது உருவாக்கியுள்ளது' என அணு சக்தி ஒத்துழைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர்

ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவுடன் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி வழங்கிய ஊடக மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை தனது நாட்டில் அணுசக்தி அடிக்கட்டுமானத்தை நிறுவுவதற்குத் தேவையான ஆளணிகளுக்கான பயிற்சி உட்பட பல்வேறு வகைகளில் இந்த உடன்பாடு மூலம் இந்தியா, இலங்கைக்கு உதவுவதுடன், இலகுதர சிறிய அளவில் அணு உலைகளை இந்தியா இலங்கைக்கு வழங்குவது வரை விரிவுபடுத்தப்படும்.

**இந்தியப் பிரதமர் இலங்கையுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பை விரிவுபடுத்துவது தொடர்பாகவும் தெரிவித்தார். ஆனால் இது தொடர்பான மேலதிக விபரங்கள் எதனையும் பிரதமர் நரேந்திர மோடி வெளியிடவில்லை.**

இலங்கையின் முன்னாள் அரசாங்கத்துடன் கொழும்பு வர்த்தகத் துறைமுகத்திற்கு அருகே கப்பற்றுறை ஒன்றை 1.5 பில்லியன் டொலர்களில் அமைப்பதற்கு சீனா கைச்சாத்திட்ட நிலையில, மைத்திரிபால சிறிசேன அரசாங்கத்தின் இந்தியாவுடனான நட்புறவானது சீனாவுக்கு பாரியதொரு அதிருப்தியை ஏற்படுத்தும்.

இலங்கை தனது நாட்டில் அணுசக்திச் செயற்பாடுகளை விரிவுபடுத்த விரும்பியிருந்தால் சீனா, ரஸ்யா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவிகளைக் கோரியிருக்க முடியும்.

ஆனால் இந்த நாடுகளைத் தெரிவு செய்யாது இதற்குப் பதிலாக இலங்கை. இந்தியாவைத் தெரிவு செய்துள்ளது. இது மைத்திரிபால சிறிசேனவின் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள எழுதப்படாத 'நன்றியுரை' ஆகும்.

எது எவ்வாறிருப்பினும், இலங்கையில் அதிகரித்துள்ள சீனாவின் செல்வாக்கை இல்லாதொழித்தல் என்பது குறுகிய காலத்தில் இலங்கையைப் பொறுத்தளவில் இலகுவான காரியமல்ல.

**கடந்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் சீனா நான்கு பில்லியன் டொலர்கள் வரை முதலிட்டுள்ளது.**

வரும் சில மாதங்களில் இந்தியா-இலங்கை உறவு நிலை மிகவும் சுவாரசியம் மிக்கதாக இருக்கும்.

அடுத்த மாதம் இலங்கைக்கான தனது சுற்றுப்பயணத்தை பிரதமர் நரேந்திரமோடி மேற்கொள்ளவுள்ளதானது இவ்விரு நாடுகளுக்குமிடையிலான மூலோபாய நகர்வில் மேலும் நெருக்கத்தை ஏற்படுத்தும்.

*-நித்தியபாரதி-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற

# ஊழல்களை விசாரிக்க தனியான நீதிமன்றம்

## பணிப்பாளர் டில்ருக்ஸி தெரிவிப்பு

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சியில் இடம்பெற்ற இலஞ்ச ஊழல் தொடர்பில் கிடைத்துள்ள முறைப்பாடுகளை விசாரிக்கவென தனியான நீதிமன்றம் தேவை என்ற விடயத்தை முன்வைத்துள்ளதாக இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் புதிய பணிப்பாளர் டில்ருக்ஸி விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் தாம் நீதியமைச்சருடன் கலந்துரையாடியுள்ளதாக தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆணைக்குழுவில் தற்போது 48 அதிகாரிகளே உள்ளனர்.

எனவே அந்த எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளதாக டில்ருக்ஸி தெரிவித்துள்ளார்.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ நேற்று முன்தினம் ஆணைக்குழுவுக்கு விஜயம் செய்த பின்னரே ஆணைக்குழுவின் பணிப்பாளர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

ஊழல்கள் தொடர்பில் தற்போது, ஆயிரத்து 600 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அவைகள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அரியநேத்திரனிடம் 500 மில்லியன் நட்டஈடு கோருகிறார் மஹிந்தானந்த

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரனிடம், முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே 500 மில்லியன் ரூபா நட்ட ஈடு கோரியுள்ளார்.

தமக்கு எதிராக அவதூறு பிரசாரம் செய்ததாக அரியநேத்திரன் மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் தொலைக்காட்சி ஒன்றுக்கு அரியநேத்திரன் வெளியிட்ட கருத்து தொடர்பில் இவ்வாறு மஹிந்தானந்த அலுத் கமகே நட்ட ஈடு கோரியுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் கடந்த அரசாங்கம் தம்மை விலைக்கு வாங்க முற்பட்டது என அரியநேத்திரன் தெரிவித்திருந்தார்.

கொழும்பில் வீடு ஒன்றையும் ஒரு கோடி ரூபா பணத்தையும் பதவி ஒன்றையும் வழங்குவதாகவும் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ளுமாறு அப்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அலுத்கமகே தம்மிடம் கோரியதாக அரியநேத்திரன் குற்றம் சுமத்தியிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்களை பதினான்கு நாட்களுக்குள் அரியநேத்திரன் வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென மஹிந்தானந்த அலுத்கமகே சட்டத்தரணி ஊடாக நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

குற்றச்சாட்டை வாபஸ் பெற்றுக் கொள்ளாவிட்டால் 500 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்ய உள்ளதாக முன்னாள் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)

# அசாத்சாலி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சியாம்

## ஞானசார தேரர் கண்டுபிடிப்பு


மத்திய மாகாணசபையின் உறுப்பினர் அசாத் சாலி இனங்களுக்கு இடையில் முரண்பாட்டை ஏற்படுத்த முயற்சித்து வருவதாக பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞான சார தேரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனங்களுக்கு இடையிலான புரிந்துணர்வை சீர்குலைக்கும் அசாத் சாலியின் நடவடிக்கைகளை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அரசாங்கம், முஸ்லிம் மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் வாதிகள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

அசாத் சாலியின் நடவடிக்கைகளை நிறுத்துவது இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வழியமைக்கும்.

நுகேகொடை கூட்டம் பௌத்த கொடிகளுடன் நடத்தப்பட்ட கடும் போக்குடைய இனவாத கூட்டம் என அசாத் சாலி தெரிவித்துள்ளார்.



பௌத்த நாடொன்றில் பௌத்த கொடிகளை ஏந்திச் செல்வது தவறான செயற்பாடா?

இந்த நாடு எது? நாட்டின் சூழ்நிலை என்ன? மக்களின் உணர்வுகள் என்ன என்பது பற்றி அசாத் சாலிக்கு புரியவில்லை.

நுகேகொடை கூட்டத்திற்கு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் பங்கேற்றுள்ளனர், இதன் அடிப்படையில் அசாத் சாலி அரசியலிலிருந்து ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டுமென ஞானசார தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள போதி பௌத்த கட்டடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# இசை ஆராதனை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்திய துணைத்தூதுவராலயத்தின் அனுசரணையில் வட இலங்கைச் சங்கீத சபை வழங்கும் சற்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் 168 வது இசை ஆராதனை நிகழ்வு இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை வடஇலங்கை சங்கீத சபையின் தற்பரானந்தன் மண்டபத்தில் வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளருமான செ.உதயகுமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.இந்தியத் துணைத்தூதுவர் எ.நடராஜன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆ.ராஜேந்திரனும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி.ஆறு திருமுருகனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## கொசு

நானும் ஒரு நண்பரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது கொசு கடிக்கிறதற்கும் எறும்பு கடிப்பதற்கும் வித்தியாசம் உண்டா என்று கேட்டார் நண்பர். ரொம்ப வித்தியாசம் இருக்கு. எறும்பு தனக்கு ஏதாவது ஆபத்து உண்டு என்று நினைத்தால் தான் கடிக்கும். அது இரத்தத்தை உறிஞ்சுவதும் இல்லை. நோயை பரப்புவதும் இல்லை.

ஆனால் கொசு அப்படியல்ல. அது திட்டமிட்டு கடிக்கும். அதன் உறிஞ்சு குழல் முனையில் ஊசி போன்ற அமைப்பு இருக்கும். அதனால் நம் உடம்பில் குத்தி துளைத்துத்தான் இரத்தத்தை குடிக்கிறது.

நம் உடம்பிலிருந்து வெளிப்படும் இரத்தம் காற்றுப்பட்டால் உறைந்து கட்டியாகிவிடும். அப்போது கொசுவால் அதனை உறிஞ்சிக் குடிக்க முடியாது. இரத்தம் கட்டிபடாமல் இருப்பதற்கும் உறிஞ்சிக் குடிக்கவும் தோதா கொசு ஓர் ஏற்பாடு பண்ணும். தன்னுடைய உமிழ் நீரை அந்த இடத்தில் முதலில் சுரந்து விடும்.

கொசு கடித்த இடத்தில் அரிப்பையும் தடிப்பையும் ஏற்படுத்துவது இந்த உமிழ் நீர் தான். இதனால் தான் ஒருத்தரைக் கடித்துவிட்டு இன்னொருத்தரையும் அது கடிக்கும் போது இவருக்குள்ள நோய் அவருக்கும் பரவுகிறது.

இப்படிக் கடிக்கிறது. ஆண் கொசுவா? பெண் கொசுவா? தாய்க்குலம் மன்னிக்கவும். பெண் கொசுக்கள் தான் இப்படிக்கடிக்கிறது. ஆண் கொசுக்கள் தாவரங்களில் இருக்கின்ற ரசத்தை உண்டு வாழ்கிறது. அதன் வாய் அமைப்பும் இரத்தத்தை உறிஞ்சுகின்ற விதத்தில் இருப்பதில்லை. அதிக நாள் வாழ்கிறதும் நோயை பரப்புவதும் பெண் கொசு தான்.

இப்படி இரத்தம் குடிக்க கொசுக்கள் சில குறிப்பிட்ட உயிரினங்களை தேர்ந்தெடுப்பதுண்டு. சில கொசுக்கள் தவளையின் இரத்தத்தை மட்டுமே குடிக்கும். பறவைகளை தாக்குவது ஒரு வகை கொசுக்கள் என்றால் மனிதர்களை தாக்குவது வேறு வகையான கொசு.

கொசுக்கள் உற்பத்தியாக நாம் தான் காரணமாக இருக்கிறோம். கொசு நம் கையில் உட்கார்ந்தால் நாம் உடனே கொசுவை அடிக்கிறோம். அப்போது அந்த அடி நம் கையிலையும் படுகிறது. இதற்கு என்ன அர்த்தமென்றால் கொசு உற்பத்தியாக நாம் தான் காரணம் என்பதற்காக நம்மை நாமே அடித்துக்கொள்கிறோமாம். இப்படியொரு கற்பனை.

இதில் ஒரு வேடிக்கை பாருங்கள். வலிமையான சிங்கத்தைக் கூட வலை வீசி பிடித்து விடுகிற இந்த மனிதன் சாதாரண கொசுவுக்கு பயந்து கொண்டு இவன் வலைக்குள்ளே போய்விடுகிறான். மற்ற வலைகளிலெல்லாம் பிடிக்கப்பட்ட உயிரினம் உள்ளே இருக்கும். ஆனால் கொசு வலையில் மட்டும் மற்றவைகளை பிடிக்க வேண்டிய மனிதன் உள்ளே படுத்திருப்பான்.

இது ஒருத்தருடைய சிந்தனை. இதற்கு என்ன காரணம் என்றால் மற்ற உயிரினங்கள் தனியாக வரும். ஆனால் கொசு கூட்டம் கூட்டமாக வரும்.

எப்போதுமே கூட்டத்துக்கு வலிமை அதிகம் தானே.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனி ஆயுதம் தூக்கப் போவதில்லை

....“பத்து நாட்கள் சண்டை நடத்தி தீர்வு காண்பதைவிட, பத்து ஆண்டுகள் பேச்சுவார்த்தை நடத்தலாம்'. அதை நான் வழிமொழிகிறேன்.”

**“சரி... இப்போதைய நிலையில் என்னதான் தீர்வு?”**

பிரச்னை என ஒன்று இருந்தால் அதற்கு தீர்வும் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கக் கூடாது. இலங்கையில் பிரச்னை மட்டும்தான் இருக்கிறது.

**“இது யதார்த்தம். ஆனால், தீர்வு என்னவாக இருக்க முடியும் எனக் கருதுகிறீர்கள்?”**

நமக்கு அறம் சார்ந்து ஆயிரம் எதிர்பார்ப்புகள் இருக்கலாம். ஆனால், எதையும் யதார்த்தத்திலிருந்து பரிசீலிக்க வேண் டும். என்னளவில் இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தை முழுமையாக அமல்படுத்த வேண்டும் என்கிறேன். இப்போது அமலில் உள்ள மாகாண சபை என்பது, அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான். கிழக்கில் ஒரு தேர்தல் நடத்தி வடக்குடன் இணைந்திருப்பதா, தனித்திருப்பதா என்பதை முடிபுசெய்ய வேண்டும். இதற்கு அப்பால் ஜனநாயகத்து



க்கும் நீதிக்குமான போராட்ட இயக்கங்கள் கட்டப்படத்தான் வேண்டும். அதற்கு முன்பு, மக்கள், ஆயுதப் போராட்ட கலாசாரத்திலிருந்து முற்றிலுமாக விடுபட வேண்டும்.

'பிரச்னை என்றால் போட்டுத் தள்ளுவோம்' என்ற மனநிலையிலிருந்து, பேச்சுவார்த்தைக்கு அழைப்போம்' என்ற மனநிலைக்கு வர வேண்டும். தமிழர், சிங்களர் இரு தரப்பிலும் உள்ள ஜனநாயக சக்திகள் ஐக்கியப்படுவதன் வழியே, ஒரு நீண்ட காலத் தீர்வை நோக்கி நகர முடியும். அதற்கு, சிங்களப் பேரினவாதமும், கடும்போக்குத் தமிழ்த் தேசிய வாதமும் கைவிடப்பட வேண்டும்.

**“நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் பற்றிய உங்கள் கருத்து என்ன?”**


அது ஒரு காமெடி. சொத்துக்குவிப்பு வழக்கில் ஜெயலலிதாவுக்குத் தண்டனை வழங்கப்பட்டதும், செல்வி ஜெயலலிதா, பதவியை இழந்து சிறையில் அடைக்கப்பட்ட நிகழ்வு தமிழீழ மக்களுக்கு மிகுந்த மனவேதனையைத் தருகிறது' என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் உருத்திரகுமாரன் அறிக்கை வெளியிட்டார். தமிழ் சினிமாக்காரர்கள, “தெய்வத்துக்கே தண்டனையா?” என ஃப்ளெக்ஸ் வைத்ததற்கும் இதற்கும் பெரிய வேறுபாடு இல்லை. நடந்து முடிந்த இலங்கை ஜனாதிபதி தேர்தலில், தமிழ் மக்கள் என்ன நிலைப்பாடு எடுக்க வேண்டும் என்றுகூட அவர் சொல்லவில்லை. ஸ்கைப்பில் அமைச்சரவை நடத்திக்கொண்டிருக்கும் அவர்களால் மக்களுக்கு எந்தப் பிரயோஜனமும் இல்லை.

தமிழக அகதிகள் முகாம்களில் இருப்போர் மறுபடியும் இலங்கைக்கு அனுப்பப்படுவதைப் பற்றிய பேச்சுக்கள் இப்போது மேல் எழுந்துள்ளனவே? லட்சக்கணக்கான தமிழ மக்கள், முகாம்களில் வாழ்கிறார்கள். 30 வருடங்களுக்கு முன்பு இங்கு வந்த வர்களின் குடும்பங்களில் இங்கேயே பிறந்து வளர்ந்த ஒரு தலைமுறை உருவாகியிருக்கிறது. அவர்களுக்கு இதுதான் சொந்த நாடு. அவர்களை எப்படிக் கட்டாயப்படுத்தி வெளியேற்ற முடியும்? அப்படி அனுப்பினால் கிட்டதட்ட அது ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தம் போல, தமிழ்நாட்டிலிருந்து சென்று இலங்கை மலையகப் பகுதிகளைச் செப்பனிட்டு தேயிலை, காபி தோட்டங்களாக மாற்றியவர்களை மறுபடியும் அள்ளிக் கொண்டுவந்து தமிழகத்தில் தள்ளியதைப் போலதான் இருக்கும். அப்போது இலங்கையிலிருந்து தமிழகம் வந்த மக்களை மலையகத்திலிருந்து அழைத்து வந்த ரயிலுக்கு அழுகை கோச் எனப் பெயர். அந்த அளவுக்கு மக்கள் அந்த மண்ணோடு ஒன்றிப் போய் இருந்தார்கள். அதே போன்ற நிலைமை தான் இங்கும். மீண்டும் இலங்கைக்குச் செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்துவதும் நிராகரிப்பதும் மக்களின் விருப்பம். பல ஐரோப்பிய நாடுகளில் ஐந்து ஆண்டுகள் வாழ்ந்தாலே, குடியுரிமை கொடுத்து விடுகிறார்கள்!

(முற்றும்)

**-ஜூனியர் விகடன்-**

# ஆம் ஆத்மி வெற்றியின் ரகசியம்!




சொல்லி அடித்துவிட்டார் டெல்லி கெஜ்ரிவால். திரும்பிய பக்கமெல்லாம் கொண்டாட்டமாக ஆகிவிட்டது தலைநகரில்!

**“தேக்கோ தேக்கோ ஆம் ஆத்மி தாக்கத்து தேக்கோ...**

பாஞ்ச்சால் கெஜ்ரிவால்... (அஞ்சு வருஷம் கெஜ்ரிவால்)

பாஞ்ச்சால் கெஜ்ரிவால்...' - விஷால் தத்லானி அன்கோ உருவாக்கிய இந்தப் பாட்டை கடந்த இரண்டு மாதங்களாக தேசிய கீதம் போல ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவரவர்களுக்கு பிடித்த மெட்டில் பாடிக்கலக்கினார்கள். டெல்லி நகருக்கு உள்ளேயும் புறநகர் பகுதிகளிலும் மால்கள், பஜார்கள், தெருக்கள், கிராமங்கள் என்று எங்கேயும் திடீரென தோன்றும் டீ சர்ட், ஜீன்ஸ், ட்ரவுசர் என ஹை லுக் இளைஞர்களும் பல பாடல்களை பாடியபடியே டான்ஸ் ஆடுவார்கள். கூட்டம் கூடியதும், தலையில் காந்தி குல்லாவை வைத்துக்கொண்டு பாஞ்ச்சால் கெஜ்ரிவால் பாடலைத் தொடங்குவார்கள். அதன் விளைவுதான் ஆம் ஆத்மியின் அமோக வெற்றிக்குக் காரணமாகியிருக்கிறது. ஒருபக்கம் பி.ஜே.பி மண்ணைக்கவ்வ... இன்னொரு பக்கம் காங்கிரஸ் இருக்கும் இடமே தெரியவில்லை. இந்திய அரசியலில் மட்டு மல்ல, உலக அரசியலிலும் கெஜ்ரிவால் பற்றித்தான் பேச்சு.

**நரேந்திர மோடி எதிர்பார்க்காத ரிசல்ட்!**

டெல்லி சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் சோனியாவுக்கு எந்த அதிர்ச்சியையும் கொடுக்கவில்லை. போட்டியே பி.ஜே.பிக்கும் ஆம் ஆத்மிக்கும் என்றுதான் காங்கிரஸ் தலைமை நினைத்தது. காங்கிரஸ் ஆதரவுடன் அரவிந்த் மீண்டும் முதல்வர் ஆகலாம் என்றும் கணக்குப் போட்டது. ஆனால், பி.ஜே.பியோ நிச்சயம் தங்களது ஆட்சிதான் என்று நம்பியது. அதனால்தான் காங்கிரஸை விட கெஜ்ரிவாலை கடுமையாக பி.ஜே.பி விமர்சித்தது. இப்படியொரு தேர்தல் முடிவை மோடி எதிர்பார்கக வில்லை. கெஜ்ரிவாலை அராஜகவாதி என்றார் நரேந்திர மோடி. அரவிந்த் கெஜ்ரிவாலின் முன்னாள் நண்பர் கிரண் பேடியை அழைத்து வந்து, முதல்வர் வேட்பாளராக மாற்றினார்கள். 100க்கும் மேற்பட்ட பி.ஜே.பி எம்.பிக்கள் டெல்லியில் வலம் வந்தார்கள். 20 மத்திய அமைச்சர்கள் பிரசாரத்தில் குதித்தனர். இதுதவிர ஸ்டார் பேச்சாளர்கள் 40 பேர். பி.ஜே.பிக்காக இவ்வளவு பேர் இருந்தும் ஏனோ வாக்காளர்கள் மனதை மாற்ற முடியவில்லை.

**அப்படியே உல்டா ஆனது!**

புதுடெல்லியில் கடந்த 2014 மக்களவைத் தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி வாங்கிய வாக்குகளைக் கணக்கிட்டால் அந்தக் கட்சி 10 சட்டமன்றத் தொகுதிகளில்தான் முன்னணியிலிருந்தது. இதில் பி.ஜே.பி 60 தொகுதிகளில் முன்னணியிலிருந்தது. காங்கிரஸ்"க்கு ஓர் இடமும் இல்லை. இந்தமுறை அப்படியே உல்டா ஆகிவிட்டது. சீட்டுகள் மாறினாலும் பி.ஜே.பியின் ஓட்டு வங்கி அவ்வளவாக அடி வாங்கவில்லை. 2008 டெல்லி சட்டமன்றத் தேர்தலில் பி.ஜே.பிக்கு 36.3 சதவிகிதம், 2013 தேர்தலில் 33.1 சதவிகிதம். இப்போது 32.2 சதவிகிதம். கடந்த ஆறு ஆண்டுகளில் நான்கு சதவிகித வாக்குகள் சரிந்துள்ளன. புதிய இளம வாக்காளர்களின் எண்ணிக்கையை இந்தக் கட்சியால் தக்கவைக்க முடியவில்லை. இது மட்டுமல்ல. டெல்லி தேர்தலின் சரித்திரத்தை எடுத்துக் கொண்டால், பாகிஸ்தானிலிருந்து வந்த பஞ்சாபி அகதிகளும் வியாபாரிகளும்தான் ஜனசங்கத்திலும் பின்னர் பி.ஜே.பியிலும் வெறியோடு இருந்தனர். அவர்களது வாக்குகளை அந்தக்கட்சியால் தக்கவைக்க முடியவில்லை. புதுடெல்லியில் பி.ஜே.பி ஆட்சியைப் பிடித்தது 1993இல் மட்டும்தான். அந்த ஐந்து வருடத்திலும் மூன்று பேர்கள் முதலமைச்சர் ஆனார்கள். வெவ்வேறு மத இன வட்டார மக்களைக்கொண்ட டெல்லி மாநகரில் பி.ஜே.பிக்கு இடமில்லாமல்தான் இருந்தது. இப்போதும் அந்த கோஷ்டிப்பூசல் அதிகமாகத்தான் இருக்கிறது. இதில் கிரண் பேடியை வேட்பாளராக அறிவித்ததே அந்தக கட்சிக்கு நெகடிவ் ஆகிவிட்டது.

**கரைந்தது காங்கிரஸ்!**

அதிக வாக்குகளைப் பெற்று தொடர்ந்து டெல்லியில் ஆட்சியிலிருந்த ஒரே கட்சி காங்கிரஸ்தான். 1977, 1993 ஆகிய இரண்டு தேர்தலில் மட்டும்தான் அந்தக் கட்சி ஜெயிக்கவில்லை. காங்கிரஸ்"க்கு 52 சதவிகிதம் முதல் 40 சதவிகித வாக்குகள் எப்போதும் இருக்கும். சராசரியாக 40 தொகுதிகளையும் தக்கவைத்துக் கொள்ளும். ஆம் ஆத்மி கட்சி இல்லாத 2008 தேர்தலில் காங்கிரஸ் பெற்ற வாக்குகள் 40.3 சதவிகிதம். ஆனால் 2013 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ்"க்கு கிடைத்தது 24.55 சதவிகித வாக்குகள் தான். வெற்றிபெற்றது எட்டு தொகுதிகள் மட்டும்தான். இங்குதான் காங்கிரஸ் கட்சியின் சரிவு ஆரம்பமானது. இதில் ஆம் ஆத்மி கட்சிக்கு 29.49 சதவிகித வாக்குகள் கிடைததன. இப்போது காங்கிரஸ் மேலும அடி வாங்கி வெறும் 9.7 சதவிகித வாக்குகளை மட்டுமே பெற முடிந்தது. கிட்டதட்ட 30 சதவிகித வாக்குகளை ஆம் ஆத்மி கட்சிக்கு, காங்கிரஸ் படிப்படியாக தாரை வார்த்துள்ளது. இந்த முறை ஆம் ஆத்மி கட்சி பெற்ற வாக்குகள் 54.3 சத விகிதம். காங்கிரஸ்வாக்குகள்மட்டுமல்ல, மாயாவதியின் பி.எஸ்.பி 2008இல் பெற்ற 14.5 சதவிகித வாக்குகளும் ஆம் ஆத்மி பக்கம் திரும்பியுள்ளன.



அன்கிட் லால் ஆசிஸ் கேத்தான் ஆசில் தல்வார்

**-ஜூனியர் விகடன்-**

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடவுளின் பெயரைக் கூறிக்கொண்டு கொலைசெய்பவர்கள் மதத்தின் பிரதிநிதியா?

## ஒபாமா நியாயமான கேள்வி

(வோஷிங்டன்)—

**நாங்கள் இஸ்லாமுக்கு எதிராக போரிட வில்லை. இஸ்லாமை தவறான வழியில் பயன்படுத்துபவர்களுக்கு எதிராகவே போர் தொடுக்கின்றோம் என சுட்டிக்காட்டியுள்ள அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடவுளின் பெயரைச் சொல்லிக் கொண்டு அப்பாவி மக்களை கொல்கிறவர்கள் மதத்தின் பிரநிதிகள் அல்ல எனவும் தெரிவித்துள்ளார்.**



தீவிரவாதத்தை எதிர் கொள்ளுதல் தொடர்பான 3 நாள் உச்சிமாநாடு வோஷிங்டன் வெள்ளை மாளிகையில் நேற்று முன்தினம்முதல் நடைபெற்று வருகிறது. இந்தியா உட்பட 60 நாடுகளின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளனர். மாநாட்டின் 2ஆவது நாளான நேற்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கலந்து கொண்டு கூறினார். அப்போது அவர் கூறியதாவது.

நாங்கள் இஸ்லாமுக்கு எதிராக போரிடவில்லை. இஸ்லாமை தவறான வழியில் பயன்படுத்துகிறவர்கள் மீதுதான் போர் தொடுத்திருக்கிறோம். ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள், அல்கொய்தா தீவிரவாதிகள், இவர்களைப் போன்ற பிற தீவிரவாதிகள் சட்டத்தின் மீது நம்பிக்கை இழந்து செயற்படுகின்றனர். இவர்கள், தங்களை மதத்தலைவர்கள் போல காட்டிக் கொள்கிறார்கள்.

புனிதப் போராளிகளாகவும் காட்டிக்கொள்கிறார்கள். அப்படித்தான் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிர வாதிகள் தங்களை இஸ்லாமிய அரசு என அறிவிக்கிறார்கள். அவர்கள், அமெரிக்காவும், மேற்கத்தேய நாடுகளும் இஸ்லாமுக்கு எதிராக போரிடுவதாக தவறான பிரசாரத்தில் ஈடுபடுகின்றனர். அப்படித்தான் அவர்கள் தங்கள் இயக்கத்திற்கு ஆள் சேர்க்கிறார்கள்.

அப்படித்தான் அவர்கள் இளைஞர்களை, தீவிரவாதிகளாக மாற்ற முயற்சிக்கிறார்கள். இஸ்லாமும், மேற்கத்தேய நாடுகளும் மோதிக் கொள்வதாக அல்லது நவீன வாழ்வும், இஸ்லாமும் மோதிக் கொள்வதாக இவர்கள் செய்கிற பிரசாரத்தை நிராகரிக்க வேண்டும். அவர்கள் பொய்யை சொல்வதால், அவர்கள் முன்வைக்கிற வாதத்தை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

அவர்கள் விரும்புகிற சட்டபூர்வ உரிமையை நாம் ஒரு போதும் வழங்கவும் கூடாது. அவர்கள் மதத் தலைவர்கள் அல்ல. அவர்கள் தீவிரவாதிகள். இஸ்லாமிய சமூகத்தினருக்கு ஒரு பொறுப்பு இருப்பதாக நான் நம்புகிறேன். ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளும் சரி. அல்கொய்தா தீவிரவாதிகளும் சரி இஸ்லாமிய புனித நூலில் இருந்து குறிப்பிட்ட பகுதியை தங்களுக்கு சாதகமாக எடுத்துக்கொள்கிறார்கள்.

வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. கடவுளின் பெயரை சொல்லிக் கொண்டு, அப்பாவி மக்களை கொல்கிறவர்கள் பைத்தியக்காரர்கள் போன்றவர்கள்தானே தவிர அவர்கள் இஸ்லாம், கிறிஸ்தவம், புத்த மதம், யூத மதம், இந்து மதம் என எந்தவொரு மதத்தின் பிரதிநிதிகளும் அல்ல.

தீவிரவாதத்துக்கு எந்தவொரு மதமும் பொறுப்பு ஏற்கவில்லை. வன்முறைக்கும், தீவிரவாதத்துக்கும் மனிதர்கள்தான் பொறுப்பு.

வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக படை பலத்தை மட்டுமே கொண்டு போரிட்டு வெற்றி பெற்று விட முடியாது. சமூகங்களும் இதில் தங்கள் பங்களிப்பை செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)




## பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் மியன்மாரில் கலவரத்தால் வெளியேற்றம்!



வடகிழக்கு மியான்மாரில் அந்நாட்டு இராணுவத்துக்கும் பூர்வீகக் கிளர்ச்சிக் குழுவினருக்கும் இடையே மூண்டுள்ள கலவரத்தால் கோகங் என்ற பகுதியில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் அங்கிருந்து பத்தாயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக நீடித்து வரும் மோதலினால் 80 பேருக்கும் மேல் உயிரிழந்துள்ளதை அடுத்தே அவசர நிலை பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.

இப்பகுதியில் சுமார் 90 நாட்களுக்கு அவசர நிலையைப் பிரகடனப்படுத்திய அரசு அங்கு இராணுவச் சட்டத்தை யும் அமுல்படுத்தியது. இதனை அடுத்து பாரியளவில் இராணுவ முன்னெடுப்பு நிகழலாம் என்று ஏற்பட்ட அச்சத்தால் பெரும்பான்மை பூர்வீக சீன கோகங் இனத் தைச் சேர்ந்த குறைந்தது 30 ஆயி ரம் பேர் எல்லையைக் கடந்து சீனா வின் தென் மேற்கு யுன்னான் மாகா ணத்துக்குள் பிரவேசித்திருப் பதாக உள்ளூர் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 2009 இல் மியன்மாரை விட்டு வெளியேறி இருந்த கோகங் இனத் தலைவர் மீண்டும் திரும்பியதை அடுத்தே வன்முறைச் சம்பவங்கள் மீளத் தொடங்கியதாக அரச செய்தி நிறுவ னங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் சீனா தனது மியன்மார் எல்லையில் கட்டுப்பாட்டை அதிகரித்திருப்பதுடன் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருமாறு கோரிக்கையும் விடுத் துள்ளது. மியன்மாரில் தற்போது வெளியேறிய கோகங் இனத்தினர் உட்பட சிறுபான்மையினர் தமது பகுதிக்குப் பூரண அதிகாரம் வேண்டிப் பல ஆண்டுகளாகப் போராடி வருகின்றனர். மேலும் அடுத்த மாதம் இக்குழுக்களுடன் அரசு அமைதி ஒப்பந்தத்தை மேற்கொள்ளவும் திட்டமிட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அல்கொய்தா தீவிரவாதிகளின் தாக்குதலில் துனிஷியாவில் நான்கு பொலிஸார் உயிரிழப்பு




துனிஷியா நாட்டில் நேற்று முன்தினம் அல்கொய்தா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கி தாக்குதலில் 4 பொலிஸார் பலியாகியுள்ளனர்.

மத்தியதரை கடல் பகுதியில் வட ஆபிரிக்க கண்டத்தில் மேற்கே அல்ஜீரியாவையும், தென்கிழக்கே லிபியாவையும் எல்லைகளாக கொண்ட துனிஷியா மிகச் சிறிய நாடாகும். இங்கு ஏராளமான கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் பழங்குடி இன மக்கள் கலந்து வாழ்ந்து வரு கின்றனர்.

அல்ஜீரியா எல்லைக்கு அருகே துனிஷியாவின் காஸ்செரீன் நகரில் அல்கொய்தா ஆதரவு இயக்கமான ஒக்பா இப்ன் நாபா இயக்கத்தின் 20 பேர் அடங்கிய கும்பல், நேற்று முன்தினம் ரோந்து பணியில் ஈடுபட்ட துனிஷிய பாதுகாப்பு படையின் வாகனத்தின் மீது துப்பாக்கி தாக்குதல் நடத்தினார்கள். இத்தாக்குதலில் 4 பொலிஸார் பலியாகியுள்ளனர்.

அல்ஜீரிய எல்லை வழியாக துனிஷியாவுக்குள் ஊடுருவி முதன் முறையாக தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர். இதையடுத்து எல்லை பகுதியில் துனிஷிய இராணுவம் பலப்படுத்தப்பட்டுள்ளது என்று துனிஷிய இராணுவ செய்தி தொடர்பாளர் முகமது அலி அரவுரி கூறினார்.

மவுண்ட் சாம்பி பகுதியில் கடவுளின் அருளால் இராணுவத்தின் மீது தாக்குதல் நடத்தினோம். பொலிஸ் வாகனத்தின் மீது நடைபெற்ற தாக்குதலில் 4 பொலிசார் பலியானார்கள். எங்களது தாக்குதல் மேலும் தீவிர மடையும் என்று அல்கொய்தா ஆதரவு இயக்கமான ஒக்பா இப்ன் நாபா நேற்று முன்தினம் இணையத்தள பக்கத்தில் செய்தி வெளியிட்டது.

அல்கொய்தா ஆதரவு தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை அனைத்து வகையிலும் முறியடிப்போம். இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நடைபெற அனுமதிக்க மாட்டோம் என்று துனிஷிய பிரதமர் ஹபீப் எஸ்ஷித் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜுலை மாதம் சாம்பி பிராந்தியத்தில் அல்கொய்தா ஆதரவு ஒக்பா இப்ன் நாபா இயக்கம் நடத்திய தாக்குதலில் 15 இராணுவ வீரர்கள் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ்.தலைவனைக்கொல்ல அமெரிக்கா திட்டம் தீட்டி வருகின்றது

ஐ.எஸ்ஐ.எஸ்அமைப்பின் முக்கிய தலைவர்களைக் கொல்வதற்கு, அமெரிக்கா பட்டியல் ஒன்றைத் தயாரித்து வருகிறது. அந்தப் பட்டியலில் தற்போது 24 முக்கிய தலைவர்கள் உள்ளனர். அவர்களில் முதலிடத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலைவர் அபுபக்கர் அல் பக்தாதி உள்ளான்.

அமெரிக்கா தன்னைக் கொல்வதற்குத் தேடி வருகிறது என்று அல் பக்தாதிக்கு நன்றாகவே தெரியும். அதனால் எங்கோ ஓரிடத்தில் பதுங்கியுள்ளான். எனினும் ஈராக் மற்றும் சிரியா பகுதிகளில் தனது ஆதிக்கம் விரிவடைந்து வந்தாலும் வெளியே வராமல், மிகவும் ஜாக்கிரதையாக ஓரிடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குப் பதுங்கிச் செல்கிறார் என்று அமெ ரிக்க உளவுத் துறை வட்டாரங்கள் கூறுகின்றன.

அமெரிக்கா ஏற்கனவே இப்படியொரு பட்டியலைத் தயாரித்திருந்தது. அதில் இடம் பெற்றிருந்தவர்களில் வேதி ஆயுத நிபுணர் உட்பட 12 பேரை அமெரிக்கா கொன்றுள்ளது. அந்தப் பட்டியலில் தற்போது புதிதாகச் சிலர் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்று கூறப் பட்டுள்ளது.


ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பில் வேற்று நாட்டுப் பிணைக் கைதிகளை கொல்லும் "ஜிகாதி ஜான்" போன்ற நபர்களும் அமெரிக்காவின் தேடலில் இருந்தாலும், அந்த அமைப்பினருக்கு உத்தரவிடும் தளபதி மற்றும் அமைப்பைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் நபர் உள்ளிட்டவர்கள்தான் மிகத் தீவிரமாகத் தேடப்பட்டு வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கே புற்றுநோய் போன்றது
# கறுப்புப் பணம்

(டில்லி)

**சட்டவிரோதமாக வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கப்பட்டுள்ள கறுப்பு பணம் நாட்டுக்கே ஒரு புற்று நோயாக இருப்பதாக பாரதீய ஜனதா கட்சி தலைவர் சுப்ரமணியன் சுவாமி தெரிவித்தார்.**



டில்லியில் கறுப்பு பணம் குறித்த விவாதத்தின் பின் நேற்று முன் தினம் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

கறுப்பு பணத்தை மீட்டுக் கொண்டு வரும் பணி மெதுவாகவே நடந்து வருகிறது. என்னை பொறுத்த வரையில், இதில் எனக்கு மகிழ்ச்சியில்லை. ஆனால், நாங்கள் ஒரு ஜனநாயக கட்சி. பெரும்பான்மையானவர்கள் கறுப்பு பண மீட்பு பணி மெதுவாக, கவனமாக நடைபெற வேண்டும் என்றே விரும்புகிறார்கள்.

ஒரே தடவையில் செய்துவிடுவதை பலர் ஆதரிக்கவில்லை. எனினும், அந்த வேலையை மத்திய அரசு செய்து கொண்டுதான் இருக்கிறது. நிச்சயமாக கறுப்பு ணத்தை மீட்டுக் கொண்டு வருவோம் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது. பிரதமர் மோடி அதில் உறுதியாக இருக்கிறார். ஆனால், எல்லோரும் இதற்கு முன்னுரிமை தர வேண்டாம் என சொல்கிறார்கள்.

அது நடந்துவிடும். இது நடந்துவிடும், பாராளுமன்றம் நடக்காது. ராஜ்ய சபா நடக்காது என அச்சப்படுகிறார்கள். ஆனால், அரசு அதனுடைய வேலையை செய்து கொண்டு தான் இருக்கும்.

9 மாதங்களாக பல சாதனைகளை செய்த மத்திய அரசு ஏன் இதை மட்டும் செய்யவில்லை என எனக்கு கவலையாக இருக்கிறது. ஆனால், அடுத்த ஒரு ஆண்டிற்குள் நிச்சயமாக கறுப்பு பணத்தை மீட்டுக் கொண்டு வர முடியும். அதற்கு 2 இல்லது 3 வலுவான அமைச்சர்கள் வேண்டும். இந்திய பங்குச் சந்தைகளில் வெளிநாட்டு நிறுவனங்கள் முதலீடு செய்ய ஒரு கருவி யாக இருக்கும் பார்ட்டிசிப்பேட்டரி நோட்டுகள் தவறாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஹவாலா, பார்ட்டிசிப் பேட்டரி நோட்டுகள் போன்றவை கறுப்பு பணம் உருவாக காரணமாக இருக்கிறது. ரிசர்வ் வங்கியால் அமைக்கப்பட்ட தாராப்பூர் கமிட்டியின் அறிக்கையில், பார்ட்டிசிப்பேட்டரி நோட்டுகளின் வாயிலாக பங்குச் சந்தைகளை தவறாக பயன்படுத்தும் வாய்ப்பு இருப்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது. எனவே கறுப்பு பணம இந்த நாட்டுக்கே புற்றுநோய் போன்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## இலங்கை மீனவர்களின் 5 படகுகளை விடுவிக்க இந்திய நீதிமன்றம் உத்தரவு

இலங்கை மீனவருக்குச் சொந்தமான 5 படகுகளை விடுவிக்குமாறு இந்திய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் இந்திய கடல் எல்லைக்குள் நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டில் 26 மீனவர்கள் 5 படகுகளுடன் கைதாகினர். இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டமையைத் தொடர்ந்து இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர். எனினும் அவர்களின் படகுகள் விடுவிக்கப்படவில்லை. இப்போது இராமநாதபுரம் நீதிமன்றம் தடுத்து வைக்கப்பட்ட இலங்கை மீனவர்களுக்கு சொந்தமான 5 படகுகளை விடுவிக்க உத்தரவிட்டுள்ளது. (இ-5)

## அணுசக்தி ஒத்துழைப்பு குறித்து இலங்கை - பாகிஸ்தான் பேச்சு!

**இந்திய ஊடகம் தகவல்**

(சென்னை)

இலங்கை அணுசக்தி ஒத்துழைப்பு குறித்து பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்தியா சென்றிருந்த அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க டில்லியில் அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளார்.

பாகிஸ்தானுடன் உறவினை வலுப்படுத்திக் கொள்ளவென தொழில்நுட்ப திறன் மற்றும் மனித திறமைகளை" உடன்படிக்கையில் கைச்சாத்திட இலங்கை எதிர்பார்த்துள்ளது.

ரஷ்ய அரசுக்குச் சொந்தமான ROSATOM நிறுவனத்துடன் முன்கூட்டியே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளதென பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படவும் இலங்கை எதிர்பார்த்துள்ளது. ஆனால் அந்த நாடுகளுடன் அணுசக்தி ஒத்துழைப்பு கிடையாது என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார் என இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-5)




## கெஜ்ரிவாலுக்கு இருமல் யோகா பயிற்சியாளரை பரிந்துரை செய்த மோடி

(பெங்களூர்)

டில்லியின் முதல்வராக பொறுப்பேற்றுள்ள அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு தொடர்ந்து இருமல் இருப்பதால், தனது யோகா பயிற்சியாளர் டாக்டர் எச்.ஆர். நாகேந்திராவிடம் ஆலோசனை பெறுமாறு பிரதமர் நரேந்திர மோடி பரிந்துரை செய்துள்ளார்.



பெங்களூரல் வசித்து வரும நாகேந்திரா, சுமார் 10 ஆண்டுகளாக மோடிக்கு பயிற்சியாளராகவும், ஆலோசகராகவும் உள்ளார்.

டில்லியில் நடந்த விழா ஒன்றில் கெஜ்ரிவால் தொடர்ந்து இருமலால் அவதிப்பட்டதைப் பார்த்த மோடி, கெஜ்ரிவாலை தொடர்பு கொண்டு நாகேந்திராவைப் பார்க்குமாறு பரிந்துரை செய்தார்.

இதுவரை கெஜ்ரிவால் நாகேந்திராவை சந்திக்கவில்லை என்றாலும், அவர் விரைவில் சந்திக்க வாய்ப்பிருப்பதாக தெரிய வருகிறது. (இ-5)

## ஜெ.சொத்துக் குவிக்கவில்லை என்பதற்கு ஆதாரங்கள் ஏதும் உங்களிடம் உண்டா?

தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, சசிகலா, சுதாகரன், இளவரசி ஆகியோர் மீதான சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை கர்நாடக உயர் நீதிமன்றத்தில் நீதிபதி சி.ஆர்.குமாரசாமி முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது சுதாகரன,இளவரசியின் தரப்பில் சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதியும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான சுதந்திரம், அசோகன் ஆகியோர் ஆஜராகினர்.

இதையடுத்து சுதந்திரம் வாதிட்டதாவது,சுதாகரன், இளவரசிக்கு சொந்தமாக சிறுதாவூரில் உள்ள பங்காவை 1997ஆம் ஆண்டு தமிழக இலஞ்ச ஒழிப்புத்துறை மதிப்பீடு செய்தது. அப்போது அதன் மதிப்பு ரூ.5.40 கோடி என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.ஆனால் அவர்கள் மதிப்பீடு செய்தபோது அங்கு கட்டடம் முழுமையாக கட்டப்படவில்லை.இருப்பினும் தோராயமாக மதிப்பீடு செய்ததாக அரசு தரப்பு சாட்சி எண்107இல் இருந்து 120 வரையிலான சாட்சிகள் நீதிமன்றத்தல் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

மேலும் சிறுதாவூர் பங்களாவை மதிப்பீடு செய்ததில் நிறைய குளறுபடி நடந்துள்ளது. உதாரணமாக ரூ.80 (சதுர அடி) மதிப்புள்ள சலவைக் கல்லை ரூ.20,675 (சதுர மீற்றர்) என மதிப்பீடு செய்துள்ளனர். இதேபோல வெள்ளை சலவைக் கல்லை ரூ.20,775 எனவும் மதிப்பிட்டுள்ளனர்.

அரசு தரப்பு சாட்சிகளின் வாக்குமூலம் குறித்து பெங்களூர் சிறப்பு நீதிமன்ற நீதிபதி சுதாகரன், இளவரசியிடம் கேள்வி எழுப்பவில்லை. அவ்வாறு கேட்கப்படாத குற்றச்சாட்டை ஆதாரமாக கொண்டு தீர்ப்பளிக்கக் கூடாது. ஆனால் இவ்வழக்கில் இத்தகைய நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றார்.

**ஆதாரங்கள் எங்கே**

அப்போது குறுக்கிட்ட நீதிபதி, "அரசு தரப்பு சாட்சியங்களின் அடிப்படையில் இளவரசியிடம் சுமார் 650 கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. அதில் 95 சதவீதத்துக்கும் அதிகமான கேள்விகளுக்கு, ஆம், இல்லை" என்று மட்டுமே பதில் அளித்துள்ளார்.போதிய விளக்கம் அளிக்கவில்லை. உங்களுக்கு சந்தேகம் இருந்தால் இளவரசி நீதிமன்றத்தில் அளித்த வாக்குமூலத்தை படியுங்கள் என்றார்.

இதையடுத்து சட்டத்தரணி சுதந்திரம், பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் நீதிபதியின் கேள்விகளுக்கு இளவரசி அளித்த பதில் முழுவதையும் படித்தார். மேலும் வெள்ளிக்கிழமை சுதாகரன், இளவரசியின் சொத்து பட்டியலை தனித்தனியாக தாக்கல் செய்வதாகவும் தெரிவித்தார்.



அதற்கு நீதிபதி, "குற்றவாளிகள் தரப்பில் வாய்மொழியாக முன் வைக்கும் வாதங்களை வைத்து தீர்ப்பு வழங்கமுடியாது. ஆதாரங்கள்,ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் அடிப்படையில்தான் தீர்ப்பு வழங்கமுடியும். ஜெயலலிதா முதலவராக இருந்தபோது அவரது வருமானத்தை பயன்படுத்தி சசிகலா, சுதாகரன், இளவரசி சொத்து குவித்தார்கள் என்பது தான் குற்றச்சாட்டு. அதனை எப்படி ஆதாரத்துடன் பொய் என நிரூபிக்க போகிறீர்கள்?

சுதாகரனும் இளவரசியும் சட்டவிரோதமாக சொத்து குவிக்கவில்லை என்பதற்கு உங்களிடம் என்ன ஆதாரம், ஆவணங்கள் இருக்கின்றன? அந்த குற்றச்சாட்டு பொய் என நிரூபிக்கும் எந்த ஆதாரமும் ஆவணத்தையும் நீங்கள் இது வரை தாக்கல் செய்யவில்லை என நீதிபதி குமாரசாமி தெரிவித்தார். இதையடுத்து வழக்கின் விசாரணை நேற்று ஒத்தி வைக்கப்பட்டது. (இ-5)

## நம்பிக்கை வாக்கெடுப்புக்கு முன் திருப்பம்; பீஹார் முதலமைச்சர் மாஞ்சி இராஜினாமா

பீஹார் சட்டப்பேரவையில் நேற்று நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறவிருந்த நிலையில் முதல்வர் ஜிதன்ராம் மாஞ்சி தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதற்கு முன்னதாகவே மாநில ஆளுநர் கேசரிநாத் திரிபாதியின் முதன்மைச் செயலர் பிரஜேஷ் மெஹ்ரோத்ரா சந்தித்த மாஞ்சி தனது இராஜினாமா கடிதத்தை கொடு த்துள்ளார்.முதல்வர் பதவியை, மாஞ்சி இராஜினாமா செய்துள்ளதை, ஆளுநரின் முதன்மைச் செயலரும் உறுதிப்படுத்தியுள்ளார். இராஜினாமா கடிதத்தில் என்ன இருந்தது என்ற கேள்விக்கு, "ஒற்றை வரியில் இராஜினாமாவை தெரிவித்திருந்தார் மாஞ்சி" என்றார்.

முற்பகல் 11.30 மணியளவில் மாஞ்சி, அவரது இல்லத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அவர் கூறும்போது, "பீஹார் சட்டப்பேரவை மரபை சபாநாயகர் பின்பற்றவில்லை. அவரது நடுநிலைமையை நான் சந்தேகிக்கிறேன். எனக்கு ஆதரவாக செயற்பட்ட எம்.எல்.ஏ.க்கள்., அமைச்சர்கள் மிரட்டப்பட்டுள்ளனர்.

எனக்கும் கொலை மிரட்டல்கள் வந்தன. எனக்கு ஆதரவு தெரிவிக்க 140 எம்.எல்.ஏ.க்கள் தயாராக இருந்தனர். அவர்களுக்கு தொடர்ச்சியாக கொலை மிரட்டல் வந்தது. எனது ஆதரவாளர்கள் நலனுக்காகவே நான் இராஜி னாமா செய்தேன்.

இப்போது கூட எனக்கு நம்பிக்கை இருக்கிறது பேரவையில் பெரும்பான்மையை என்னால் நிரூபித்திருக்க முடியும் என்று.

இரகசிய வாக்கெடுப்பு நடத்தியிருந்தால் நான் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பேன். ஆனால், அதற்கு சபாநாயகர் ஒப்புக்கொள்ளவில்லை. இப்போதைய சூழலில், பீஹார் அரசியல் குழப்பங்களுக்கு தீர்வு காண மீண்டும் தேர்தல் நடத்துவதே ஒரே தீர்வாகும்" என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய குறைபாடுகளை தீர்க்கக்கோரி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்போம்

## ஆனந்தன் எம்.பி.திட்டவட்டம்

(மன்னார்)

**ஆண்களுக்குநிகரானஉங்களின் அசாத்திய திறமைகளை இன்றைய போட்டிகளில் காணக்கூடியதாக இருக் கிறது. தமிழ்சமூகத்திற்கு ஆற்ற வேண் டிய சேவைகள் நிறையவே உண்டு. அது உங்களால் நிச்சயம் சாத்தி யப்படும் என தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் வன்னி மாவட்ட பாரா ளுமன்ற உறுப்பினர்சிவசக்திஆனந் தன் தெரிவித்துள்ளார்.**

மன்னார் பெண்கள் புனித சவேரியார் தேசிய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப்போட்டி நேற்று முன் தினம் கல்லூரியின் முதல்வர் அருட்சகோதரி கில்டா சிங்கராஜர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே.இவ்வாறு புகழாரம் சூட்டியுள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

இங்கு நடைபெற்ற அனைத்து வகை போட்டிகளிலும் ஆண்களுக்கு நிகரான உங்களின் அசாத்திய திறமைகளை காண முடிந்தது.

கல்வி, விளையாட்டு, தொழிற்றுறைகளில் எதிர்காலத்திலும் ஆண்களுக்கு சவாலாக ஜொலிப்பீர்கள் என்பதில் எமக்கு எவ்வித ஐயமும் இல்லாத நம்பிக்கை உள்ளது.

பௌதீக வளப்பற்றாக்குறைகள் இன்றும் கூட உள்ள போதும், தேசிய கல்லூரியாக புனித சவேரியார் மிளிர்கிறது எனின், அது அனைத்து துறைகளிலும் உடல் உள ரீதியாக நீங்கள் ஆற்றிய பங்களிப்புகளினாலேயே சாத்தியமாகியுள்ளது.

வெற்றியையும் தோல்வியையும் சமமாக கொள்ளும் உங்களின் மனப்பக்குவத்தை இன்றைய போட்டிகளில் அவதானிக்க முடிந்தது.

தமிழ் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறையவே உண்டு. அது உங்களால் நிச்சயம் சாத்தியப்படும்.

இக்கல்லூரியின் கணிதம், விஞ்ஞானம் உள்ளிட்ட முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் கட்டட இடவசதி போதாக்குறை காணப்படுவதுடன் விளையாட்டுத்திடலில் நீர் தேங்குவதால் வடிகால் அமைப்பு வசதி தேவையாகவுள்ளது.

ஆயிரத்து எழுநூற்று ஐம்பது பிள்ளைகள் கல்வி கற்கும் கல்லூரியில் மலசலகூட வசதிகள் போதாமை பெரும் நெருக்கடியாகவுள்ளது.

கடந்த காலங்களில் கல்வி மற்றும் அபிவிருத்தியில் பல தேவைகள் இருந்தும், போர்ச்சூழலை காரணம் காட்டி அரசு காலம் தாழ்த்தியதால் பிரச்சினைகள் நீண்டு கொண்டே வந்துள்ளன. இனியும் சாக்குப்போக்குகளை கூறி காலம் கடத்த முடியாது. தற்போதைய ஆட்சியில் இவ்வாறான அத்தியாவசிய குறைபாடுகளுக்கு கட்டாயம் தீர்வு காணப்பட வேண்டும். இவை தொடர்பில் நாம் புதிய அரசின் கவனத்துக்கு கொண்டு செல்வோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருக்கும் தேவைகளை பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடுமையான அழுத்தங்களை கொடுப்போம் என்று கூறினார். (அ-2)



துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 5 புலமை பரிசில் பரீட்சை– 2014 இல் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் துணுக்காய் கல்விவலய மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற போது....

(படங்கள்:–மல்லாவி செய்தியாளர்)

# மின் ஒழுக்கு காரணமாக முல்லை.மாவட்ட செயலக வளாகத்தினுள் தீ பரவல்



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட செயலக வளாகத்திலுள்ள பழைய கட்டடத் தொகு தியின் ஒரு பகுதியில் திடீரென ஏற்பட்ட தீயானது பொலிஸார், பொது மக்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்ததாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மாவட்ட செயலக பழைய கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் இரவு ஒரு பகுதியில் தீ பரவியது.

ஏற்கனவே அக்கட்டடத்தில் இருந்தஆவணங்கள் மற்றும் அலுவலர்களின் முக்கியமான சேவைகள் புதிய கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தன.

தீ ஏற்பட்ட பகுதியின் முக்கிய ஆவணங்கள் ஒன்றும் இருக்கவில்லை. இதனால் அவை பாதுகாக்கப்பட்டன.

பாவனைக்குதவாத பழைய தளபாடங்கள் அங்கு வைக்கப்பட்டிருந்திருக்கலாம். அவை சேத மடைந்திருக்கலாம் என்று கூறினார்.

இந்தத் தீ விபத்து தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நிலையில் மின்னொழுக்கு காரணமாக தீ பரவியதாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

# தடைசெய்யப்பட்ட மீன்முறைகளை கையாண்டால் உடன் நடவடிக்கை

## வடக்கு மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு

நந்திக்கடலில் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை கையாள்பவர்களுக்கு எதிராக உடன் நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கடற்றொழில் திணைக்களங்களுக்கு பணித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

நந்திக்கடல் பிரதேசத்தில் தற்போது இறால் சீசன் இடம்பெறுவதால் வட்டுவாகல், நந்திக்கடல் பகுதியில் இரவு வேளைகளில் தடை செய்யப்பட்ட தங்கூசி வலை, கூட்டு வலை, படுப்பு வலைகளைப் பயன்படுத்தி மீன் மற்றும் இறால் பிடியில் பலரும் ஈடுபடுகின்றனர் என அங்குள்ள மக்கள் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம் முறையிட்டனர்.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்டத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயங்களை கருத்தில் கொண்டு தடை செய்யப்பட்ட தொழில் முறைகளை கையாண்டு எமது கடல் வளத்தையும் சுரண்டுகின்ற எவருக்கும் இடம் கொடாது உடன் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அவர் பணித்துள்ளார்.

ஒரு சிலரது சுயநலத்துக்காக எமது கடல் வளத்தை அழிக்க முடியாது என்றும் சட்டத்தின் முன் யாவரும் ஒருவரே என்றும் அவர் தெரிவித்தார். (அ-2)

# முதலுதவி பயிற்சி முகாம்

(மல்லாவி)

அக்ரொட் நிறுவனத்தின் நிதியனுசரணையுடன் பின் தங்கிய கிராமங்களான உயிலங்குளம், கோட்டை கட்டிய குளம், தென்னியன்குளம் ஆகிய கிராமங் களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கு சுகாதார விழிப்புணர்வு தொடர்பான முதலுதவி பயிற்சிமுகாம் நடைபெறவுள் ளது.

இப்பயிற்சி முகாம் இன்று சனிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை உயிலங்குளம் அ.த.க.பாடசாலை மண்டபத்தில் உயிலங்குளம் கிராம அபிவிருத்தி முன்னேற்ற சங்கத்தின் தலைவர் அ.சிறீகாந்தன் தலைமையில் நடைபெறும்.

இப்பயிற்சி முகாமின் வளவாளர்களாக மல்லாவிஆதார வைத்தியசாலை வைத்தியர் எஸ்.சுஜீந்திரன், மல்லாவி பிரதேச பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எஸ்.அராபத் உட்பட ஜீவகாருண்யம் அரவிந்தன் ஆகியோர் இணைந்து முதலுதவி பயிற்சிகளையும் கருத்துரைகளையும் வழங்கவுள்ளனர்.(அ-2-15)




# பேடன் பவல் தினத்தை முன்னிட்டு இரத்ததானமுகாம்

(குருமன்காடு)

சாரணர் தந்தை பேடன் பவல் பிரபுவின் 158 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட ஜனாதிபதி சாரணர் மன்றமும் திரி சாரணர் குழுவும் இணைந்து 8 ஆவது மாபெரும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை வ/வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சாரணர் மன்றத்தின் தலைவர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

உயிர்காக்கும் உன்னதபணியில் கலந்து கொள்ள விரும்பும் குருதிக் கொடையாளர்கள் 0766644059,0718 809757,077073 3719 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாணத்தில் நுண்ணியல் ஆய்வுகூடம் அமைக்க வேண்டும்

(மல்லாவி)

**வடக்கு மாகாணத்தின் கீழுள்ள ஐந்து மாவட்டங்களில் குடிநீர் மற்றும் உணவுப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு நுண் ணியல் ஆய்வு கூடம் இன்மையால் பரிசோதனைகளை செய்ய முடியாதுள்ள தாகவும் தென்பகுதியிலுள்ள பரிசோத னைக் கூடங்களுக்கு மாதிரிகள் அனுப் பப்பட்டுள்ள போதிலும் அங்கு பரிசோத னைகள் செய்ய முடியாது ள்ளதாக திருப்பி அனுப்ப ப்படுவதாகவும் வடக்கு மாகாண பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வடக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களில் மக்களின் குடிநீர் கிணறுகளின் மாதிரிகளையும் மற்றும் வர்த்தக நிலையங்கள் உணவுச்சாலைகள் என்பனவ ற்றில் கைப்பற்றப்படும் உணவுப் பொருட்களின் மாதிரி களையும் பரிசோதனை செய் வதற்கு வடக்கு மாகாணத்தில் இதுவரை நுண் ணி யல் ஆய்வு கூடம் ஒன்று நிறுவப்ப டவில்லை.

இதனால் சேகரிக்கப்படும் மாதிரிப் பொருட்களை தென்பகு தியிலுள்ள களுத்துறை, கொழும்பு , அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் இயங்கும் நுண்ணியல் ஆய்வு கூடங்களுக்கு அனுப்புகின்ற போது அங்கு அவை பரிசோதனை செய்வதற்கு கால அவகாசம் இல்லையென திருப்பி அனுப்பப்படுகின்றது.

அண்மையில் முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து கொண்டு செல்லப்பட்ட ஆய்வுக்கான மாதிரிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இதனால் இறுதியுத்தத்தில் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் குடிநீர் கிணறுகளின் மாதிரிகளை ஆய்வு செய்ய முடியாதுள்ளது.

இதனால் மக்கள் பாதிப்புக்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட் டப்படுகின்றது.

வன்னியில் யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் மக்கள் தொண்டுப் பணியில் ஈடுபட்டிருந்த வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனமான ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் நவீன இலத்திரனியல் தொழில்நுட்பத்துடனான நுண்ணியல் ஆய்வுகூடம் ஒன்று கிளிநொச்சி நகரில் அமைக்கப்பட்டு இயங்கியதுடன் அன்றைய காலப் பகுதியில் குடிநீர் மாதிரிகளை உடனுக்குடன் சுகாதார பரிசோதகர்கள் ஆய்வுக்குட்படுத்தி நோய்களில் இருந்து மக்களைப் பாதுகாத்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

குறித்த ஆய்வுகூடம் விமானக் குண்டு வீச்சின் மூலம் முற்றாக அழி வடைந்துள்ளதாக சுட்டிக் காட்டப் படுகின்றது. (அ-2-15)






புதுக்குடியிருப்ப பிரதேச எழுத்தாளர் அலெக்ஸ் பரந்தாமன் எழுதிய *அழுகைகள் நிரந்தரமில்லை* என்னும் சிறுகதைத் தொகுப்பும் மற்றும் *மரணவலிகள்* என்னும் கவிதைத் தொகுப்பும் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதன்போது, சிறுகதைத்தொகுப்புக்கான ஆய்வுரையினை முல்லை வலய (தமிழ்த்துறை) உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.பீதாம்பரம் நிகழ்த்துவதையும் கவிதைத்தொகுப்புக்கான ஆய்வுரையினை கலாபூஷணம் நடராசா இராமநாதன் உரையாற்றுவதனையும் நூல்வெளியீடு நடைபெறுவதையும் படங்களில் காணலாம்.

# கண்டாவளை பி.செயலகத்திற்கு விரைவில் புதிய கட்டடம் அமையும்

## கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி )

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலகத்தின் புதிய கட்டடம் உரிய இடத்தில் அமைக்கப்படுவதற்கு இவ்வாண்டிலிலேயே நடவடிக்கை எடுக்கப்படும் என கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள 4 பிரதேச செயலகம் அமைந்துள்ளதுடன் அவற்றில் 3 பிரதேச செயலகங்களுக்கு புதிய கட்டடங்களில் இயங்கி வருகின்ற போதும் கண்டாவளை பிரதேச செயலகத்துக்கு நிரந்தர கட்டடம் இதுவரையில் அமைக்கப்படவில்லை. இதனால் பல்வேறு இட நெருக்கடிகளுக்கும் மத்தியில் இந்த பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது.

பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு ஓர் இடத்திலும் ஏனைய நிர்வாகக் கிளைகள் வேறொரு இடத்திலும் இயங்கி வருகின்றன.

தற்போது பிரதேச செயலகம் அமைந்துள் காணி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான காணியாகவும் வருடாந்தம் வெள்ளத்தில் மூழ்கும் பகுதியாகவும் இருக்கிறது.

இதனால் குறித்த இடத்தில் பிரதேச செயலகத்தின் நிரந்தரக்கட்டடம் அமைக்க முடியாத நிலை காணப்பட்டதனால் வேறு இடத்திலுள்ள பொது காணியொன்றில் நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அதற்கான தடைகள் ஏற்பட்டமையால் புதிய கட்டடம் அமைப்பதற்கான நிதி கடந்த ஆண்டில் திறைசேரிக்கு திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஐந்து பாடசாலைகளுக்கு துடுப்பாட்ட உபகரணங்கள்

## புலம்பெயர் அமைப்பு வழங்கியது

புலம்பெயர் தமிழ் உறவுகளினால் பிரிட்டிஷ் (தமிழ்) மென்பந்து துடுப்பாட்ட சம்மேளனத்தினால் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கான கடினப்பந்து, மென்பந்து துடுப்பாட்ட உபகரணங்கள் நேற்று மு.ப 10 மணியளவில் அந்தந்த பாடசாலைகளுக்கு கையளித்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, புலம்பெயர் வாழ் தமிழ் உறவுகளால் பிரிட்டிஷ் நாட்டில் மென்பந்து துடுப்பாட்ட சம்மேளனம் எனும் அமைப்பு ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

இவ்வமைப்பினர் வன்னி இறுதி யுத்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை வழங்கியுதவும் நோக்குடன் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளான மு/மாங்குளம் ம.வித்தி, மு/மல்லாவி ம.கல்லூரி,கிளி/ கண்டாவளை ம.வித்தி, கிளிநொச்சி ம.வித்தி, கிளி/உருத்திரபுரம் ம.வித்தி ஆகிய 5 பாடசாலைகளுக்கு தலா 30 ஆயிரம் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியானகடினப்பந்துதுடுப்பாட்ட உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

அவர்களது இம்முன் மாதிரியான செயற்பாட்டை மேற்படி மாவட்டங்களைச்சேர்ந்த கல்வி சமூகத்தினர் பாராட்டி நன்றி தெரிவித்துள்ளனர். (அ-2-15)

# கரைச்சி கோட்ட மட்டத்தின் பெருவிளையாட்டு முடிபுகள்

இவ்வாண்டு நடைபெற்ற கிளிநொச்சி வலயத்தின் கரைச்சி கோட்டமட்ட பெரு விளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விபரங்களை கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது. இதில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு;

15 வயது பிரிவு கரம்
(பெண்கள்)

கிளி/கனகபுரம் ம.வி,கிளி/சிவநகர் அ.த.க பாடசாலை,கிளி/உருத்திரபுரம் ம.வி

19 வயது பிரிவு கரம்
(பெண்கள்)

கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி,கிளி/கனகபுரம் ம.வி, கிளி/சிவநகர் அ.த.க.

15 வயது பிரிவு கரம்
(ஆண்கள்)

கிளி/கனகபுரம் ம.வி,கிளி/கிளிநொச்சி இந்துக் கல்லூரி, கிளி/வட்டக்கச்சி ம.வி

19 வயது பிரிவு கரம்
(ஆண்கள்)

கிளி/ வட்டக்கச்சி ம.வி,கிளி/கனகபுரம் ம.வி,கிளி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி.

பூப்பந்து 15 வயது பிரிவு
(ஆண்கள்)

கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளி.இந்துக்கல்லூரி, கிளி. உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

பூப்பந்து 15 வயது பிரிவு
(பெண்கள்)

கிளி.கனகபுரம் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், கிளி.உருத்திரபுரம் மகா வித்தியாலயம்

பூப்பந்து 19 வயது பிரிவு
(ஆண்கள்)

கிளி/கிளிநொச்சி மகா வித்தியா லயம், கிளிநொச்சி இந்துக் கல் லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியா லயம்.

பூப்பந்து 19 வயது பிரிவு (பெண்கள்)

கிளி/கிளிநொச்சி மகா வித்தியா லயம்,கிளிநொச்சி இந்துக் கல்லூரி,கிளி.கனகபுரம் மகா வித்தியாலயம். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பிக்கையை இனிமையான எதிர் காலங்களை உருவாக்கும்.
- ஸ்ரீ அரவிந்த அன்னை

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# பாதுகாப்பற்ற ரயில் கடவை வடக்கு மக்களுக்கு ஆபத்து!

## சிறிதரன் எம்.பி குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கான புகையிர சேவைகள் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்து புகையிரதக்கடவைகள் சரியாக நிர்வகிக்கப்படாத காரணத்தால் மக்கள் விபத்தினால் உயிரிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் அசமந்தபோக்கே காரணமென பா.உறுப்பினர் சி.சிறிதரன் குற்றம் சுமத்தியுள்ளதுடன் கடும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி முதலாம் ஒழுங்கை சந்திப் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையில் கோப்பாயை சேர்ந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான வ.குகப்பிரியன் இரயிலினால் மோதுண்டு ஆபத்தான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்.

இப்படியான இரயில் விபத்துக்கள் மேலும் வடபகுதியில் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.கடந்த ஆண்டுகளில் யாழ்ப்பாணத்துக்கான புகையிர சேவை ஆரம்பிக்கப்பட்ட போதும் இரயில் சேவையை நடத்தும்போது கவனிக்க வேண்டிய மிக முக்கியமாக கடவைகளை சரியாக நிர்வகிக்கும் பணியை செய்ய இரயில்வே அதிகாரிகளும் இரயில்வே திணைக்களமும் தவறிவிட்டதுடன் மனித உயிர்களுடன் விளையாடுகின்ற மிகமோசமான அசமந்தப் போக்கை கொண்டிருக்கின்றது.

தேர்தல் காலங்களில் மக்களின் வாக்குகளை பெற்றுக்கொள்வதற்காக கடந்த அரசாங்கத்தால் அவசரஅவசரமாக தொடக்கப்பட்ட இந்த இரயில் சேவை பல உயிர்களை வடபகுதியில் காவு கொண்டுள்ளதுடன் பலர் படுகாயங்களுக்கு உள்ளாகவும் காரணமாக இருந்திருக்கின்றது.

வடபகுதியில் அநேகமாக கிராமங்களை ஊடறுத்து செல்லும் இந்த இரயில் பாதைகளின் குறுக்கே ஏராளமான கடவைகள் உண்டு.ஆனால் இந்த கடவைகளை நிர்வகிக்கும் பணியாளர்கள் அங்கு இல்லை. கடவைகளின் அருகே இரயில் வரும் வரை யாருக்கும் இரயில் வருவது தெரியாமலேயே உள்ளது.

கடவைகளின் ஊடாக பயணிக்கும் வயோதிபர்கள், சிறுவர்கள் செவிப்புலனிழந்தோர். விழிப்புலனிழந்தோர் என ஏராளமானவர்கள் இரயில் கடவைகளை உயிர்பயத்துடனேயே கடக்க வேண்டிய நிலை வடபகுதியில் காணப்படுகின்றது என தெரிவித்துள்ள அவர், இந்த நிலையை மாற்றி வட பகுதியில் உள்ள இரயில் கடவைகள் பாதுகாப்பான இரயில் கடவைகளாக ஆக்கப்படவேண்டும். அத்துடன் இந்த கடவைகளுக்கு பணியாளர்கள் நியமிக்கப்பட்டு அது நிர்வகிக்கப்படவேண்டுமென வலியுறுத்தி இரயில்வே அமைச்சருக்கு அவசர கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார். (எ-11)

## சர்வதேச விசாரணையில் மட்டுமே தமிழர்கள் நம்பிக்கை கொள்வர்

ரிஷானா என்ற இலங்கைப் பெண்ணுக்கு சவூதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

குழந்தைக்குப் பால் பருக்கும் போது புரைக்கேறி குழந்தை இறந்து போனமைக்கு ரிஷானாவே காரணம் என்ற அடிப்படையில், மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

குழந்தைக்குப் பால் ஊட்டும் போது ரிஷானா பராயம் அடையாத சிறுமி. அறியாப் பருவம். தவறுதலாக அப்படி நடந்து விட்டது. எனவே ரிஷானாவைக் காப்பாற்ற வேண்டும் என்று சவூதி மன்னர் முதல் மனித நேய அமைப்புக்கள் வரை கடும்பிரயத்தனம் எடுத்தன.

இருந்தும் சவூதிச் சட்டத்தின்பிரகாரம்ரிஷானாவுக்கு மன்னிப்புக் கொடுக்கும் அதிகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கே உண்டு.

அந்த அடிப்படையில் இறந்து போன குழந்தையின் பெற்றோர் மட்டுமே ரிஷானாவுக்கு மன்னிப்பு அளிக்க முடியும்.

எனினும் இறந்த குழந்தையின் தாயார், ரிஷானாவுக்கு மன்னிப்புக் கொடுக்க மறுத்துவிட்டார். அதன் முடிவு ரிஷானாவின் தலை வெட்டப்பட்டது.

இங்கு மன்னிப்பு வழங்க மறுத்த மனித வன்மம் பற்றி நாம் ஆராயவில்லை. மாறாக பாதிப்படைந்தவரே குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்க முடியும் என்ற உயர்ந்த சட்ட விதிமுறை பற்றி ஒரு கணம் சிந்திக்கலாம்.

குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கும் போது அந்தத் தண்டனைக்கு மன்னிப்பு வழங்கக் கூடிய அதிகாரம் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானது.

எனினும் எங்கள் நாட்டில் ஜனாதிபதி நினைத்தால் எந்தக் குற்றவாளிக்கும் மன்னிப்பு வழங்க முடியும். அந்த அதிகாரத்தின் கீழ்த்தான் முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது; ஷிராணிக்கு மீண்டும் பதவியேற்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது.

அதேநேரம், விளக்கம் விசாரணை இன்றி சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளுக்கு இதுவரை மன்னிப்பு வழங்கப்படவில்லை. இங்குதான் அதிகாரம் துஷ்பிரயோகத்திற்கு உட்படுகின்றது.

சரத் பொன்சேகாவுக்கு மன்னிப்பு வழங்கப்பட்ட வேகம் தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்தில் மந்தமடைந்து போயிற்று.

இந்த நிலைமையில் வன்னியில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை அவசியம் என்ற தீர்மானம் ஜெனிவாவில் நிறைவேறிய போதிலும் அந்தத் தீர்மானம் ஜனாதிபதி மைத்திரியின் ஆட்சியிலும் நலினப்படுத்தப்படுகிறது. இலங்கை அரசின் முக்கியஸ்தர்கள் போர்க்குற்றம் தொடர்பில் உள்ளக விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கூறுகின்றனர்.

அதேநேரம் போர்க்குற்ற விசாரணை அறிக்கையை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிப்பதிலும் பிற்போடல் நடந்துள்ளது.

வன்னிப் போரில் பாதிப்படைந்தவர்கள் தமிழர்கள். மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை அரசு வன்னியில் நடத்திய கொடும் போரில் திட்டமிட்ட தமிழின அழிப்பு அரங்கேறியது.

நிலைமை இதுவாக இருக்கும் போது போர்க்குற்ற விசாரணையை சர்வதேச ரீதியிலா? அல்லது உள்ளக மட்டத்திலா? நடத்துவதென்பதை தீர்மானிக்கும் அதிகாரம் போரில் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கே உண்டு. ஆனால் போர்க்குற்ற விசாரணை உள்ளக மட்டத்தில் நடத்தப்படும் என இன அழிப்புச் செய்த தரப்பு சொல்கிறது எனில் நீதியை எங்ஙனம் நிலைநாட்ட முடியும்?

இதேபோல் போர்க்குற்ற விசாரணை அறிக்கையை பிற்போடுவது என்ற விடயத்தில் ஈழத்தமிழர்களின் கருத்துப் பதிவு செய்யப்பட்டதா? என்ற கேள்விக்கு இல்லை என்பது பதிலாயின் ஐ.நா சபையும் பக்கச் சார்பு கொண்டதா? என்ற சந்தேகம் எழுவது தவிர்க்க முடியாததாகி விடும்.

எனவே போர்க்குற்றம் தொடர்பில் எந்த முடிவை எடுப்பதாக இருந்தாலும் அது விடயத்தில் தீர்மானம் எடுக்கும் தகைமை போரினால் பாதிப்படைந்த தமிழ் மக்களுக்கே உண்டு. ஆக, இது விடயத்தில் வேறு எவரும் கதைப்பது பொருத்தப்பாடாகாது.

## விலைக்குறைப்பு பொருட்கள் வர்த்தமானியில் பிரசுரம்

(கொழும்பு)

புதிய அரசின் இடைக்கால வரவு - செலவு திட்டத்தில் விலை குறைப்பு செய்யப்பட்ட சீமெந்து உட்பட அனைத்து அத்தியாவசிய பொருள்களின் விலைகளையும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் வர்த்தமானியில் பிரசுரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி நேற்றைய வர்த்தமானியில் இவை உள்வாங்கப்பட்டுள்ளது. இதற்கமைய அனைத்து விலை குறைப்பு செய்யப்பட்ட பொருள்களும் அவற்றின் தற்போதய விலைகளுடன் வர்த்தமானியில் உள்வாங்கப்படுமென கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சில் அது தொடர்பான அதிகாரிகளுடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அவ்வகையில் இலங்கையில் நுகர்வேர் அதிகாரசபையினால் பொருள்களுக்கு வழங்கப்பட்டுள்ள விலை, 50 கிலோ கிராம் சீமெந்து பையொன்று 840 ரூபாய் விலையிலும், 450 கிராம் பாண் 54 ரூபாயாகவும், சீனி ஒரு கிலோ 90 ரூபாயாகவும், 400 கிராம்பால் மா பைக்கற்றின் விலை 325 ரூபாயாகவும் ஒரு கிலோ பால் மா பைக்கற்றின் விலை 810 ரூபாயாகவும், சஸ்டஜன் 400 கிராம் 1500 ரூபாயாகவும், பயறு ஒரு கிலோ 280 ரூபாயாக வும், ரின்களில் அடைக்கப்பட்ட மீன் 400 கிராம் 260 ரூபாயாகவும், விலை கள் குறைக்கப்பட்டு அவைகளின் தற்போதய விலைகளும் வர்த்த மானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## செயற்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த யாழ்.மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது.

இக் கூட்டத்திற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமென யாழ்.அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-3)

## இல்லமெய்வல்லுநர் போட்டிகள் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.செங்குந்த இந்துக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி இன்று சனிக்கிழமை பி.ப 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் அதிபர் க.தருமகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நில அளவையாளரும் கல்லூரியின் பழைய மாணவனுமான ந.கேதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (இ-3)

✵✵✵✵✵✵

(சுதுமலை)

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் நிகழ்வு இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மகளிர் விவகார பிரதி அமைச்சர் கௌரவ விஜயகலா மகேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜாவும் மற்றும் விருந்தினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

## ஸ்ரீ அம்மா பகவானின் மகா வாக்கியங்கள்



### தெளிவு

நீங்கள் எதை நாடுகின்றீர்களோ அதில் தெளிவு வேண்டும். தெளிவு என்பது ஹிருதேயம் சம்பந்தப்பட்டது. மனது சம்பந்தப்பட்டது அல்ல. யோசித்தால் தெளிவு பிறக்காது. நிறைவேறாத ஆசைகள் அல்லது தீர்வு காணமுடியாத பிரச்சினைகள் நம்முள் புதைந்து கிடக்கலாம். அவைகளுள் இந்தக் குறிப்பிட்ட ஒன்று நடந்தால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக இருக்கும்என்று ஹிருதயம்உணரும் போது அது நிறைவேறும். அந்த ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்கும்போது உங்கள் மனதில் ஏதோ ஒரு தடுமாற்றம் அல்லது இதற்கு நான் தகுதியானவனா என்று மனம் குழம்பியும் ஒரு சலிப்பு நிலையும் உருவானால் அது நிறைவேறுவது கடினம்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத் துளிகள்

### உறவுக்கு கைகொடுங்கள்



❖ ஒழுக்கம் கொண்டவன் பேசும் ஒவ்வொரு சொல்லிற்கும் சக்தியுண்டு. அதனால், உலகத்திற்கு நன்மை உண்டாகும்.

❖ ஒவ்வொரு மனிதனையும் சகோதரனாக கருதி அன்பு செலுத்துங்கள். இதுவே சிறந்த வழிபாடு.

❖ நம்முடன் உறவு கொள்ள நினைப்போருக்கு கை கொடுங்கள். யாரிடமும் வேற்றுமை வேண்டாம்.

❖ எப்போதும் உள்ளத்தில் மலர்ச்சியும், முகத்தில் இனிமையும் நிறைந்திருக்கட்டும்.

❖ தன்னடக்கத்தை கற்றுக் கொண்டவன் எதற்கும் வசப்படமாட்டான். சுதந்திரமாக வாழ்வான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டிம் சவுத்தியின் புயலில் சிக்கி சின்னாபின்னமானது இங்கிலாந்து



இங்கிலாந்து அணிக்கு எதிரான உலகக்கிண்ண லீக் ஆட்டத்தில் நியூசிலாந்து 8 விக் கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

உலகக்கிண்ணத் தொடரின் ஒன்பதாவது லீக் போட்டி நேற்று வெலிங்டனில் ஆரம்பமானது. இந்தப் போட்டியில் ஏ பிரிவிலுள்ள இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்து. இதன்படி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்தது.

அவ்வணி 33 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 123 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. இங்கிலாந்து அணியில் ஜோ ரூட் மட்டும் அதிகபட்சமாக 46 ஓட்டங்கள் குவித்தார். இயன் பெல் (8), மொயீன் அலி (20), கேரி பேலன்ஸ் (10), மொர்கன் (17) ஆகியோர் சோபிக்கவில்லை.

மற்ற வீரர்கள் ஓர் இலக்க ஓட்டங்களில் ஆட்டமிழந்து ரசிகளுக்கு ஏமாற்றம் அளித்தனர்.


நியூசிலாந்து தரப்பில், சிறப்பாக பந்துவீசிய டிம் சவுத்தி 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெட்டைகைப்பற்றி சாதனை படைத்தார். பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அதிரடி ஆட்டம் காரணமாக, 12.1 ஓவர்களில் இரு விக்கெட்டினை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

அந்த அணியின்அணித தலைவர பிரன்டன் மக்கலம் அதிரடியாக துடுப்பெடுத்தாடி 25 பந்துகளில் 77 ஓட்டங்களை பெற்றார்.

மேலும் 18 பந்துகளில் அரை சதம கடந்து உலகசாதனையும் படைத்தார். குப்டில் (22), வில்லி யம்சன் (9), டெய்லர் (5) ஆகியோர் ஓரளவு ஓட்ட ங்கள் எடுத்திருந்தனர்.

7 விக்கெட்டுகளை எடுத்து இங்கிலாந்து அணியை சூறையாடிய நியூசிலாந்து வீரர் டிம் சவுத்தி ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார். (க)



## புதிய சாதனை படைத்த மக்கலம்

நியூசிலாந்து அணியின் அதிரடி துடுப்பாட்டக்காரர் பிரெண்டன் மக்கலம் அதிவேக அரைசதம் அடித்து உலகக்கிண்ணத் தொடரில் புதிய சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்து அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில் நியூசிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் 226 பந்துகளை மிச்சம் வைத்து இமாலய வெற்றியை பெற்றது.

இந்தப் போட்டியில் 25 பந்துகளில் 77 ஓட்டங்களை அடித்து பேய் ஆட்டம் ஆடினார் மக்கலம். முன்னதாக தனது அரைசதத்தை 18 பந்துகளில நிறைவு செய்தார். இதன் மூலம் உலகக்கிண்ணத் தொடரில் குறைந்த பந்தில் அரைசதம் அடித்த முதல் வீரர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

இவர் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண போட்டியின் போது கனடாவுக்கு எதிராக, 24 பந்துகளில் அரைசதம் கடந்தார். இதுதான் இதுவரையில் உலகக்கிண்ணத்தில் சாதனையாக இருந்தது.

ஆனால் நேற்று 18 ஆவது பந்தை சிக்சருக்கு தூக்கி அரைசதம் கடந்த மெக்கலம், தனது சாதனையை தானே முறியடித்தார். இதைத்தொடர்ந்து 4 சிக்சர்களை வரிசையாக தூக்கி பார்வையாளர்களையும் பரவசப்படுத்தினார். (க)

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

இங்கிலாந்து (33.2 ஓவர்கள்) 123

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| ஜே ரூட் | 46 | 70 |
| மெயின் அலி | 20 | 15 |
| மோர்கன் | 17 | 41 |
| போலன்ஸ் | 10 | 26 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

துடுப்பாட்டம்

நியூசிலாந்து (12.2 ஓவர்கள்) 125/2

| வீரர் | ஓட்டங்கள் | பந்துகள் |
|---|---|---|
| மக்கலம் | 77 | 25 |
| மார்டீன் குப்தில் | 22 | 22 |
| வில்லியம்சன் | 09 | 22 |
| டெய்லர் | 05 | 05 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

நியூசிலாந்து பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| சவுத்தி | 09 | 0 | 33 | 7 |
| போல்ட் | 10 | 2 | 32 | 1 |
| மில்லியன் | 5.2 | 1 | 25 | 1 |
| வெட்டோரி | 07 | 0 | 19 | 1 |

### ஐ.சி.சி உலகக் கிண்ண கிரிக்கெட் 2015

இங்கிலாந்து பந்துவீச்சு

| வீரர் | ஓவர் | மெடின் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|---|
| கிறிஸ் வோக்ஸ் | 03 | 1 | 08 | 2 |
| அண்டர்சன் | 05 | 0 | 37 | 0 |
| பிராடு | 2.2 | 0 | 27 | 0 |
| ஸ்மீவன் பின் | 02 | 0 | 49 | 0 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகர் பகுதியில் சீனாவுக்கு நிலமா?

## அரசு ஆராய்வு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுக நகரில், சீனாவுக்கு ஒரு பகுதி நிலத்தை சொந்தமாக வழங்குவது தொடர்பாக கடந்த அரசாங்கத்தினால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை மீளாய்வு செய்யப்படுவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

1.5 பில்லியன் டொலர் செலவில் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரில் சீனாவுக்கு நிலத்தை வழங்கினால், அந்த நிலப்பகுதியை சீனா தனது கடற்படை செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தக் கூடும் என்ற கவலையே மீளாய்வு செய்யப்படுவதாக காரணமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்புத் துறைநகரத்தில் 108 ஹெக்ரெயர் நிலப்பரப்பை சீனாவின் தொடர்பாடல் கட்டுமான நிறுவனமே வைத்துக் கொள்ள மகிந்த அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருந்தது.

இதில், 20 ஹெக்ரெயரை சீனா சொந்தமாக வைத்திருக்கவும், ஏனைய நிலப்பரப்பை 99 ஆண்டு குத்தகை அடிப்படையில் வைத்துக் கொள்ளவும் இணக்கம் காணப்பட்டிருந்தது.

நிலத்தை சொந்தமாக வழங்குவதில்லை என்றும், அந்த நிலப்பகுதி இலங்கையின் சட்டங்களுக்குக் கீழ் நிர்வகிக்கப்படுவதெனவும் புதிய பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளதாக, வெளிநாட்டு செய்தியாளர் சங்கத்தில் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சீன அரசாங்கம் இலங்கையின் உட்கட்டுமான அபிவிருத்திக்கு சீனா முக்கிய பங்களிப்புச் செய்துள்ளது. ஆனால், கொழும்பு ஒரு குறுநில அரசாக மாறுவதற்கு விட முடியாது. நீர்மூழ்கிகள் குறித்து தீவிரமான சந்தேகங்கள் உள்ளன.

கொழும்புத் துறைமுகமும், ,துறைமுக நகரமும், சீன அரசாங்கத்தின் இராணுவப் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டால், அது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கடுமையான பிரச்சினையை ஏற்படுத்தும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-11)

# இயந்திரங்களை பராமரிக்க நீதிமன்றம் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அனல் மின்நிலையத்தின் இயந்திரங்களை பராமரிக்குமாறு யாழ்.மேல் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

குடி நீரில் கழிவு எண்ணெய் கலப்பு தொடர்பில் சுன்னாகம் அனல் மின் நிலையத்திற்கு எதிராக அதனை மூடுமாறு கோரி தொடரப்பட்ட வழக்கு நேற்றைய தினம் யாழ்.மேல் நீதிமன்றத்தில் நீதவான் திருமதி சிவபாத சுந்தரம் தலைமையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதவான் மல்லாகம் நீதிமன்றத்தின் பதிவாளர், மக்கள் சார்பில் வருகை தந்த பொறியியலாளர், இலங்கை மின்சார சபையின் பொறியியலாளர் மற்றும் சுற்றுச் சூழல் அதிகார சபையின் பொறியியலாளர் ஆகியோரின் மேற்பார்வையில் சுன் னாகம் அனல் மின் நிலையத்தின் இயந்திரங்களை மேற்பார்வை செய்யுமாறு உத்தரவிட்டார்.

இவ் வழக்கினை பொது மக்கள் சார்பில் சட்டத்தரணி ஜே.ஜெயரூபன் மற்றும் வி. மணிவண்ணன் ஆகியோர் வாதிட்டனர்.

மேலும் இது தொடர்பில் மல்லாகம் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எவ்வித மாற்றமுமின்றி உள்ளது. (எ-4,11)

# ஐ.நாவுக்கான புதிய தூதுவராக அஜித் குமாரை நியமித்தது இந்தியா

ஐ.நாவுக்கான இந்தியாவின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாகவும் தூதுவராகவும் அஜித் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜெனிவாவில் இந்தியப் பிரதிநிதியாக இரு ந்த திலிப் சின்ஹா கடந்த டிசம்பர் மாதம் ஓய்வு பெற்றார். இதனையடுத்து அப்பதவிக்கு எவரும் நியமிக்கப்படாமல் வெற்றிடமாகவே இருந்து வந்தது.

இதனையடுத்து, இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் சையத் அக்பருதீன் குறித்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகின.

ஆனால் தற்போது இந்த முடிவுகள் மாற்றப்பட்டு, அமெரிக்காவின் அட்லான்டா நகரில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் கொன்சூல் ஜெனரலாகப் பணியாற்றி வரும் அஜித் குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர், ஐ.நா மனித உரிமைகள் பேரவையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஜெனிவாவுக்கான தூதுவர் பதவியை விரைவில் பொறுப்பேற்றுக் கொள்வார் என்று இந்திய வெளிவிவகார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

முன்னாள் தூதுவர் திலிப் சின்ஹா, இலங்கைக்கு எதிராக அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்ட பிரேரணையை நீர்த்துப் போகச் செய்வதில் முக்கிய பங்காற்றியதாக விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இலங்கை அணியை குறைத்து மதிப்பிட வேண்டாம்-முரளிதரன்

நடப்பு உலகக்கிண்ணத் தொடரில் இலங்கை அணியை யாரும் குறைத்து மதிப்பிட வேண்டாம் என்று அந்த அணியின் முன்னாள் ஜாம்பவான் முத்தையா முரளிதரன் கூறியுள்ளார்.

உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் லீக் ஆட்டத்தில் இலங்கை அணி தோல்வியடைந்தது.

இந்நிலையில் இது குறித்து முத்தையா முரளிதரன் கருத்து தெரிவிக்கையில், நியூசிலாந்து அணிக்கு எதிரான முதல் தோல்வியால் பிரச்சினை இல்லை. அவர்கள் பலம் வாய்ந்த அணி.

அடுத்து வரப் போகும் போட்டிகளில் வெற்றி பெற்று இலங்கை அணி காலிறுதிக்கு தகுதி பெற வேண்டும்.

இலங்கை அணி கடந்த 20 ஆண்டுகளில் அதிக ஆதிக்கம் செலுத்தி இருக்கிறது என்பதை மறந்து விடக் கூடாது. எனவே இலங்கை அணியை யாரும் குறைத்து மதிப்பிட்டு விட வேண்டாம் என்று கூறியுள்ளார். (க)



## இந்தியாவை எதிர்கொள்ளத் தயார்-டுமினி

இந்திய அணி தனது 2-வது 'லீக்' ஆட்டத்தில் தென்னாபிரிக்காவை நாளை சந்திக்கிறது.

இந்தப்போட்டி குறித்து தென்னாபிரிக்கா வீரர் டுமினி கூறும்போது, சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் பெற்ற வெற்றியால் எங்களுக்கு தன்னம்பிக்கை அதிகரித்துள்ளது.

இந்தியா அணியை எதிர்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம். அணி இக்கட்டான நிலையில் இருக்கும்போது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது மகிழ்ச்சி அளிக்கிறது.

இந்தியாவுக்கு எதிராக நானும், டேவிட் மில்லரும் மீண்டும் திறமையை வெளிப்படுத்துவோம் என்று நம்புகிறேன் என்றார். (க)

# அரைஇறுதியில் இந்தியா தோற்கும்; வாட்ஸ் அப் கணிப்புகளால் பரபரப்பு

உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி தனது முதல் லீக் போட்டியில் பாகிஸ்தானை வீழ்த்தியது. அடுத்து நாளை தென்னாபிரிக்க அணியுடன் மோத உள்ளது இந்த போட்டியை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து உள்ளனர். இந்த நிலையில் நேற்று இந்திய அணி அரையிறுதி போட்டியில் தோற்கும் என வாட்ஸ்அப்பில் ஒரு வதந்தி வலம் வருகிறது.

அந்த வாட்ஸ்அப் வதந்தியில் கூறப்பட்டு இருப்பதாவது,

அவுஸ்திரேலியா- நியூசிலாந்தில் நடந்து வரும் உலகக்கோப்பை போட்டிகள் ஏற்கெனவே பிக்ஸ் செய்யப்பட்டு விட்டன. தற்போது கோப்பையை வைத்துள்ள இந்தியாவுக்கும் கோப்பை கிடைக்காது, முன்னாள் சம்பியன்களுக்கும் கிடைக்காது. மாறாக தென்னாபிரிக்காதான் புதிய சம்பியனாகும் என்று இதில் கூறப்பட்டுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடக்கும் இந்தியா, தென்னாபிரிக்க போட்டியில் இந்தியா தோற்கும் என்றும் இந்த செய்தி கூறுகிறது. மேலும சிம்பாப்வே அணியும் இந்தியாவை தோற்கடிக்கும் என்று கூறப்பட்டு உள்ளது.

அதாவது, வரும் அனைத்து கிரிக்கெட் போட்டிகள் குறித்து துல்லியமான முடிவை அது வெளியிட்டு உள்ளது. உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தி தென்னாபிரிக்கா கோப்பையை கைப்பற்றும்.

காலிறுதியில் வெற்றி பெறும் இந்தியா, அரையிறுதியில் அவுஸ்திரேலியாவிடம் தோல்வி அடையும். இதுமட்டும் அல்லாமல், அனைத்து போட்டிகளின் முடிவுகளும் இதில் கூறப்பட்டுள்ளது. ஏற்கெனவே கிரிக்கெட் சூதாட்டம், மேட்ச் பிக்ஸிங் என பல்வேறு சர்ச்சைகளில் சிக்கியுள்ள கிரிக்கெட் போட்டிக்கு இது மிகப் பேரிய சோதனையாகும்.

இந்த உலகக்கோப்பை கிரிக்கெட் தொடரில் இதுவரை நடந்து முடிந்த போட்டிகள் குறித்து அதில் கூறப்பட்டிருக்கும் 9 தகவல்களும் உண்மையாகவே நடந்து உள்ளது. மேலும் இந்த தொடரின் அனைத்துப் போட்டிகளின் முடிவுகளையும் அதில் கணித்து கூறப்பட்டு உள்ளது.

இதனால் இந்த கருத்து கணிப்பு போல் போட்டி முடிவு அமைந்தால் ஐ.சி.சி.க்கு பெரிய தலைவலி ஏற்படும். (க)

# இந்தியா கோலியை மட்டும் நம்பியில்லை —கங்குலி தெரிவிப்பு



உலககோப்பையில் விளையாடி வரும் இந்திய அணி விராட் கோலியை மட்டும் நம்பி இல்லை. அணியில் பல மேட்ச் வின்னர்கள் இருக்கிறார்கள். குறிப்பாக ரோகித் சர்மா, 3 நாடுகள் கிரிக்கெட்டில அவுஸ்திரேலியாவுக்கு எதிராக சதம் அடித்து இருந்தார். சுரேஷ் ரெய்னா, தோனி, தவான் போன்றோரும் உள்ளனர்.

இந்தியா பந்துவீச்சில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக கடைசி கட்ட பந்துவீச்சில் முன்னேற்றம் காண்பது அவசியம். அரை இறுதிக்கு இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா ஆகிய அணிகள் தகுதி பெறும். (க)

# கால்பந்தில் கலக்கும் இந்திய அணி



உலக கோப்பை பி பிரிவில் இந்திய அணி தனது 2வது லீக் ஆட்டத்தில் பலம் வாய்ந்த தென்னாபிரிக்காவுடன் நாளை மோத உள்ளது. ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் இந்த ஆட்டம் இந்திய அணியின் உண்மையான பலத்தை வெளிக்காட்டுவதாக இருக்கும். முக்கியமான இந்த போட்டிக்காக இந்திய அணி வீரர்கள் மெல்பேர்னில் தீவிரமாகப் பயிற்சி செய்து வருகின்றனர். செயிண்ட் கில்டா கிரிக்கெட் மைதானத்தில் திரண்டவர்கள், வித்தியாசமாக இருக்கட்டுமே என்று கால்பந்து ஆட முடிவு செய்தனர். தலா 9 பேர் கொண்ட இரண்டு அணி பிரிக்கப்பட்டது. தோனி, கோஹ்லி, மோகித், பின்னி, ரோகித், அக்சர், பயிற்சியாளர் சஞ்சய் பாங்கர் ஒரு அணியாகவும், ராயுடு தவான், ரெய்னா, அஷ்வின், ஜடேஜா, ரகானே, உமேஷ், குல்கர்னி, பயிற்சியாளர் சுதர்ஷன் இன்னொரு அணியாகவும் களமிறங்கினர்.

பந்தை அபாரமாக கடத்திச் சென்ற தோனி, கோஹ்லி, பின்னி கூட்டணி கோல் மழை பொழிந்தது. எதிரணியில் ராயுடு மட்டுமே சிறப்பாக விளையாடினார். மற்ற வீரர்கள் ஒப்புக்கு ஓடினார்கள். ஒரு மணி நேரம் நடந்த இந்த போட்டியில் ராயுடு அணி தாக்குப்பிடிக்க முடியாமல் ஒதுங்கிக் கொண்டது. வழக்கமான கிரிக்கெட் வலைப் பயிற்சியில் இருந்து மாறுபட்டு கொஞ்ச நேரம் கால்பந்து விளையாடியது உடலுக்கும் மனதுக்கும் உற்சாகமளித்ததாக இந்திய வீரர்கள் தெரிவித்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுத்தேர்...

குறிப்பிட்டுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது முதல் அரசாங்கம் 100 நாள் வேலைத்திட்டம் குறித்தே கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது.

அரசாங்கத்தின் நூறு நாள் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

100 நாள் திட்டத்தை முன்னெடுக்க பாராளுமன்றம் போதியளவு ஒத்துழைப்பு வழங்காவிட்டால், பாராளுமன்றை கலைத்து பொதுத் தேர்தலை நடத்த அரசாங்கம் தயங்காது என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)


**விற்பனைக்கு**

சங்குவேலியில் காணி
விற்பனைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: 0771728141
(C-213)

**தேவை**

கிளிசறியா கதியால் மொத்தமாக
கொள்வனவு செய்யப்படும்
தொடர்புகளுக்கு:-
0776549303
(9573)

**தேவை**

துறைமுகத்தில் 20-40 அடி
கென்டெயினர்களுக்கு
சாரதிகள்/உதவியாட்கள் தேவை.
உதவியாட்களுக்கு
பாரமான வேலை இல்லை.
6 மாதங்களின் பின்னர்
சாரதியாகக்கூடிய இயலுமையுடன்
42,000/= சம்பளம்.
கனரக/ மென் சாரதிகளும் தேவை.
தொடர்புகளுக்கு: 0772926538
(9565)


## கைதிகளின் விடுதலை...

நாடாளுமன்றில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரின் கேள்விக்குப் பதிலளித்தபோதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முருகேசு சந்திரகுமார் தனது உரையில், "தமிழ் அரசியல் கைதிகள் நீண்டகாலமாக விடுதலை செய்யப்படாமல் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிக்குமாறு நான் கடந்த காலங்களில் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளேன்.

இந்நிலையில், தற்போதைய அரசு, தமிழ் அரசியல் கைதிகளை எப்போது விடுவிக்கும்? என்று கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவரின் கேள்விக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ, பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் 182 தமிழ்க் கைதிகள் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக ஆராய விசேட குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. இந்தக் கைதிகள் தொடர்பாக மேற்படி குழு ஆராய்ந்து மேற்கொள்ளும் தீர்மானத்துக்கமைய குற்றச் சாட்டுக்கள் நிரூபிக்கப்படாதவர்கள் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் விடுதலை செய்யப்படுவர் என்று தெரிவித்தார். (எ-11)

## ஐ.நா.அறிக்...

வுள்ளது.

இவற்றோடு வடக்கு கிழக்கில் இராணுவம் அபகரித்து வைத்துள்ள தமிழ் மக்களின்காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், மீள்குடியேற்றம், போரினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களிற்கு உதவித்திட்டம் போன்றனவும் குறித்த ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்படவுள்ளது.

யாழ் பஸ் நிலையம் முன்பாக காலை 10 மணியளவில் ஆரம்பமாகும் இவ் ஆர்ப்பாட்டம் தொடர்ந்து இரண்டு மணித்தியாலம் நடைபெறவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்பவர்கள் தமது முகங்களை கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு எதிர்ப்பு காட்டவுள்ளனர்.

ஐ.நா விசாரணையை வலியுறுத்தியும் ஈழத்தில் நடைபெற்ற அநீதிகளுக்கு நீதி கோரி முன்னெடுக்கப்படுகின்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் அணி திரண்டு போராட வருமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (எ-4)

## சர்வதேச...

மாநாட்டில் கருத்துவெளியிட்ட ஜப்பானியத் தூதுவர், இலங்கை யுடன் பல தசாப்தகாலமாக ஜப்பான் நல்லுறவைக் கொண்டிருப்பதாக தெரிவித்ததுடன் யுத்தம் இடம்பெற்ற போதும் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் இலங்கைக்கு ஜப்பான் விரிவான உதவிகளை வழங்கியதாக சுட்டிக்காட்டினார்.

வித்தியாசமான தரப்பினருக்கிடையில் நல்லிணக்கத்தையும் பேச்சுகளையும் ஜப்பான் ஊக்குவிக்கின்றது.

புதிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் மிகவும் சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளன எனக் குறிப்பிட்ட ஜப்பானியத் தூதுவர், இலங்கைக்கு நல்லிணக்கத்தை ஏற்படுத்த இன்னமும் கால அவகாசம் தேவைப்படுவதாக குறிப்பிட்டதுடன் புதிய அரசு இன்னமும் சில மறுசீரமைப்புக்களை மேற்கொண்டு வித்தியாசமான தரப்பினருடன் பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார். (எ-11)

## இராணுவத்...

இராணுவத்தின் 21 ஆவது தளபதியாக இவர் நியமனம் பெறுகிறார். இதுவரை இராணுவத் தளபதியாக இருந்த லெப்டினன்ட் ஜெனரல் தயா ரத்நாயக்கவுக்கு பதிலாக இவர் நியமனம் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை இராணுவத்தில் 36 வருட கால சேவையை பூர்த்தி செய்துள்ள மேஜர் ஜெனரல் கிரிசாந்த த சில்வா 2013 ஓகஸ்ட் மாதம் முதல் 2014 மே மாதம் வரை இலங்கை இராணுவத்தில் பதவி நிலை பிரதானியாக செயலாற்றினார்.

இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையணியில் படைத் தலைவராகவும் செயலாற்றிய அவர் கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவராவார். (எ-11)

## ஜெனிவா...

வுள்ளனர்.

இந்த விஜயத்தின் போது ஐ.நா. மனித உரிமைக் கவுன்ஸிலின் உயர்ஸ்தானிகர் சையத் அல் ஹுசைனை வெளிவிவகார அமைச்சர் சந்திக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

## சர்வதேச விசா...

கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஆரம்பத்திலிருந்தே நாம் உள்ளக விசாரணையை நடத்துவதற்கு உறுதியளித்திருந்தோம். எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இதனையே நாம் குறிப்பிட்டிருந்தோம்.

எமது விடயத்தில் சர்வதேச விசாரணையை நாம் ஏற்கப்போவதில்லை. இதே நிலைப்பாட்டையே இந்தியாவும் எடுத்துள்ளது. இந்தியாவும் எம்முடன் இருக்கும் என்பது எமக்குத் தெரியும்.

நாம் இதே நிலைப்பாட்டையே தற்போது பேணுகின்றோம். எமது வெளிவிவகார அமைச்சர் தெட்டத்தெளிவாக இதனை அமெரிக்காவிடமும் ஐ.நாவிடமும் தெரியப்படுத்தியுள்ளார். இறுதியில் அவர்களும் இதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இது இலங்கைக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

அவர்களும் உள்ளக விசாரணைக்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

எனவே இலங்கையால் ஏற்றுக்கொள்ளக்கூடியதொரு உள்நாட்டு விசாரணை அறிக்கையை செய்ய முடியுமா என்பதைப் பார்ப்பதற்காகவே ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அறிக்கை சமர்பிக்கப்படுவதை ஆறு மாத காலத்திற்கு ஒத்திவைத்துள்ளனர்.

அந்தவகையில் சர்வதேச தராதரத்திற்கு அமைவாக அதனைச் செய்ய வேண்டியது எமது கடமையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## முன்னாள் ஜனாதிபதி...

ஆஜராகும்படி உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

பிரதம நீதியரசர் கே.சிறிபவன், நீதியரசர்களான பிரியசாத் டெப், ஈவா வனசுந்தர தலைமையிலான நீதியரசர்களடங்கிய குழுவே இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

முன்னிலை சோசலிசக் கட்சியின் தலைவர் துமிந்த நாகமுவ தாக்கல் செய்த குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மனுவின் அடிப்படையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது நாட்டின் 25 மாவட்டங்களிலும் இராணுவ படைகளை குவித்து குழப்ப நிலையை உருவாக்க முனைந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இம் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இது அரசியலமைப்பு சாசனத்தின்படி அடிப்படை உரிமை மீறல் செயற்பாடாகும் எனவும் அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த மனுவை பரிசீலனைக்கு உட்படுத்திய போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (எ-11)


**V2 Travels and Tours**

அனைத்து நாடுகளிற்குமான விமானப்பயணச்சீட்டுகள்
குறைந்த கட்டணத்தில் முற்பணமின்றி உங்கள் இல்லத்திற்கே பயணச்சீட்டுக்கள் கொண்டுவந்து தருகின்றோம்
அனைத்து நாடுகளிற்குமான விசா ஆலோசனைகள், online, விண்ணப்பப்படிவங்கள், நிராகரிக்கப்பட்ட -Rejected visas துறைசார், சட்டவல்லுனர்களின் உதவியுடன் செய்து தரப்படும்
வெளிநாட்டிலிருந்து இலங்கை வருபவர்களின் இலங்கை வீசா நீட்டிப்பு கொழும்பு செல்லவேண்டிய தேவையின்றி எமது அலுவலகங்களிலேயே செய்து தரப்படும்
கட்டார், மத்தியகிழக்கு நாடுகளுக்கு செல்வோருக்கான விமானப்பயணச்சீட்டுக்கள் மற்றும் பயண ஒழுங்குகள் மிகவும் குறைந்த கட்டணத்தில் செய்து தரப்படும்

யாழ்ப்பாணம்
49A சப்பல் லேன் - பொது நூலகம் முன்னால்
0773867257
நெல்லியடி
மூடக்காட்டுச்சந்தி
0776699892
வல்வெட்டித்துறை
பாழ்வீதி - வல்வெட்டி
0776697960
(C-223)

● மிகவும் குறைந்த கட்டணத்தில் 3 மாத பயிற்சியுடன் சர்வதேச அங்கீகாரமுடைய சான்றிதழ் மற்றும் வேலைவாய்ப்புக்கள்
● எம்முடன் இணைந்து தொழில்செய்ய விரும்பும் முகவர்கள், தனிநபர்கள் வரவேற்கப்படுகிறார்கள்

**வெளிவந்துவிட்டது**

க/பொ/த உயர்தர கடந்த கால வினா விடை (PastPaper)
2014 உள்ளடங்கலாக
✦ 15%- 20% வரை விசேட விலைக்கழிவு
**யாழ்.புத்தகசாலை**
305, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்)
T.P:0214545552, 0778349507
(C-226)

**STUDY IN EUROPE**

Latvia, Lithuania, German, Italy

தகைமைகள்:
- G.C.E O/L (6 பாடங்களில் சித்தி), G.C.E A/L (3 பாடங்களிலும் சித்தி) கட்டாயமானது.
- 19-24 வயதெல்லையை கொண்டிருத்தல் வேண்டும்.
- பட்டதாரிகளாயின் வயதெல்லை கிடையாது.
- ஆங்கிலத்தில் தேர்ச்சி அவசியம். (IELTS, City&Guilds A1,B1,Deutsch வகுப்புக்களும் நடைபெறுகின்றது)
- 100% விசா உத்தரவாதம்.

2 வாரத்திற்குள் 5 விசாக்கள்

'தகுதியான மாணவர்களுக்கு மட்டும்' எமது நிறுவனத்தினூடாக கல்லூரிக்கட்டணம் மற்றும் வங்கிக்கடன் ஏற்பாட்டுடன் விசா பெற்றுக்கொடுக்கப்படும் (நிபந்தனைக்கு அமைவாக)

WEC - விசா ஆலோசனை மையம்
0779265447, 0217200989
சாவகச்சேரி (இந்துக்கல்லூரிக்கு அருகே)
(8799)

எந்தவொரு நாட்டுக்குமான எந்தவகை விசா சேவையையும் வழங்கும்

SIKARAM
Education Abroad
Work, Migration & Visa Solutions

**மிகப்பிந்திய தெரிவுகள்**

**கனடா EXPRESS ENTRY VISA**
**தொழில்வாய்ப்புடன் நிரந்தர குடியுரிமை**

2015இல் 3 இலட்சம் பேருக்கு நிரந்தர குடியுரிமை வழங்கும் கனேடிய அரசாங்கத்தின் புதிய திட்டத்தில் கனேடிய குடிவரவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற முகவரின் ஊடாக
இணைந்துகொள்ள அரிய சந்தர்ப்பம்!

Degree/Diploma with Minimum One Year Work Experience உள்ளவர்களுக்கு: Doctors, Engineers, Accountants, Nurses, Pharmacists, University Lecturers, Teachers, Lawyers, IT Professionals, Photo/Videographers, Managers, Supervisors உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட தொழில்நிலைகள்

தொழிற்பயிற்சி/ அனுபவ சான்றிதழுடன் 2 வருட தொழில் அனுபவம் உள்ளவர்களுக்கு: Electricians, Mechanics, Plumbers, Carpenters, Masons, Contractors & Supervisors, Fishermen/Women, Chefs, Cooks, Bakers & Butchers உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட தொழில்நிலைகள்

பட்டம் / தொழில் அனுபவம் இல்லாதவர்களுக்கு: Accounting & Payroll Administration / Computerize Accounting / Health Office Administrator / Pharmacy Assistant / Community Service Worker / Personal Support Worker / Early Childcare Assistant / Food Service Worker

மற்றும் UK, Australia, New Zealand, Switzerland, Canada, Singapore, Malaysia உள்ளிட்ட எந்தவொரு நாட்டுக்குமான Student Visa / Work Visa / Migration / Visit Visa & Visa Rejection Appeals

மேலதிக விபரங்களுக்கு பாருங்கள்
(C-214)
www.sikaram.lk
FREE Assessment
info@sikaram.lk என்ற மின்னஞ்சலுக்கு உங்கள் சுயவிபரக்கோவையை அனுப்பி விண்ணப்பிப்பதற்கான தகுதியை அறிந்துகொள்ளுங்கள்.

முற்பதிவு அவசியம்
Sikaram (Pvt) Ltd.,
275-2/1 & 2/2, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வைத்தியசாலை பின்புறம்)
Tel: 0773616798 / 021 222 00 11


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.02.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org